பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஆவணி 05 புதன்கிழமை (21-08-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:267

## புலிகள் மீதான தடைநீக்கத்துக்கு மல்வத்தை பீடாதிபதி எதிர்ப்பு

கொழும்பு,ஓக.21

விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்படுவதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ள மல்வத்தைப் பீடத்தின் மகாநாயக்கர் வணக்கத்துக்குரிய ரிப்பொல ஸ்ரீவிபஸ்ஸி தேரர், அதுகுறித்து உரிய நடவடிக்கை எடுக்கத் தாம் பின்னிற்கப் போவதில்லை என்று தெரிவித்திருப்பதாகவும் இணையத்தளச் செய்தி ஒன்று தகவல் வெளியிட்டிருக்கின்றது.

தனது நிலைப்பாட்டை அமைச்சர் கரு ஜயசூரியமூலம் அரசுக்குத் தெட்டத்தெளிவாகத் தெரியப்படுத்தப்போவதாக பௌத்த சங்கங்களின் சம்மேளனத்தின் செயலாளர் கலகே புண்ணியவர்தனவிடம் மகாநாயக்கர் கூறியதாக அறிக்கை ஒன்று தெரிவித்தது.

இது ஆழ்ந்த கவலைக்குரிய விடயம் என்று குறிப்பிட்ட மகாநாயக்கர், பிரதமர் உட்பட அமைச்சர்கள் தம்மைச் சந்திக்கவரும் சமயங்களில் சந்திப்புக் குறித்துத் தமக்குச் சாதகமான விடயங்கள் மட்டும் ஊடகங்களில் வெளியிடப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்கின்றனர் என்றும் குற்றஞ்சாட்டினார்.

இத்தகைய நிலை துரதிஷ்டவசமானது என மகாநாயக்கர் குறிப்பிட்டார் என்று புண்ணியவர்த்தன தெரிவித்திருக்கிறார். (ம)

## தாய்லாந்துப் பேச்சுக்கள் செப்.16 அல்லது 17 இல்!

### நோர்வேக் குழு வெள்ளியன்று பாலாவுடன் சந்திப்பு

லண்டன்,ஓக.21

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான நேரடிப் பேச்சுக்கள் தாய்லாந்தில் பெரும்பாலும் செப்ரெம்பர் 16 அல்லது 17 ஆம் திகதி நடைபெறும் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அதற்கு முன்னர் பேச்சுக்கான பூர்வாங்க ஏற்பாடுகள், நடைமுறைகள் மற்றும் நிகழ்ச்சிநிரல் போன்றவை குறித்து ஆராய்ந்து முடிவு செய்வதற்காக நோர்வேயின் அனுசரணையாளர் குழு ஒன்று நாளைமறுதினம் லண்டனில் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்திக்கவிருக்கிறது.

நோர்வே வெளிவிவகார அமைச்சின் விசேட ஆலோசகர் எரிக்சொல்ஹெய்ம் தலைமையிலான அனுசரணையாளர் குழுவே பாலசிங்கத்தை வெள்ளியன்று சந்திக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பேச்சுக்கள் பெரும்பாலும் தாய்

(14ஆம் பக்கம் பார்க்க)

## அரசுக்கு பெரும்பான்மை இருக்கும்வரை

# நாடாளுமன்றக் கலைப்பு இல்லை

# ஜனாதிபதி எழுத்தில் உறுதியுரை

## சபாநாயகர் சபையில் அறிவிப்பு

கொழும்பு,ஓகஸ்ட்21

**தற்போதைய நாடாளுமன்றம் அதன் பதவிக்காலத்துக்கு முன்னர் கலைக்கப்படமாட்டாது என்பதற்கு எழுத்துமூலம் உறுதி வழங்கியிருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.**

**அது பற்றிய அறிவிப்பை நாடாளுமன்றத்தில் நேற்று வெளியிட்டார் சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா.**

தற்போது நியமிக்கப்பட்டுள்ள பிரதமரும் அவரது அமைச்சரவையும் நாடாளுமன்ற நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லக்கூடிய பெரும்பான்மையைக் கொண்டுள்ளதாகத் தமக்குத் தெரிகின்றது என்று குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி, அந்தப் பெரும்பான்மையை அரசுத் தரப்பு இழக்காத வகையிலும், அத்துடன் அத்தகைய நிலையில் தற்போதைய எம்பிக்களால் மாற்று அரசு ஒன்றை நிறுவுவது சாத்தியப்படாமல் போகும் பட்சத்திலுமன்றி, நாடாளுமன்றத்தைக் கலைப்பதில்லை என்று உறுதியளித்திருக்கின்றார்.

நாடாளுமன்றத்துக்கு செய்திகளை அனுப்புவதற்கு தமக்கு அரசமைப்பின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு

(13ஆம் பக்கம் பார்க்க)

## அரசும் எதிர்க்கட்சியும் பரஸ்பர புரிந்துணர்வுடன் நடக்கவேண்டும்

கொழும்பு,ஓக.21

நாட்டில் சமாதானம் நிலைபெற அரசும் எதிர்க்கட்சியும் பரஸ்பரம் புரிந்துணர்வுடன் பொறுப்புடன் நடந்து கொள்ளவேண்டும் என்று பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர் குழுவின் தலைவர் கெவின் பறொன் கேட்டுள்ளார்.

இலங்கைக்கு வருகைதந்துள்ள பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவினர் நேற்று பிரதமரையும் எதிர்க்கட்சித் தலைவரையும் சந்தித்துக் கலந்துரையாடிய சமயம் இக்கருத்தை வலியுறுத்தியுள்ளனர்.

இருவரையும் தனித்தனியாகச் சந்தித்து சமாதானமுயற்சிகள் தொடர்பாகக் கலந்துரையாடினர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## பொ.ஐ.முன்னணி எம்.பியை கைதுசெய்ய நீதிமன்று உத்தரவு

கொழும்பு,ஓக.21

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரான உபாலி குணரத்னவை கைதுசெய்யுமாறு கொழும்பு உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கொலன்னாவைப் பகுதியில் அரச அதிகாரி ஒருவரை அச்சுறுத்தியதாக இவர்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுத் தொடர்பான விசாரணை நேற்று கொழும்பு உயர்நீதிமன்றில் இடம்பெற்றபோது உபாலி குணரத்ன நீதிமன்றத்திற்கு சமுகமளிக்கத் தவறியமையாலேயே இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(ம-12)

## ஜனாதிபதியின் உறுதிமொழியை அரசாங்கம் நிராகரிக்கக்கூடும்

கொழும்பு,ஓக.21

நாடாளுமன்றக் கலைப்புத் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று நாடாளுமன்றத்துக்கு வழங்கிய எழுத்துமூல உறுதிமொழியை அரசு ஏற்றுக்கொள்ளாது என்று அறியப்படுகிறது. ஜனாதிபதி ஏற்கனவே வழங்கிய உறுதிமொழிகள் காற்றில் பறக்க விடப்பட்டதைக் காரணம் காட்டியே இந்த உறுதிமொழியை அரசு ஏற்றுக்கொள்ளாது விடும் என்று அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க ஜனாதிபதியின் உறுதிமொழி தொடர்பான அரசின் நிலைப்பாட்டை

(14ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு ஆரையம்பதியில்

## ஆயுதக்குழுவின் அச்சுறுத்தலால் புலிகளின் அலுவலகம் மூடப்பட்டது

மட்டக்களப்பு,ஓக.21

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவத்துடன் இணைந்து செயற்படும் ஆயுதக்குழு ஒன்றின் அச்சுறுத்தலை அடுத்து - விடுதலைப் புலிகள் ஆரையம்பதியில் உள்ள தமது அலுவலகத்தை மூடியதுடன் அந்தப் பகுதியில் அரசியல் நடவடிக்கைகளையும் இடைநிறுத்தியுள்ளனர்.

ரெலோ அமைப்பில் இருந்து நீக்கப்பட்டு தற்சமயம் தனிக்குழுவாகப் படையினருடன் இணைந்து செயற்பட்டு வரும் வரதன் குழுவே விடுதலைப் புலிகளுக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளது என்றும் -

தமது உறுப்பினரான தமிழ்டியான் என்பவரையும் ஆதரவாளரான செல்லத்தம்பி கமலநாதன் (வயது 34) என்பவரையும் கடந்த 16 ஆம் திகதி இந்தக் குழு தாக்கியுள்ளது என்றும் -

இந்தக் குழு தமது அரசியல் நடவடிக்கைகளுக்குத் தடையாக இருக்கின்றது என்றும் -

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் கௌசிகன் யோர்நிறுத்தக் கண

(14ஆம் பக்கம் பார்க்க)

## எம்.பிக்களுடன் தனித்தனியாக பேச்சு நடத்த ஜனாதிபதி முடிவு!

கொழும்பு,ஓக.21

ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்கும் அரசமைப்புத் திருத்தத்துக்கு பொதுமக்கள் ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் ஆதரவு வழங்க முன்வந்திருப்பதாக வெளிவந்துள்ள செய்திகளை அடுத்து -

முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் தனித்தனியாக ஜனாதிபதி பேச்சு நடத்த இருக்கிறார்.

தற்சமயம் லண்டன் சென்றுள்ள

(14ஆம் பக்கம் பார்க்க)

## தெல்லிப்பழை ஆஸ்பத்திரி, கூட.சங்கம்; நேற்று படையினரால் கையளிக்கப்பட்டன!

யாழ்ப்பாணம்,ஓக.21

தெல்லிப்பழை ஆஸ்பத்திரி, புற்றுநோய் சிகிச்சை நிலையம், தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம் ஆகியவற்றின் கட்டடங்கள் அந்தந்த நிறுவனங்களின் அதிகாரிகளிடம் யாழ்.மாவட்ட படைகளின் தளபதி மேஜர் ஜெனரல சரத் பொன்சேகாவால் கையளிக்கப்பட்டன.

நேற்று மாலை 4 மணிக்கு தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் நடந்த வைபவத்தில் வைத்து ஆஸ்பத்திரி, புற்றுநோய் சிகிச்சை நிலையம் ஆகியவற்றின் கட்டடங்களை யாழ்பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் செல்வி உமா சிவபாதசுந்தரத்திடம் பொன்சேகா கையளித்தார்.

இந்த நிகழ்வில் வலி. வடக்கு பிரதேச செயலர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல், தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி செல்வி

(14ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க பிரதி அமைச்சர் நாளை வருகிறார்?

யாழ்ப்பாணம்,ஓக.21

அமெரிக்க இராஜாங்க பிரதி அமைச்சர் ரிச்சாட் ஆர்மிரேஜ் நாளை வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வருகை தரவிருப்பதாக தெரியவருகின்றது.

குடாநாட்டில் அமெரிக்கா மேற்கொள்ளும் கண்ணி அகற்றும் பணிகளின் முன்னேற்றம் குறித்து அறிந்து கொள்ளவும் -

(14ஆம் பக்கம் பார்க்க)

# விளையாட்டு

## 17 வயதுக்குட்பட்டோர் கிரிக்கெட்

# யாழ்.மாவட்ட அணியிடம் திருமலை அணி படுதோல்வி!

யாழ்ப்பாணம்,ஓக.21

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை 17 வயதுக்குட்பட்ட, மாவட்ட அணிகளுக்கிடையில் நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் நேற்று தம்புள்ள சர்வதேச விளையாட்டரங்கில் நடந்த ஆட்டத்தில் திருகோணமலை அணி யாழ்மாவட்ட அணியிடம் படுதோல்வியடைந்தது.

யாழ்.மாவட்ட அணிக்கும் திருகோணமலை அணிக்கும் இடையில் நடந்த இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்மாவட்ட அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 241 ஓட்டங்களைப் பெற்றது.

யாழ்.அணி வீரர்களான மாகதன் 80 ஓட்டங்களையும் லொயிட் 59 ஓட்டங்களையும் பெற்றனர். ஜங்கரன் ஆட்டமிழக்காமல் 20 ஓட்டங்களையும் றொஹான், மதனராஜா, கிருஷ்ணகுமார் ஆகியோர் முறையே 18, 12,10 ஓட்டங்களையும் பெற்றனர்.

திருமலை அணி வீரர்களான மாயா 35 ஓட்டங்களுக்கு நான்கு விக்கெட்டுக்களையும் செந்தூரன் 28 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

அடுத்து துடுப்பெடுத்தாடக் களம் இறங்கிய திருகோணமலை அணி 26 ஓட்டங்களை மட்டுமே பெற்றுத் தனது சகல விக்கெட்டுக்களையும் இழந்து படுதோல்வியைத் தழுவிக் கொண்டது.

யாழ்.அணி வீரர்களான கிருஷ்ண சந்திரா 12 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் மதனராஜா 7 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் லொயிட் 2 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் ரஜீவ்குமார் 3 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

யாழ்.அணிக்கும் வவுனியா அணிக்கும் இடையிலான ஆட்டம் இன்று நாவல மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (ம-3)

## ஐ.சி.சி. சம்பியன் கிண்ணத் தொடர்:

# டிக்கெட் விற்பனை வெள்ளியன்று ஆரம்பம்

இலங்கையில் நடைபெறவுள்ள ஐ.சி.சி. சம்பியன் கிண்ணப் போட்டிகளை பார்வையிடுவதற்கான டிக்கெட் விற்பனை எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

டிக்கெட்டுகளுக்கான கட்டண விவரங்களை நேற்றுமுன்தினம் ஐ.சி.சி. அறிவித்தது. செப்ரெம்பர் 12 முதல் 30 ஆம் திகதிவரை ஆர்.பிரேமதாஸா மைதானத்திலும், எஸ்.எஸ்.ஸி. மைதானத்திலும் இப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளுக்கான டிக்கெட்டுகளை இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையிலும், கார்கில்ஸ் ஃபுட்சிட்டி நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம் என ஐ.சி.சி. ஊடக அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

கட்டண விவரம்:-

| பிரிவு | முதல்சுற்று | அரையிறுதி | இறுதிப்போட்டி |
|---|---|---|---|
| ஆசனமற்ற பகுதி | 20 ரூபா | 30 ரூபா | 50 ரூபா |
| பதிவுசெய்யப்படாதவை | 100 ரூபா | 300 ரூபா | 500 ரூபா |
| பதிவுசெய்யப்பட்டவை | 500 ரூபா | 1000 ரூபா | 2000 ரூபா |

# மொரோக்கோ தொடர் இறுதியாட்டம் இன்று

கொழும்பு,ஓக.21

மொரோக்கோவில் நடைபெற்று வரும் முக்கோண ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் இன்று நடைபெறுகின்றது. இலங்கை - தென்னாபிரிக்க அணிகள் மோதுகின்றன.

இத்தொடரில் ஏற்கனவே இந்த இரு அணிகளுக்கும் இடையில் நடைபெற்ற 2 ஆட்டங்களிலும் இலங்கை அணியே வெற்றிபெற்றது. இன்று நடைபெறும் இறுதிஆட்டத்தில் வெற்றிபெறும் அணி வெற்றிக்கிண்ணத்தையும் ஒரு லட்சத்து 50ஆயிரம் டொலர் பெறுமதியான காசோலையையும் பரிசாகப்பெறும்.

வட ஆபிரிக்க நாடொன்றில் நடைபெறும் முதலாவது சர்வதேச கிரிக்கெட் போட்டித்தொடர் இது என்பதால் வெற்றி பெறும் அணி குறித்து எதிர்பார்ப்பு நிலவுகின்றது.

ஏற்கனவே இரு தடவைகள் தென்னாபிரிக்க அணியை வென்றபோதும் இன்று நடைபெறும் இறுதி ஆட்டத்தில் அந்த அணியை வெற்றி கொள்வது இலகுவாக இருக்கப்போவதில்லை என்று இலங்கை அணித்தலைவர் சனத் ஜெயசூரியா தெரிவித்துள்ளார். "தென்னாபிரிக்காவை மீண்டும் ஒரு தடவை இலகுவாக வெற்றிபெறமுடியும் என்று நான் கருதவில்லை. இந்த ஆட்டம் மிகவும் சவாலானதாக இருக்கும்" - என்றார் அவர்.

அதேசமயம், "நாங்கள் எங்கோ பிழை விட்டுள்ளோம். அந்தப் பிழைகள் எங்குள்ளன என்பது குறித்து நாம் ஆராய்ந்து வருகிறோம். அவற்றைச் சரிசெய்துவிட்டால் இறுதிப் போட்டியில் நாம் வெற்றிபெற முடியாது என்று சொல்வதற்கு எந்தக் காரணத்தையும் கூறமுடியாது" - என்று கருத்துத் தெரிவித்தார் தென்னாபிரிக்க அணித் தலைவர் ஷோன் பொலக்.

வெளிநாடு ஒன்றில் நடைபெறும் ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் இலங்கை அணி வெற்றிபெற்று நீண்டகாலமாகின்றது என்பதனால் இன்றைய ஆட்டத்தில் அதன் வெற்றியை ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றனர். (ம)



நேற்றுமுன்தினம் நடைபெற்ற இலங்கை - தென்னாபிரிக்கா அணிகளிடையேயான ஆட்டத்தில் ஜக்கலிஸ் LBW முறையில் ஆட்டமிழந்தாரா என நடுவரிடம் கோரும் இலங்கை வீரர்.

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.21

வவுனியா மாவட்டத்தில் இருந்து யாழ்.வந்துள்ள வடதாரகை விளையாட்டுக் கழகத்திற்கும் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்திற்கும் இடையேயான கிரிக்கெட் போட்டி இன்று புதன் கிழமை பிற்பகல் 1 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (ம-ரி-86)

## கட்டடங்களை மீளக் கட்டியெழுப்பும்வரை

# வசாவிளான் வித்தியாலயத்தை சொந்த இடத்தில் இயக்கமுடியாது

## கல்விப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம்,ஓக.21

வசாவிளான் மகாவித்தியாலயத்தில் உள்ள சகல கட்டடங்களும் பலத்த சேதத்துக்கு உள்ளாகியுள்ளதால் உடனடியாக அங்கு பாடசாலையை இயக்க வாய்ப்பில்லை என்று வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளர் வீ.இராசையா தெரிவித்தார்.

கல்வித் திணைக்கள பொறியியலாளர்கள், தொழில்நுட்ப அதிகாரிகள் சகிதம் நேற்று வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்துக்குச் சென்ற அவர், அங்குள்ள கட்டடங்களின் நிலைமையை பார்வையிட்ட பின்னரே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தக் குழுவுடன் வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் ஆர்.சுந்தரராஜாவும் சென்றிருந்தார்.

அங்குள்ள நிலைகுறித்து பணிப்பாளர் மேலும் தெரிவித்ததாவது:-

அங்குள்ள சகல கட்டடங்களும் சேதமடைந்த நிலையில் உள்ளன. வித்தியாலயத்தில் இருந்த மாணவர்கள் விடுதி, இருந்த இடமே தெரியாதவாறு அழிக்கப்பட்டுள்ளது. மற்றும் சில கட்டடங்களின் அத்திவாரங்கள் மட்டுமே எஞ்சியுள்ளன.

உருப்படியாகக் காட்சிதரும் ஓரிரு கட்டடங்களும் சேதமடைந்த நிலையில் உள்ளதால் அவற்றைத் திருத்த காலதாமதம் ஏற்படுவதுடன் பெருமளவில் நிதியும் தேவைப்படுகிறது.

அந்தக் கட்டடங்களைத் திருத்திய பின்னரும் பாடசாலையை இயக்கமுடியுமா என்பது சந்தேகமே. அந்தப் பாடசாலையில் தற்சமயம் கல்வியிலும் சகல மாணவர்களுக்கும் இந்தக் கட்டடங்கள் போதியதாக இருக்காது. மேலும் கட்டடங்கள் அமைக்கப்படவேண்டும்.

சேதமடைந்த கட்டடங்களைப் புனரமைத்தும் தற்காலிக கொட்டகைகளை அமைத்தும் பாடசாலையை இயக்கலாம்.

அதிலும்பார்க்க தற்சமயம் இயங்கும் இடத்தில் பாடசாலையை தொடர்ந்து இயக்கவைத்து, முழுமையாக கட்டட வசதிகளை ஏற்பாடு செய்த பின்னர் அங்கு இயங்கச் செய்வதே நல்லது எனக் கருதுகிறோம் - இப்படி அவர் தெரிவித்தார். (ம-3)

## 28 முதல் 7 ஆம் திகதிவரை

# இலங்கைக்கு நேர் மேலே சூரியன் வரப்போகின்றது

எதிர்வரும் 28 ஆம் திகதிமுதல் அடுத்தமாதம் 7 ஆம் திகதிவரை சூரியன் இலங்கைக்கு மேலாக நேரே இருக்கும் என்று அறிவிக்கப்படுகிறது.

சூரியன் நேரே இருக்கும் திகதிகளும் இடங்களும் வருமாறு:-

28 ஆம், 29 ஆம் திகதிகள் - பகல் 12.42 மணிக்கு அச்சுவேலி, பனங்காடு, பாலாவி, அடம்பன், பளை. 30ஆம், 31 ஆம், செப்ரெம்பர் முதலாம் திகதிகள் பகல் 12.41 மணிக்கு பள்ளமடு, பெரியதஞ்சுக்குளம், நிலாவெளி, பாண்டிருப்பு, அநுராதபுரம், புத்தூர், கோக்கிளாய்.

2 ஆம், 3ஆம், 4 ஆம் திகதிகள் - கற்பிட்டி, நாச்சியன்தீவு, வாரியப்பொல, கொக்கட்டிச்சோலை, நீர்கொழும்பு, அக்கரைப்பற்று. 5 ஆம், 6 ஆம் திகதிகள் - பகல் 12.39 மணிக்கு தெஹிவளை, பாதுக்கை, நோர்வூட், அறுகம்பைக்குடா, பேருவளை, இறக்குவானை, வீரகெட்டிய, அம்பாந்தோட்டை. (ம)

# பிரபாகரனை ஒப்படைக்கக் கோரும் இந்திய நிலைப்பாட்டில் மாற்றமில்லை

## வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா கூறுகிறார்

சென்னை,ஓக.21

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற இந்தியாவின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமுமில்லை. இது இலங்கை அரசுக்கும் நன்றாகத் தெரியும்.

- இவ்வாறு இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த்சின்ஹா ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் கூறியிருக்கிறார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணப்பட வேண்டும் என்பதும் - பிரபாகரன் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்பதும் - வெவ்வேறான விடயங்கள். இரண்டையும் ஒன்றாக நோக்கலாகாது.

பிராந்தியத்தில் அமைதி நிலவ வேண்டும். இலங்கை இனப்பிரச்சினை பேச்சுமூலம் தீர்க்கப்பட வேண்டும் அதையே இந்தியா விரும்புகின்றது.

அதற்காக விடுதலைப் புலிகளுடன் இலங்கை அரசு பேசுவது வேறு; பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைக்க நாம் இலங்கை அரசிடம் கோருவது வேறு என்றார் சின்ஹா. (ம)

## நிமலராஜன் கொலை வழக்கு:

# கைப்பற்றப்பட்ட 9மி.மீ. பிஸ்ரலை பகுப்பாய்வுக்கு அனுப்பப் பணிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.21

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை தொடர்பாக ஈ.பி.டி.பியின் யாழ் அலுவலகத்தில் நடத்தப்பட்ட தேடுதலின்போது கைப்பற்றப்பட்ட 9 மில்லிமீற்றர் கைத்துப்பாக்கியையும் அதற்குரிய இரு வெற்றுத் தோட்டாக்களையும் இரசாயனப் பகுப்பாய்வுக்கு அனுப்புமாறு யாழ். மேலதிக நீதிவான் திருமதி ச.இளங்கோவன் உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணை நேற்று யாழ்.நீதிமன்றத்தில் எடுக்கப்பட்டபோது பொலீஸார் விரைவான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தனர்.

ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் மீட்கப்பட்ட கைத்துப்பாக்கி 9 மில்லி மீற்றர் ரகத்தைச் சேர்ந்தது. ஆனால் இந்தக் கைத்துப்பாக்கியை வைத்திருப்பதற்காக அந்த அமைப்பால் சமர்ப்பிக்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தில் அந்தக் கைத்துப்பாக்கி 7.27 மி.மீற்றர் ரகத்தைச் சேர்ந்தது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பாகக் குற்றப்புலனாய்வுத்துறையினர் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

பிரஸ்தாப கைத்துப்பாக்கியை இரசாயனப் பரிசோதனைக்கு உட்படுத்தவேண்டும் என்று நிமலராஜன் குடும்பத்தின் நலனைக் கவனிப்பதற்காக ஆஜரான சட்டத்தரணி எஸ். ரட்ணவேல் மனுஒன்றைத் தாக்கல் செய்தார்.

இதை ஏற்றுக்கொண்ட மேலதிக நீதிவான் கைத்துப்பாக்கியையும் இரு வெற்றுத் தோட்டாக்களையும் இரசாயனப் பரிசோதனைக்கு அனுப்புமாறு உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தடுத்துவைக்கப்பட்டுள்ள நபர்களைப் பிணையில் விடுமாறு அவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி பொன். வெற்றிவேலு மனு ஒன்றைச் சமர்ப்பித்தார்.

அந்த மனுவை ஏற்காறுத்த நீதிவான் அவர்களை அடுத்தமாதம் 3ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார். (ம-3-10)

# ஐரோப்பிய யூனியனும் பேச்சுக்கு வரவேற்பு

கொழும்பு,ஓக.21

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே தாய்லாந்தில் பேச்சுகள் ஆரம்பிக்கப்படுவது தொடர்பாக ஒஸ்லோவில் காணப்பட்ட இணக்கத்தை ஐரோப்பிய யூனியன் வரவேற்றுள்ளது.

சமாதான நடைமுறையில் இரு தரப்பினருக்கும் உள்ள கடப்பாட்டை இது தெளிவாக எடுத்துக் காட்டுகிறது என்று ஐரோப்பிய யூனியனின் அறிக்கை கூறுகிறது.

திட்டமிட்டபடி சமாதானப் பேச்சுகள் ஆரம்பிக்கப்படுவதை இரு தரப்பினரும் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அந்த அறிக்கை கோருகிறது. (ம)

## நாரந்தனை தாக்குதல் சம்பவம்:

# வேலணைப் பிரதேச சபை தலைவருக்கு பிணை அனுமதி

யாழ்ப்பாணம்,ஓக.21

ஈ.பி.டி.பியின் உறுப்பினரும் வேலணைப் பிரதேச சபைத் தலைவருமான ந.கருணாகரகுருமூர்த்தியை தலா 25 ஆயிரம் ரூபா வீதம் இரு ஆள் பிணையில் செல்ல யாழ். நீதிமன்றம் நேற்று அனுமதித்தது.

இவரைப் பிணையில் அனுமதிப்பதற்கான உத்தரவு வவுனியா மேல் நீதிமன்றத்தில் இருந்து நேற்று யாழ். நீதிமன்றத்துக்குக் கிடைத்ததை அடுத்து மேலதிக நீதிவான் திருமதி ச.இளங்கோவன் அவரைப் பிணையில் செல்ல அனுமதித்தார்.

கடந்த பொதுத் தேர்தல் காலத்தில் தீவகம் நாரந்தனையில் தமிழ்க் கூட்டமைப்புப் பிரதிநிதிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இருவர் படுகொலையுண்டு, பலர் காயமடைய நேரிட்ட சம்பவம் தொடர்பாக இவர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். (ம-3-10)

# இஸ்ரேலிய ராணுவம் சுட்டு பலஸ்தீனச் சிறுவன் பலி!

லண்டன்,ஓக.21

வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவருவது தொடர்பாக பலஸ்தீனர்களுக்கும் இஸ்ரேலியர்களுக்கும் இடையே இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ள நிலையில் நேற்று 15 வயதுப் பலஸ்தீனச் சிறுவன் ஒருவனை இஸ்ரேலிய இராணுவம் சுட்டுக்கொன்றுள்ளது.

மத்திய காஸாவில் உள்ள கான் யூனுஸ் அகதிமுகாமுக்கு அருகே உள்ள 'மொராக்' யூதக் குடியிருப்பின் பாதுகாப்புக்காக இஸ்ரேலியப் படையினர் நிறுத்தப்பட்டிருப்பதாகவும் - நேற்று அவர்கள் திடீரென்று மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பலஸ்தீன அகதி முகாமில் தங்கியிருந்த அய்மன் ஜுஅரப் என்ற 15 வயதுச் சிறுவன் சூடுபட்டு இறந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில், இஸ்ரேலிய - பலஸ்தீன அதிகாரிகளிடையே எட்டப்பட்ட இணக்கப்பாட்டை தாம் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்று பிரதான பலஸ்தீனத் தீவிரவாத அமைப்புக்கள் பலவும் தெரிவித்துள்ளன.

முன்னதாக பலஸ்தீனத் தீவிரவாதிகளின் தாக்குதல்களைக் கட்டுப்படுத்துவதாக பலஸ்தீன நிர்வாகம் உறுதியளித்ததை அடுத்து காஸா மற்றும் மேற்குக்கரை நகரான பெத்தலகேம் ஆகிய பகுதிகளில் தனது இராணுவக் கொடுபிடிகளைத் தளர்த்துவதாக இஸ்ரேல் ஒப்புக்கொண்டது.

பலஸ்தீன - இஸ்ரேலிய அதிகாரிகளிடையே இடம்பெற்ற பேச்சில் இந்த இணக்கம் ஏற்பட்டது. கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இரு தரப்பும் இதற்கான உடன்பாட்டை எட்டியதாகக் கூறப்பட்டுகிறது. (ஒ)





பலஸ்தீனப் பகுதிகள் மீதான தமது கட்டுப்பாடுகளை இஸ்ரேலிய இராணுவம் தளர்த்தியதைத் தொடர்ந்து, காஸாவின் டுகிட் யூதக் குடியிருப்பு அருகே பலஸ்தீனப் பொலீஸார் வீதிச் சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்வதையும் இஸ்ரேலியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட பலஸ்தீனச் சிறுவன் அய்மனின் சடலமருகே அவரது உறவினர் ஒருவர் சோகத்துடன் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

# பிரிட்டிஷ் இரவு விடுதியில் சீக்கியர் நுழையத் தடை

லண்டன்,ஓக.21

பிரிட்டனில் வசிக்கும் சீக்கியர்கள் ஹர்ஜிந்தர்சிங்லால் (வயது 42), ஜஸ்விந்தர் மார்வா (40) பிர்மிங்காம் நகரைச் சேர்ந்த இந்த இருவரும் சீக்கிய மத வழக்கப்படி தலையில் தலைப்பாகையுடன் இரவு விடுதி ஒன்றுக்குச் சென்றனர். அவர்களது கறுப்பின நண்பர் ஒருவரும் உடன் சென்றார். அவரை மட்டும் உள்ளே அனுமதித்த காவலர்கள், சீக்கியர்களுக்கு அனுமதி மறுத்தனர். தலைப்பாகை இல்லாமல் வந்தால்தான் உள்ளே நுழையலாம் என்று கூறினர்.

இதைத் தொடர்ந்து அவர்கள் பிர்மிங்காம் நீதிமன்றத்தில் இரவு விடுதிமீது வழக்குத் தொடர்ந்தனர். விசாரணைக்குப் பிறகு நீதிமன்றத்திற்கு வெளியே பேச்சு நடத்தி சமரசமாகப் போய்விடலாம் என சீக்கியர்களை இரவு விடுதி நிர்வாகம் அழைத்தது. இதற்கு சீக்கியர்களும் சம்மதித்தனர். ஒரு மிகப்பெரிய தொகையை நஷ்டஈடாக இரவுவிடுதி நிர்வாகம் 2 சீக்கியர்களுக்கும் கொடுத்துள்ளது. (ஒ)

# ரஜினியைக் கண்டித்து பெண்கள் ஆர்ப்பாட்டம்

காஞ்சிபுரம்,ஓக.21

தமிழகத்தில் நடிகர் ரஜினிகாந்தைக் கண்டித்து காஞ்சிபுரத்தில் ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட பா.ம.க. மகளிர் அணியினர் 50 பேர் கைது செய்யப்பட்டனர்.

'பாபா' திரைப்படத்தில் இடம்பெற்றுள்ள புகை பிடிக்கும் காட்சிகள், வன்முறைக் காட்சிகளைக் கண்டித்தும், பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ்க்கு எதிரான ரஜினியின் அறிக்கைகளைக் கண்டித்தும் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

காஞ்சிபுரம் பெரியார்சிலை அருகே மாநில வழக்கறிஞர் பிரிவுச் செயலர் தா.பார்வேந்தன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. (ஒ)

# 'பாபா' திரையரங்கை தகர்க்கச் சதியாம்

கடலூர்,ஓக.21

தமிழகத்தில் கடலூரில் நடிகர் ரஜினிகாந்த் நடித்த 'பாபா' படம் திரையிடப்பட்டுள்ள திரையரங்கைத்

உலக அரங்கில்

தகர்க்கத் திட்டமிட்டதாக குள்ளஞ்சாவடி அருகே 8 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

புலியூர் காட்டுச்சாகையைச் சேர்ந்த மணிவண்ணன் (வயது 30), செல்வமணி (வயது 27), சங்கர் (வயது 25), தோப்புக்கொல்லையைச் சேர்ந்த வேணுகோபால்(வயது 31), குள்ளஞ்சாவடியைச் சேர்ந்த தங்கராஜ் (வயது 36), விருட்பலிங்கம் (வயது 42), முருகவேல்(வயது 29), பாலமுருகன் (வயது 29) ஆகிய 8 பேரும் குள்ளஞ்சாவடி ரயில் தண்டவாளம் அருகில் அமர்ந்து 'பாபா' திரைப்படம் ஓடும் திரையரங்கைத் தகர்க்க சதித்திட்டம் தீட்டியதாகக் கூறப்பட்டது.

இதையடுத்து அவர்களைக் கைது செய்த பொலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (ஒ)

# சவூதியில் கொலையாளிக்கு தலை துண்டித்து தண்டனை!

டுபாய்,ஓக.21

கொலைசெய்தவரின் தலை துண்டிக்கப்பட்டும், திருடிய இருவரின் கைகள் துண்டிக்கப்பட்டும் சவுதி அரேபியாவில் தண்டனை நிறைவேற்றப்பட்டது.

இது தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டதாவது:-

எகிப்து நாட்டைச் சேர்ந்தவர் அல்ஹேயல் அல்சையது முஹம்மதைன். அவர் சக நாட்டவரான அபிதின் மஹ்மூத் முஹம்மது மஹ்மூத் என்பவரை கோடரியால் வெட்டிக் கொலை செய்தார். அவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. அதையடுத்து, அம்மானில் கடந்த வியாழக்கிழமை அவரது தலை துண்டிக்கப்பட்டு தண்டனை நிறைவேற்றப்பட்டது.

மசூதியில் திருடியதாக ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த முஹம்மது நபி தௌலத் ரொஸ்தமும் சிரியாவைச் சேர்ந்த அஹமது ஒகாஷ் அப்துல் காதரும் பிடிபட்டனர். இஸ்லாமியச் சட்டப்படி, அவர்களது வலது கைகள் துண்டிக்கப்பட்டுத் தண்டனை நிறைவேற்றப்பட்டது. (ஒ)

## ரஷ்ய ஹெலி மீது தீவிரவாதிகள் தாக்கு; 105 பேர் பலி!

லண்டன்,ஓக.21

செச்சினியத் தீவிரவாதிகள் ரஷ்ய ஹெலிகொப்டர் ஒன்றைச் சுட்டு வீழ்த்தியதில், அதில் பயணம் செய்தவர்களில் 105 பேர் உயிரிழந்தனர்; 33பேர் காயமடைந்தனர்.

ரஷ்ய இராணுவத்துக்குச் சொந்தமான எம்.ஐ.26ரக ஹெலிகொப்டரே தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு நேற்றுமுன்தினம் உள்ளானதாகக் கூறப்படுகிறது. தீவிரவாதிகள் தாக்கியே ஹெலி வீழ்ந்ததாகக் கூறப்படுவதை ரஷ்ய இராணுவம் ஏற்க மறுத்தாலும், நேரில் கண்டவர்கள், செச்சினியத் தீவிரவாதிகள் ஏவிய ஏவுகணையே ரஷ்ய ஹெலியைத் தாக்கியதாகத் தெரிவித்தனர்.

## ஆப்கானிஸ்தானை விட

# அதிக அல்கெய்டா தீவிரவாதிகள் பாகிஸ்தானில்தான் உள்ளனர்

## அமெரிக்கத் தளபதி தகவல்

காபூல்,ஓக.21

ஆப்கானிஸ்தானில் உருவான அல்கெய்டா தீவிரவாதிகள் இப்போது அந்த நாட்டைவிட பாகிஸ்தானில்தான் அதிக அளவில் உள்ளனர் என்று அமெரிக்க கூட்டுப்படைகளின் தளபதி லெப்டினனட் ஜெனரல் டொன் மெக்நீல் தெரிவித்தார்.

இது தொடர்பாக தளபதி லெப்டினன்ட் ஜெனரல் டொன் மெக்நீல் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

அல்கெய்டா தீவிரவாதிகள் உருவான இடம் ஆப்கானிஸ்தானில்தான். அங்குதான் அவர்கள் பெருமளவில் இருந்தனர். இப்போது ஆப்கானை விட, பாகிஸ்தானில்தான் அவர்கள் அதிக அளவில் இருக்கிறார்கள்.

பாகிஸ்தானில் தீவிரவாதிகளைத் தேடிக் கண்டுபிடித்து அழிப்பதற்கு கூட்டுப்படைக்கு அதிகாரம் கிடையாது.

மேலும் பாகிஸ்தானியப் பழங்குடியினரிடம் அல்கெய்டா தீவிரவாதிகள் மீது அபரிமிதமான அனுதாபம் இருக்கிறது.

ஆப்கானில் ஆயிரத்துக்கும் குறைவான அளவுக்கு மட்டுமே இப்போது தீவிரவாதிகள் இருக்கிறார்கள்.

தீவிரவாதத்துக்கு எதிரான போர் தொடங்கியதும், தென்கிழக்கு எல்லை வழியாக ஆயிரக்கணக்கான தீவிரவாதிகள் ஆப்கானிஸ்தானில் இருந்து பாகிஸ்தானுக்குள் ஊடுருவிவிட்டனர்.

- இவ்வாறு தளபதி டொன் மெக்நீல் கூறினார். (ஒ)

## பெலரஸ் நாட்டில் இந்துக்கள் கைது!

மொஸ்கோ,ஓக.21

ரஷ்யாவில் இருந்து பிரிந்த நாடுகளில் ஒன்று பெலரஸ். இதன் தலைநகர் மின்ஸ்க். இங்கு உள்ள 'சிவா சமூகம்' என்ற அமைப்பைச் சேர்ந்த இந்துக்கள் 13பேர் கைது செய்யப்பட்டனர்.

பெலரஸ் நாட்டில் 20 ஆண்டுகளுக்குக் குறைவாக வசித்தவர்கள் மதப் புத்தகங்களை வெளியிடவும், மத அமைப்புகளை நிறுவவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. கூட்டுப் பிரார்த்தனை நடத்துவதும் தடை செய்யப்பட்டுள்ளது.

இதை எதிர்த்து இந்துக்கள் 13பேர் போராட்டம் நடத்தினர். அப்போதுதான் அவர்கள் கைது செய்யப்பட்டனர். (ஒ)

## ஜப்பானில் நிலநடுக்கம்

மத்திய ஜப்பானில் கடந்த ஞாயிறன்று நிலநடுக்கம் ஏற்பட்டது.

4.5ரிக்டர் அளவுள்ள இந்த நிலநடுக்கம், புகூபி என்ற இடத்தில் தரைக்குக் கீழே 10 கிலோ மீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்தது. டோக்கியோ நகரில் இருந்து 320 கிலோமீற்றர் தூரத்தில் இப்பகுதி உள்ளது.

## பதவி விலகமாட்டேன் என்கிறார் பாப்பரசர்

"மதகுரு பதவியிலிருந்து விலகமாட்டேன் ஆயுள் முழுக்க அப்பதவியில் நீடிப்பேன்" என பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் தெரிவித்தார். போலந்து நாட்டில் கல்வாரியா ஜெப்ரஜைடோவ்ஸ்கா தேவாலயத்தின் 400ஆவது ஆண்டு விழாவில் கடந்த திங்கட்கிழமை நடந்த பிரார்த்தனையின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார். (ஒ)

# ஐ.நா. சபை அதிகாரிகளுடன் சமரசப் பேச்சு நடத்தத் தயார்!

## ஈராக் அரசு அறிவிப்பு

நியூயோர்க்,ஓக.21

ஈராக் நாட்டில் இரசாயன ஆயுதங்கள் உட்பட பயங்கர ஆயுதங்கள் பதுக்கிவைக்கப்பட்டுள்ளனவா? என்று சோதனை நடத்த ஐ.நா. சபை சார்பில் அதிகாரிகள் அனுப்பிவைக்கப்பட்டனர். ஆனால், இந்த ஆயுத சோதனையை நடத்த ஈராக் நிபந்தனையும், கட்டுப்பாடுகளும் விதித்தது.

இதைத் தொடர்ந்து ஈராக்மீது நடவடிக்கை எடுக்க ஐ.நா. சபை முடிவு செய்தது. இது தொடர்பாக ஈராக் வெளியுறவு அமைச்சர் நாஜி சபரி, ஐ.நா.சபை பொதுச் செயலாளர் கோபி அனானுக்கு ஒரு கடிதம் எழுதி இருக்கிறார். அதில், "ஐ.நா.சபையின் ஆயுத சோதனை அதிகாரிகளை ஈராக்கில் சோதனை நடத்த அனுமதிக்கத்தயார்" என்றும், "இது தொடர்பான தொழில்நுட்பப் பேச்சை முதலில் நடத்தவேண்டும்" என்றும் குறிப்பிட்டுள்ளார். இந்தப் பேச்சுக்கு சில நிபந்தனைகளையும் ஈராக் விதித்துள்ளது. (ஒ)

# அதிக சம்பளம் பெறும் சிங்கப்பூர் பிரதமர்

சிங்கப்பூர்,ஓக.21

திறமையானவர்களை அரசு நிர்வாகத்துக்குக் கவர்ந்து இழுக்கவும் ஊழலை ஒழிக்கவும் பணக்கார ஆசிய நாடுகளில் பிரதமர், அமைச்சர்கள், உயர் அதிகாரிகளுக்கு ஏராளமான சம்பளமும் பலவித வசதிகளும் அளிக்கப்படுகின்றன.

ஆசியாக் கண்டத்தில் ஊழலற்ற ஆட்சியை நடத்தும் சில நாடுகளின் தலைவர்களும் உயர் அதிகாரிகளும் கோடிக் கணக்கில் சம்பளம் பெறுகின்றனர்.

ஐரோப்பிய நாடுகளின் ஆட்சித் தலைவர்கள் மற்றும் உயர் அதிகாரிகளைவிட சிங்கப்பூர், ஹொங்கொங், ஜப்பான் ஆகிய நாடுகளின் பிரதமர்கள், உயர் அதிகாரிகள் கூடுதல் சம்பளம் பெறுகின்றனர். ஊழலற்ற ஆட்சியை மட்டுமல்லாமல், திறமை வாய்ந்த நிர்வாகத்தையும் அவர்கள் அளித்துவருகின்றனர் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

பொருளாதாரத்தில் முன்னணியில் உள்ள ஆசிய நாடுகளில் ஒன்றான சிங்கப்பூரின் பிரதமர் கோ சோக் டாங், 2000ஆம் ஆண்டில் பெற்ற சம்பளம் ரூ.10கோடி. இது அமெரிக்க அதிபரின் (ரூ.4கோடி) சம்பளத்தை விட அதிகம். அதன் மூலம் உலகிலேயே அதிக சம்பளம் பெறும் தலைவர் என்ற பெருமையைப் பெற்றார் கோ சோக்.

ஆனால் 2001ஆம் ஆண்டில் பொருளாதார மந்த நிலை ஏற்பட்டபோது அவரது ஊதியம் குறைக்கப்பட்டது. இதுதவிர, பொருளாதாரச் செயற்பாட்டுக்கு ஏற்ப 'போனஸ்' மற்றும் இதர சலுகைகளும் உண்டு.

ஆனால், ஐரோப்பாவில் அதிக சம்பளம் பெறும் பிரதமர்களில் ஒருவரான பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயரின் ஆண்டு ஊதியம் ரூ.2.3 கோடிதான்.

சிங்கப்பூரில் தனியார்துறையில் உயர் அதிகாரிகளுக்கு என்ன ஊதியம் கொடுக்கப்படுகிறதோ, அதைக் கணக்கில்கொண்டு அரசு உயர் அதிகாரிகளுக்கும் ஊதிய உயர்வு நிர்ணயிக்கப்படுகிறது. ஆனால், சாமானிய மக்கள் இதைப் பார்த்து முணுமுணுக்கின்றனர். திறமையானவர்களை அரசு நிர்வாகத்துக்கு இழுக்கவும் தொடர்ந்து பணியில் இருக்கச் செய்யவும் இது அவசியம் என்று கூறுகிறது சிங்கப்பூர் அரசு.

பொருளாதாரத் துறையில் திறமை, செல்வப் பெருக்கம், தொழில் திறன் ஆகியவற்றுக்கும் அதிகாரிகள், தலைவர்களின் ஊதிய அளவுக்கும் தொடர்பு உள்ளது என்று ஆஸ்திரேலிய பொருளாதார நிபுணர் மைக்கேல் பேக்மேன் கூறுகிறார். (ஒ)

# தகவல் தொழில்நுட்பத்தில் வேலைவாய்ப்பு குறைகிறது

அமெரிக்காவில் இந்த ஆண்டு இறுதியில் தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கான வேலைவாய்ப்புகள் குறைந்துவிடுமென நிறுவனங்கள் எதிர்பார்க்கின்றன.

பல்வேறு நிறுவனங்களில் பணியாற்றும் தலைமைத் தகவல் அலுவலர்களிடம் தனியார் ஆய்வு நிறுவனம் கருத்து சேகரித்தது. அதன்படி தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கான வேலைவாய்ப்பு படிப்படியாகக் குறையுமென்று கணிக்கப்படுகிறது.

தொழில்நுட்ப வல்லுநர்களை பணிக்கு அமர்த்தும் நிறுவனங்கள் குறைந்தளவில்தான் ஆள்களை நியமிக்கின்றன என்றும் அந்த ஆய்வு தெரிவிக்கின்றது.

தகவல் தொழில்நுட்பத் துறைகளில் வேலைவாய்ப்பு மங்கிவரும் போது, நிதி, காப்புறுதி, கட்டுமான நிறுவனங்களில் வேலைவாய்ப்பு அதிகரிக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ)

**யறிபிடீஎஸின் கிரேக்க நாடகம் சிங்களத்தில்**

**– ட்ரோஜனத்துப் பெண்கள் –**

நெறியாள்கை : தர்மசிறி பண்டாரநாயக்கா

திகதி : 23.08.2002 வெள்ளிக்கிழமை

நேரம் : பி.ப. 3.00 மணி

இடம் : யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

திருமறைக்கலாமன்ற அலுவலகத்தில் இலவச அனுமதிச்சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ளலாம். (7151)


# அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் போசாக்கு மேம்பாட்டுத் திட்டம்

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் நல்லூர் பிரதேச செயலகத்துக்குட்பட்ட மூன்று கிராமங்களில் "போசாக்கு மேம்பாட்டுத்திட்டம்" என்ற பெயரிலான ஆய்வு ஒன்றினை விரைவில் மேற்கொள்ளவுள்ளது.

கொக்குவில் மேற்கு, திருநெல்வேலி பாரதிபுரம், கோண்டாவில் கிழக்கு ஆகிய பகுதிகளிலேயே இந்த ஆய்வு மேற்கொள்ளப்படவிருக்கின்றது.

மேற்படி கிராமங்களில் உள்ள குடும்பங்களின் விவரங்கள், அப்பகுதியில் வசிப்பவர்களுக்கான மலசலகூடம், குடிதண்ணீர் வசதிகள் மற்றும் ஏனைய அடிப்படை வசதிகள் போன்ற விவரங்கள் ஐந்து வயதுக்கு உட்பட்ட சிறுவர்களின் நிறை, போசாக்குமட்டம் போன்ற விவரங்கள் ஆகியவை திரட்டப்படவிருக்கின்றன.

இந்த ஆய்வின்மூலம் இக்கிராமங்களின் குறைபாடுகளை அறிந்து கொண்டபின்னர் வெளிநாட்டு நிறுவனங்கள் மற்றும் பொது அமைப்புகளுடன் தொடர்புகொண்டு கடன் வசதிகள் மற்றும் வீட்டுத்தோட்ட வசதிகளை அப்பகுதி மக்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத் தலைவர் அ.நல்லதம்பி தெரிவித்தார். (ஒ-4)

# பெண்களுக்கான தையற் பயிற்சி

குருநகர்,ஓக.21

குருநகர் சென்.ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக்கழகம் பெண்களுக்கான தையல் பயிற்சி வகுப்புகளை ஆரம்பிக்கவுள்ளது. தையல் பயிற்சியைப்பெற விருப்பமுள்ளவர்கள் குருநகர் சென்.ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகத்தில் தமது பெயர் விவரங்களைப் பதிவுசெய்யலாம் என இக்கழகத்தின் தலைவர் சீ.எம்.நெல்சன் அறிவித்துள்ளார். (ஒ-51)

# ஊர்காவற்றுறையில் 'சங்கநாதம்'

ஊர்காவற்றுறை,ஓக.21

விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகமும் 'நிதர்சனம்' அமைபபும் இணைந்து நடத்திய "சங்கநாதம்" இசை நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 7மணியளவில் ஊர்காவற்றுறை திறந்தவெளி அரங்கில் ஊர்காவற்றுறை அரசியல்துறைப் பொறுப்பாளர் ரதன் தலைமையில் நடைபெற்றது.

ஈகைச்சுடரேற்றலுடன் ஆரம்பமாகிய நிகழ்வில், சுமார் ஆயிரத்திற்கும் அதிகமான பொதுமக்கள் கலந்து கொண்டனர். (ஒ-16)

# விஷப்பாம்புகளால் விவசாயத்துக்கு முட்டுக்கட்டை

தென்மராட்சி,ஓக.21

சாவகச்சேரி கெருடாவில் பகுதியில் உள்ள வயல்களில் விஷப்பாம்புகள் அதிகமாகக் காணப்படுவதால் தமது விவசாய நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியவில்லை என விவசாயிகள் தெரிவித்தனர்.

இப்பகுதியில் விவசாயத்தினை மேற்கொள்ள படையினர் அண்மையில் அனுமதிவழங்கியிருந்த வயல் பகுதிகளில் புதர் மண்டிக் காணப்படுவதாகவும்-

வயல்களின் பல இடங்களில் அமைக்கப்பட்டுள்ள பதுங்குகுழிகளுக்குள் விஷப்பாம்புகள் குடிகொண்டிருப்பதாகவும் - விவசாயிகள் தெரிவித்தனர்.

அத்துடன் அப்பகுதியில் உள்ள கிணறுகள் பலவும் இடிந்த நிலையில் காணப்படுவதாகவும் - அவர்கள் தெரிவித்தனர். (ஒ-117)


**அவுஸ்திரேலியாவில் ஒரு கணக்காளராகுங்கள்**

பகுதியளவில் அல்லது முழுமையாக CIMAஇல் தகைமையா?

* அவுஸ்திரேலியாவில் சிறந்த அங்கீகாரம் பெற்ற கணக்கீட்டு தகைமையாக CPA விளங்குகிறது.
* CPAஇன் இணை உறுப்பினராவதற்கு CPAஇனால் தத்துவமளிக்கப்பட்ட இளமாணிப் பட்டமொன்று அடிப்படைத் தேவைப்பாடாகும்.
* நீங்கள் பட்டம் பெறவில்லை; ஆனால் CIMAஐக் கொண்டிருக்கிறீர்கள். CPAஇன் உறுப்பினராக விளங்கி, அவுஸ்திரேலியாவில் வேலை செய்ய விரும்புகிறீர்கள்! தென் அவுஸ்திரேலியாவில் நாம பிரதிநிதித்துவம் செய்யும் இரு பல்கலைக்கழகங்கள் CPA தத்துவமளிக்கப்பட்ட பட்டமொன்றுக்கு ஆகக்கூடுதலாக 2 வருட திறமைச் சித்தி வரை வழங்குகின்றது.
* CPA தத்துவமளிக்கப்பட்ட பட்டத்திற்கு ஒப்பிடக்கூடிய அவுஸ்திரேலியாசாராத பட்டமொன்றைக் கொண்டிருந்தால், மிகக் குறைந்த செலவினத்திலான வழியில் CPAஇன் இணைந்த உறுப்புரிமைக்கு ஏற்றுக் கொள்ளத்தக்கதாக நீங்கள் பட்டத்தைப் பெறுவதற்கு எம்மால் உங்களுக்கு உதவியளிக்கமுடியும்.

மேலதிக விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்-

திருமதி கோகிலாதேவி மகேந்திரராஜா கந்தம் வள்ளியசிங்கம்வீதி இணுவில் தெற்கு சுன்னாகம் 070 - 212641

கிழமை நாள்கள் - மாலை 5.00 - 9.00 வரை இறுதி நாள்கள் - காலை 8.00 - மாலை 9.00




2003 பெப்ரவரி புகுமுகத்திற்கு இப்பொழுதே விண்ணப்பியுங்கள்

edlocate EDUCATION AUSTRALIA

எட்லொக்கேற் (பிறைவேற்) லிமிற்றெற்

23/1, றொஸ்மீட் பிளேஸ், கொழும்பு 07

தொலைபேசி: 670748, 074 - 618718 பக்ஸ்: 074 - 790957

ஈமெயில்: marketinge@edlocate.lk வெப்சைட்: www.edlocate.lk



**சுடர் ஒளி**

விலை 14/=

**20-08-2002 இதழில்**

- முட்டுக்கட்டையை நீக்கிய நோர்வேச் சந்திப்பு
- பாதையைத் திறக்கக் கோரி கிழக்கில் நடந்த மறியல் போர்
- படையினர் பொதுமக்கள் உறவை சீர்குலைக்க தீவகத்தில் நடந்த சதி! இலப்போர் முடிவுக்குவர மதப்போருக்கு முஸ்தீபு
- ஆரவாரம் எதுவும் இன்றிச் செயற்படும் வல்லவர் காவலூர் நவரத்தினம்
- ஆந்தையாரின் க்ரைம் டயரி
- ஜெயலலிதாவின் இலக்கு ரஜனி; அவரை ராமதாஸ் முந்தியது ஏன்?
- ஜனாதிபதியின் நிலைப்பாடு நெருக்கடி ஏற்படுத்துமா?
- ஆயுதக் குழுக்கள் என்றவை சும்மா இருக்க அஹிம்சா மூர்த்திகள் அடிதடியில் - தேரடி
- அரசியல் அம்பலம்
- மற்றும் மசாலா மிக்ஸ், இணையத்தளங்களிலிருந்து, பித்தன் பதில்கள், இலவச மருத்துவ ஆலோசனைகள், சினிமா, விளையாட்டு, சிறுவர் பகுதி, சிறுகதை, குறுங்கதை, மதன் சித்திரத் தொடர்கதை உட்பட பல்வேறு விசேட அம்சங்கள்.


சுடர் ஒளி
THE SUDAR OLI
சமாதானப் பாதையில் தொடர்ந்து செல்லத் தலைவர்கள் திடசங்கற்பம்
தீர்வுப் பேச்சுகளுக்கு களம் அமைத்த மகிழ்ச்சிப் பெருக்கில் மும்மூர்த்திகள்

சுடர் ஒளி வாரப்பத்திரிகையின் விலை 3ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.
உங்கள் முகவரிடம் கேட்டுவாங்குங்கள்.

(C/23229)

உதயன்

## தமிழர்களைப் புரிந்துகொள்ள முயலும் ஆட்சியாளர்கள்

இந்த நாட்டில் நீண்டகாலம் புரையோடிப்போயிருக்கும் இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் அமைதித் தீர்வு காணலாம் என்ற நம்பிக்கை நாட்டு மக்கள் மத்தியில் துளிர்த்திருக்கின்றது.

தமிழ்மக்களின் மனக்குறை மற்றும் அபிலாஷை என்னவென்பதை புரிந்துகொள்ளும் அல்லது புரிந்துகொள்ள முயற்சிக்கும் மனப்பக்குவம் சிங்களத் தலைவர்கள் மத்தியில் ஏற்பட்டிருப்பதே இந்த நம்பிக்கை துளிர்ப்பதற்கு முக்கிய காரணம்.

திருகோணமலையில் நடைபெற்ற ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன ஆற்றிய உரை ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தில் உள்ள நியாயங்களை சிங்களத் தலைவர்கள் புரிந்துகொள்ளத் தலைப்பட்டுள்ளனர் என்பதை நிருபிக்கப்போதுமானதாகும்.

ஒரு சிங்களத் தலைவரான - ஆளும் கட்சியின் மூத்த அமைச்சர்களுள் ஒருவரான - ராஜித சேனாரத்ன, ஆளும் கட்சியினரின் தேசிய மாநாட்டிலேயே இந்த விடயங்களைப் பகிரங்கமாக ஒப்புக்கொண்டிருப்பது - கட்சியின் ஏனைய பிரமுகர்களுக்கு அவற்றை அடித்துக் கூறியிருப்பது - முக்கிய அம்சமாகும்.

அவர் சுட்டிக்காட்டிய பின்வரும் விடயங்கள் நோக்கற்பாலவை.

★ தமிழர்கள் தமது பிரச்சினைகளை ஜனநாயக முறையில் பேசித் தீர்த்துக்கொள்ள ஆரம்பத்திலிருந்தே முயன்றனர். ஆனால், அந்த முயற்சியல் ஈடுபட்ட தமிழ் அரசியல் தலைவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் சிங்களத் தலைவர்களால் ஏமாற்றப்பட்டனர்; உதாசீனப்படுத்தப்பட்டனர்.

★ அஹிம்சை ரீதியில் - ஜனநாயக வழியில் - தமிழர்கள் மேற்கொண்ட போராட்டங்கள் தோற்கடிக்கப்பட்டன. அதனால், ஆயுத வழியில் தீர்வு காண தமிழ் இளைஞர்கள் முடிவுசெய்தனர்.

★ திம்புப் பேச்சுக்கள் தோல்வியடைந்ததற்கு அப்போது ஆட்சியிலிருந்த ஐ.தே.கட்சி அரசின் சில அமைச்சர்களும் காரணமாக இருந்தனர்.

- இப்படி இனப்பிரச்சினையின் மூலத்தையே வெளியிட்டு சிங்களத் தரப்பில் காணப்பட்ட பிழையை அப்பட்டமாக ஒப்புக்கொண்டிருக்கின்றார் அமைச்சர் ராஜித சேனாரத்ன.

சிங்களத் தலைமை மத்தியில் ஏற்பட்டிருக்கும் - உண்மையை ஒப்புக்கொள்கின்ற - இந்த விழிப்புணர்வு, அமைதித் தீர்வு கிட்டும் என்ற நம்பிக்கையை உருவாக்கும் நல்லதோர் அறிகுறி.

1994 - 95இல் ஜனாதிபதி சந்திரிகா அரசுடன் புலிகள் நடத்திய பேச்சுக்களின்போது, புலிகள் ஏமாற்றப்பட்டதையும் அவர் விவரித்திருக்கின்றார்.

"ஜனாதிபதி குமாரதுங்க கொடுத்த உறுதிமொழிகளை அவர் நிறைவேற்றாவிட்டால் பேச்சு முறிவடையும் என்று புலிகளின் தலைவர் கூறினார். ஆனால், அதனை வெற்றுவேட்டுப் பயமுறுத்தலாக நினைத்தார் ஜனாதிபதி. புலிகள் தமது முடிவுகளில் எவ்வளவு உறுதியானவர்கள் என்பது ஜனாதிபதிக்கு அப்போது விளங்கியிருக்கவில்லை. அதனால் மீண்டும் போர் வெடித்தது. அதன் மூலம் புலிகள் சொன்னால் அதைச் செய்துமுடிப்பர் என்பது மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது." - என்றும் அவர் அக்கூட்டத்தில் பகிரங்கமாகக் கூறியிருக்கின்றார்.

தமது முடிவில் புலிகள் எவ்வளவு உறுதியானவர்கள் என்பது அவர்களுடன் பேச்சு நடத்த முன்வந்திருக்கும் அரசுத் தரப்புக்கு புரிந்திருக்கும் என்றால், அமைதித்தீர்வு காணும் விடயத்தில் அரைக்கிணறு இலகுவாகத் தாண்டியாகிவிட்டது என்றே அர்த்தம்.

மேலும், தோல்வியின் விளிம்பில் பலவீனமான நிலையில் இருந்துகொண்டு புலிகள் பேச்சுக்கு வரவில்லை. போரியல் ரீதியில் உறுதியான நிலையில் இருந்துகொண்டுதான் அவர்கள் பேச்சு நடத்த முன்வந்திருக்கிறார்கள் என்றும் அமைச்சர் சேனாரத்ன குறிப்பிட்டிருக்கின்றார்.

மொத்தத்தில் தமிழர் தரப்பின் - விடுதலைப் புலிகள் பக்கத்தின் - பல்வேறு நியாயங்களை ஆளும் கட்சியின் தேசிய மாநாட்டில் அமைச்சர் ராஜித பிரதிபலித்திருக்கின்றார்.

அவர் குறிப்பிடுவதுபோல பிரதமர் ரணிலும் இந்த விடயங்களைப் புரிந்துகொண்டிருக்கின்றார் என்பது நிஜமானால் அமைதித் தீர்வு கிட்டுவது ஒன்றும் கஷ்டமான விவகாரமல்ல என்று அடித்துக் கூறமுடியும்.

# ஜனநாயக முயற்சிகள் தோற்றதால் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினர்!

## ஐ.தே.க. குழுக் கூட்டத்தில் அமைச்சர் ராஜித

திருகோணமலை,ஓக.21

"ஜனநாயக ரீதியிலான முயற்சிகள் தமிழர்களால் முன்னெடுக்கப்பட்டு அவை தோல்வி கண்டமையினால்தான் தமிழ் இளைஞர்கள் பிரச்சினைக்கு ஆயுதம்மூலம் தீர்வுகாண முடிவு செய்தனர்."

- இவ்வாறு கூறினார் காணி அமைச்சர் கலாநிதி ராஜித சேனாரத்ன.

திருகோணமலையில் நடைபெற்ற ஐ.தே.க. நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய அமைச்சர் மேலும் கூறியதாவது:-

"ஜனநாயக அணுகுமுறைகள் மூலம் தமது பிரச்சினைகளை பேசித் தீர்த்துக்கொள்ள ஆரம்பத்தில் தமிழ் அரசியல்வாதிகள் பல்வேறு சந்தர்ப்பங்களில், பல முயற்சிகளை மேற்கொண்டனர். ஆனால், அந்தத் தலைவர்கள் எங்களால் பல்வேறு தடைவைகள் ஏமாற்றப்பட்டனர்; உதாசீனப்படுத்தப்பட்டனர். இறுதியில் அஹிம்சை ரீதியாக அவர்கள் மேற்கொண்ட போராட்டங்கள் தோல்வியடையச் செய்யப்பட்டன.

"இந்த நிலையிலேயே தமிழர்கள் தமது கோரிக்கைகளை நிறைவேற்ற வன்முறைகளை மேற்கொள்ளவேண்டியிருந்தது.

"இனரீதியான சிந்தனைகள் அற்ற சிறந்த தலைவரை நாம் இப்பொழுது பெற்றுள்ளோம். அவரது சமாதானம் தொடர்பான நல்லநோக்கு தற்போது வெற்றிபெறத் தொடங்கியுள்ளதை நாம் நிதானமாகக் காண்கின்றோம்.

"திம்புப் பேச்சு முன்னர் தோல்வியடைந்தமைக்கு புலிகள் மாத்திரம் காரணர்கள் அல்லர். அந்நேரம் ஆட்சியிலிருந்த எமது அரசின் சில அமைச்சர்களும் இதற்குக் காரணர்கள் என்பதை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

"மக்களுக்கு எதுவும் கூறாது பல கடிதங்களை ஜனாதிபதி புலிகளின் தலைவருடன் பரிமாறிக்கொண்டார். அவற்றில் என்ன செய்திகள் பரிமாறப்பட்டன எனக் கூறப்படவில்லை.

"எனினும், புலிகளின் தலைவர் ஒரு கடிதத்தில் "ஜனாதிபதி அவர்களே, நீங்கள் நிறைவேற்றுவதாக உறுதிமொழி வழங்கிய சில விடயங்களை நிறைவேற்றுங்கள். இல்லாதுவிடில் இந்தச் செயற்பாடுகளில் இருந்து நாம் விலகிவிடுவோம்" என்று தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார். அவ்வாறெனின் ஜனாதிபதி அப்போது புலிகளின் தலைவருக்கு வழங்கிய உறுதிமொழி என்ன?

"உறுதிமொழி நிறைவேற்றப்படாவிட்டால் பேச்சுக்கள் முறிவடையும் என புலிகளின் தலைவர் கூறியதை ஜனாதிபதி இந்த நாட்டிலுள்ள சிகப்புக் கொடி பிடிப்பவர்களான ஜே.வி.பியினர் கூறும் வெற்றுவேட்டு பயமுறுத்தலாக நினைத்தார். ஆனால், அவர் புலிகளைப் பற்றி முழுமையாகப் புரிந்துகொள்ளவில்லை. அவர்கள் தமது முடிவுகளில் எவ்வளவு உறுதியானவர்கள் என ஜனாதிபதி அப்போது விளங்கியிருக்கவில்லை.

"இதனால் மீண்டும் போர் வெடித்தது. இதன்மூலம் புலிகள் சொன்னால் அதனைச் செய்துமுடிப்பார்கள் என்பது மீண்டும் உறுதிப்பட்டது.

"உலகில் உள்ள போராளிக் குழுக்களை இரண்டாகப் பிரிக்கலாம். ஒன்று தோல்வி நிலையில், பலவீனமான நிலையில் பேசச் சம்மதம் தெரிவிக்கும் ஜே.வி.பி. போன்ற குழுக்கள். மற்றையது போரியல் ரீதியாக எவ்வித தோல்வியும் அடையாது உறுதியான நிலையில் இருந்துகொண்டு பேச்சுக்கு சம்மதம் தெரிவிக்கும் விடுதலைப் புலிகள் போன்ற குழு.

"எமது தலைவரும், எமது அரசும் புலிகளை நன்றாகப் புரிந்துகொண்டே தற்போதைய சமாதான முன்னெடுப்புகளில் இறங்கியுள்ளோம்.

"தற்போது சமாதான முன்னெடுப்புகளுக்கு அச்சுறுத்தலாக இருந்துவரும் ஜனாதிபதியின் அதிகாரங்களை எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்கு முன்னர் நாம் 18ஆவது யாப்புத் திருத்தத்தைச் சமர்ப்பித்துக் குறைப்போம்.

"இதற்கு வேண்டிய பெரும்பான்மைப் பலத்தை பொது ஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் நாம் பெறுவோம்."

- இவ்வாறு கூறினார் அமைச்சர். (ஓ)

### 15ஆண்டுகளுக்கு முன் வழங்கப்பட்ட

# தொழில் நீதிமன்றத் தீர்ப்புக்களை செயற்படுத்தாதோர்மீது வழக்கு

## திணைக்களம் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.21

கடந்த 15 வருடங்களுக்கு முன்னர் யாழ்.குடாநாட்டில் தொழில் நீதிமன்றங்கள் இயங்கியவேளை அவற்றினால் வழங்கப்பட்ட தீர்ப்புக்களை இதுவரையிலும் நடைமுறைப்படுத்தாத நிறுவனங்கள்மீது தொழில் திணைக்கள யாழ்.அலுவலகம் தற்போது புதிய வழக்குகளை யாழ்.மாவட்ட நீதிமன்றங்களில் தாக்கல் செய்துவருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 1987,88 காலப்பகுதிக்கு முன்னர் - யாழ்.குடாநாட்டில் தொழில் நீதிமன்றங்கள் இயங்கியவேளையில் - தொழிலாளர்கள் தாக்கல்செய்த வழக்குகள் தொடர்பாக அப்போது வழங்கப்பட்ட தீர்ப்புக்கள் பலவும் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று தொழிற்திணைக்களத்தில் முறையிடப்பட்டது.

அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பணியாற்றியவர்களில் பலர் அங்கு தமது உரிமைகள் மீறப்பட்ட மற்றும் தமக்குத் தரப்படவேண்டிய கொடுப்பனவுகள் மறுக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் தொழில் நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

அந்த வழக்குகளில் நீதிமன்றங்களினால் வழங்கப்பட்ட தீர்ப்புக்களை சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் பலவும் இன்னமும் நடைமுறைப்படுத்தவில்லை என்று கூறப்படுகிறது.

எனவே, அத்தகைய நிறுவனங்களுக்கு எதிராக தொழில் திணைக்களத்தின் யாழ்.அலுவலகத்தினர் மாவட்ட நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்துவருகின்றனர்.

இவ்வாறான வழக்குகள் யாழ்.மாவட்ட நீதிமன்றத்திலும், சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்திலும் நடைபெற்று வருகின்றன.

தொழில் நீதிமன்றத்தின் முன்னைய தீர்ப்புக்கள் நடைமுறைப்படுத்தப்படாமை தொடர்பாக புதிதாகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை விசாரித்த நீதிமன்றங்கள் முன்னைய தீர்ப்புக்களை உறுதிப்படுத்தி தீர்ப்பளித்துவருவதாகவும் -

அவற்றின்படி குறிப்பிட்ட தொழிலாளர்களுக்கு அந்தக் கொடுப்பனவுகளைத் தாம் பெற்றுக்கொடுப்பதாகவும் -

வடமாகாணத் தொழில் திணைக்கள பிரதி ஆணையாளர் ஆர்.தர்மலிங்கம் தெரிவித்தார். (ஓ-4)

# 'ரெலிகொம்' செயற்பாடு குறித்து மாவட்ட மட்டத்தில் மதிப்பீடு

## பொதுமக்கள் கருத்துத் தெரிவிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஓக.21

ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் யாழ்.மாவட்டச் செயற்பாடுகள் குறித்த மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த மதிப்பீட்டுப் பணியையொட்டி, ரெலிகொம் நிறுவனத்தின் செயற்பாடுகள் மற்றும் குறைநிறைகள் குறித்தும் எழுத்து மூலம் அறியத்தருமாறு 'ரெலிகொம்' தலைமையகம் பொதுமக்களைக் கோரியுள்ளது. அத்துடன் குறைகளைத் தவிர்த்துக் கொள்வதற்கு ரெலிகொம் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகள் குறித்து கருத்துத் தெரிவிக்குமாறு ரெலிகொம் நிறுவன ஊழியர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரமுகர்களை 'ரெலிகொம்' நிறுவன தலைமைப்பீடம் கேட்டுள்ளது.

இது தொடர்பான சுற்றுநிருபம் ஒன்று கடந்த மாதம் ரெலிகொம் நிறுவன யாழ். அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஓ-4)

### நாளை

ஆவணி 06
வியாழக்கிழமை
(22.08.2002)
திதி : பூரணை
பின்னிரவு 4.13வரை.
நட்சத்திரம்: அவிட்டம்
முழுவதும்
பூரணை விரதம்
யஜுர்வேத உபாகருமம்
சுபநேரம் : 7.35 - 9.05
ராகுகாலம் : 1.35 - 3.05
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

கௌரவமான மனிதர்களின் மத்தியில் வார்த்தை முத்திரையிடப்பட்ட பத்திரமாகும்.

# ஆங்கில ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்

தென்மராட்சி,ஓக.21

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாகக் கடமையாற்ற விரும்பும் தகுதியானவர்களிடமிருந்து வலய அலுவலகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆங்கிலமொழிப் பட்டம் பெற்ற பட்டதாரிகள், ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலமொழிப் பாடத்தில் திறமைச் சித்தி பெற்றோர், ஏற்கனவே வலயப் பாடசாலைகளில் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களாகக் கடமையாற்றித் தற்போது சேவையில் இல்லாதோர், ஓய்வுபெற்ற ஆங்கில பாடப் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 29ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஓ-117)

# பெரும்போக விவசாயத்தை விரிவுபடுத்த நடவடிக்கை

வலிகாமம் தெற்கு,ஓக.21

2002-2003ஆம் ஆண்டு காலப்பகுதியில் பெரும்போக நெற்செய்கையை யாழ்.மாவட்டத்தில் பரந்த அளவில் விரிவுபடுத்த கமநல அபிவிருத்தித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துவருகின்றது.

இது தொடர்பாக ஒவ்வொரு கமநல கேந்திர நிலையங்களிலும் உள்ள விவசாய சம்மேளனங்களூடாக காலபோக பயிர்ச்செய்கை தொடர்பான கூட்டங்கள் நடத்தப்படவுள்ளன.

தரைவழிப்பாதை திறக்கப்பட்டதால் விவசாய உள்ளீட்டு பொருள்களை குறைந்த விலையில் விரைவாகக்கொண்டு வரவும், உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்தவும் வாய்ப்பு உருவாகியுள்ளது.

இம்முறை யாழ்.மாவட்டத்தில் கடந்த காலங்களில் செய்கை பண்ணப்படாதிருந்த பல காணிகளை செய்கைக்கு உட்படுத்த விவசாயிகள் பலர் முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஓ-152)

# பிரிட்டிஷ் எம்.பிக்கள் குழு நாளை யாழ். விஜயம்

கொழும்பு,ஓக.21

கொழும்புக்கு கடந்த ஞாயிற்றுக் கிழமை வந்துசேர்ந்த பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர் குழு நாளை வியாழக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டு நிலைமைகளை நேரில் அறியவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் இக்குழு தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், படை அதிகாரிகள், ஐ.நா மற்றும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகள், பிரதேச செயலர்கள் ஆகியோரையும் சந்திக்கவிருக்கிறது.

இக்குழுவில் கெவின் பறொன் (தலைவர்), டேவிட் பொறன, பறொனெஸ் பிளதர், ஜேம்ஸ் கிறே, ஜோன ஹெரப்பெலி, கிளையர் வாட், ஹெலன் ஹெவூட் ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடம்பெற்றுள்ளனர்.

இவர்கள் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ,வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ, சபாநாயகர் ஜோசப் மைக்கேல் பெரேரா ஆகியோரை கொழும்பில் சந்தித்துப் பேசவிருக்கின்றனர்.

நோர்வே அனுசரணையுடன் ஆரம்பிக்கப்படவிருக்கும் சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக இவர்கள் இங்கு கேட்டறிவர். (ஓ-3)

## கசிப்புவைத்திருந்த நபருக்கு அபராதம்

யாழ்ப்பாணம்,ஓக.21

கசிப்பு வைத்திருந்த நபர் ஒருவருக்கு யாழ்.நீதிமன்றினால் 42 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

குருநகர், பாங்ஷால் வீதியைச் சேர்ந்த அந்த நபர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து 40 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் 2 ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறு யாழ்.நீதிமன்ற மேலதிக நீதிவான் திருமதி ச.இளங்கோவன் உத்தரவிட்டார் (ஓ-10)


கலைஞர் "தமிழ்க் கலைக்காவலன்" செல்லையா மெற்றாஸ்மயில்

## கௌரவிப்பு விழா

எம்மால் ஒழுங்குசெய்யப்பட்ட மேற்படி மாபெரும் விழா *07-09-2002 சனிக்கிழமை யா/ இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில* இடம்பெறவிருக்கிறது.

இந்த விழாவை நடத்த ஏற்கனவே பலர் பங்கு கொண்டுள்ளனர். மேலும் யாராவது ஏதாவது பங்குகொள்ள விரும்பினால் பின்வரும் விலாசத்துடன் தொடர்புகொள்ளவும்.

**திரு.பொன்.தர்மேந்திரன்,** அமைப்புக்குழுத் தலைவர்
(7277) இல.10, செல்லர் லேன், செம்மணி வீதி, நல்லூர்.



## தேவை

பான்ஸிப் பொருள் விற்பனையில் அனுபவம் மிக்க/பழக விரும்பும் பெண் பிள்ளைகள் தேவை.

☞ இன்று (21.08.2002) புதன் பிற்பகல் 3.00 - 6.00 மணிக்குள் தொடர்புகொள்ளவும்.

**வைத்தீஸ்வரன் மெடிக்கல்**
462, ஆஸ்பத்திரி வீதி,
(7165) யாழ்ப்பாணம்.



## A/L

**A/L** வர்த்தகப் பிரிவில் சிறப்புச்சித்தி பெற்றவர்களுக்கு புல்மைப்பரிசு!

பெறுமதி ரூபா 1,12,500.00
கடன்வசதி ரூபா 2,50,000.00
சர்வதேச ஆங்கில B.B.A., B.Sc., CIMA, ACCA, MCIM, ABE படித்து மாதம் ரூபா 6,00,000.00 சம்பளமாகப் பிறதேசத்தில் பெறமுடியும்.

விவரங்களுக்கு:
**திருஞானாஸ் கட்டடம்**
(மத்திய பேருந்து நிலையமுன்பாக)
141, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். (7194)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 03 - 04 - 1920



உதிர்வு 22 - 07 - 2002

### அமரர் கனகரட்ணம் மனோன்மணி


*திதி:21.08.2002*

எம் குடும்பத்தின் அன்பு மலராய் மிளிர்ந்து
உடன் பிறப்பு, உறவுகள், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் எல்லோருக்கும் அன்பு மணம்
பரப்பி எமை இனிதே வாழவைத்த எம் குலவிளக்கு
அணைந்து குமரனடி தேடியதோ?

*க.சிவகாருணியம்,*
*பிரம்படி ஒழுங்கை,*
*கொக்குவில்.*

*பிரிவால் துயருறும்:*
சகோதரன், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள். (7193)


ஹரி ஓம் நாராயணாய நம



அளவெட்டி ~ நாகேஸ்வரம்
## ஸ்ரீ நாகவரதநாராயணர் தேவஸ்தானம்
## மஹோற்சவ விஞ்ஞாபனம்

### 22.08.2002 - 02.09.2002

| | |
|---|---|
| கொடியேற்றம் : | 22.08.2002 வியாழன் முற்பகல் 11.30 மணி |
| கைலாசவாகனம் : | 29.08.2002 வியாழன் மாலை 6.00 மணி |
| சப்பறம் : | 30.08.2002 வெள்ளி மாலை 6.00 மணி |
| தேர் வீதிவலம் : | 31.08.2002 சனி முற்பகல் 11.00 மணி |
| உறியடி உற்சவம் : | 31.08.2002 சனி பிற்பகல் 5.30 மணி |
| ஸ்ரீ ரங்கநாதர் பாதபூஜை : | 01.09.2002 ஞாயிறு முற்பகல் 8.30 மணி |
| தீர்த்த உற்சவம் : | 01.09.2002 ஞாயிறு முற்பகல் 11.00 மணி |
| ஆஞ்சநேயர், வைரவர் பொங்கல் அபிஷேகம்: | 02.09.2002 திங்கள் முற்பகல் 8.30 மணி |
| திருக்கல்யாணம் : | 02.09.2002 திங்கள் பிற்பகல் 3.00 மணி |

### விழாக்கால நேர ஒழுங்குகள்

காலை 7.30 மணி பூசை
காலை 8.30 மணி அபிஷேக பூசைகள்
மு.ப. 10.30 மணி தம்பபூசை
மு.ப. 11.00 மணி கூட்டுப்பிரார்த்தனை
மு.ப. 11.45 மணி வசந்தபூசை
பி.ப. 3.00 மணி கலை நிகழ்ச்சிகள்
பி.ப. 4.45 மணி தம்பபூசை
பி.ப. 6.30 மணி வசந்தபூசை

இங்ஙனம்
**நாகேஸ்வரம், அளவெட்டி.** பொறுப்புரிமை பரிபாலன சபை

விளம்பர அனுசரணை: **கல்யாணி கிறீம் ஹவுஸ்**
(7224) 73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



# மங்களகரமான திறப்புவிழா



## தில்லையம்பதி மோட்டோர்ஸ்

**அன்புடையீர்!**

இன்று (21.08.2002) புதன்கிழமை நண்பகல் 12.01 மணிமுதல் 12.35 மணிவரையுள்ள சுபமுகூர்த்த நல்வேளையில் "*தில்லையம்பதி மோட்டோர்ஸ்*" எனும் ஸ்தாபனத்தை யாழ்ப்பாணம், இல.236, ஸ்ரான்லி வீதியில் திறந்து வைப்பதில் நாம் பெரு மகிழ்ச்சியடைகின்றோம்.

எமது சேவைகளாவன: ✦ நீர் இறைக்கும் இயந்திர உதிரிப்பாகங்கள்
✦ மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள்.

~ தில்லையம்பதி மோட்டோர்ஸ்
(7276) இல.236, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


## ஆறாம் ஆண்டு நினைவு

மலர்வு 1976 - 10 - 19



உதிர்வு 1996 - 08 - 21

### செல்வி செல்வரட்ணம் றஜனி


*(யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவி - A/L 1995 வர்த்தகப்பிரிவு)*

*"பல்கோடி உண்டேனும் உனை இழந்தோம்*
*எம் வாழ்வையே இழந்தோம்"*
**எம் வாழ்வில் நித்திய லக்ஷ்மியானவளே - நீ**
**என்றும் உன் ஒளியுடன் கூடி வாழக்கடவோம் - நாம்.**

- குடும்பத்தினர்.

*இல.256, நாவலர் வீதி,*
*இலுப்பையடிச்சந்தி, யாழ்ப்பாணம்.* (7264)

## 13ஆம் ஆண்டு நினைவலைகள்







அமரர்
**கதிர்காமத்தம்பி இரவீந்திரதாஸ்**
(ரவி)
14.01.1958

அமரர்
**கதிர்காமத்தம்பி இராதாகிருஷ்ணன்**
(கண்ணன்)

அமரர்
**நாகமணி தில்லைநாதன்**
(நாதன்)
30.03.1959

ஆண்டவன் படைப்பில்:
22.03.1962
அந்நியன் அழிப்பில்: 21.08.1989
திதி:27.08.2002

*ஆமிப்பசிக்குங்கள் ஊனுடலை வழங்கிவிட்டு*
*ஆவி பிரிந்தின்று பதின்மூன்று ஆண்டாச்சு*
*சாவில் ஒன்றாகி சரித்திரம் படைத்தீர்கள்*
*நினைவில் நிற்கின்றீர் நீங்காது உம் நினைவு*
*ஆண்டுகள் பல கடந்தும் ஆறாது எம் துயரம்*
*நாதன், ரவி, கண்ணன் உங்களுக்கு அஞ்சலிகள்!*

*வத்தனை,*
*புலோலி மேற்கு, பருத்தித்துறை.* (7196)

- குடும்பத்தினர்.

# கைப்பை விவகாரத்தினைச் சட்டத்திடம் விட்டு பொதுமக்கள் நலனை அரசு கவனிப்பது நன்று

**ஜனாதிபதிக்கும் அமைச்சரவைக்கும் இடையே உருவான முறுகல் நிலை தற்போது மேலும் வலுவடைந்து வருகிறது. இந்த விடயத்தை அரசமைப்பு மற்றும் அரசியல் கண்ணோட்டத்துடன் ஆராய்கிறார் அரசமைப்பு வல்லுநரான சட்டத்தரணி கோமின் தயாசிறி. "லங்காதீப" பத்திரிகையில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

தற்போது நாட்டில் குழப்பமான அரசியல் நிலைமையே காணப்படுகிறது. அமைச்சரவைக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் சட்டப் பிரச்சினைகள தொடர்பாக காரசாரமான கடிதப் போக்குவரத்துகள் இடம்பெறுகின்றன. இந்நிலையில் அரசியல் மற்றும் அரசமைப்புத் தொடர்பாக சிக்கல்கள் வலுவடைந்து வருகின்றன. இவை குறித்து நாங்கள் ஆச்சரியப்படத் தேவையில்லை. தற்போது நடைமுறையிலுள்ள அரசமைப்புக் காரணமாக இவை அனைத்தும் எதிர்பார்க்கக் கூடியனவே. தற்போது நடைமுறையிலுள்ள அரசமைப்பானது நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதியை மையமாகக் கொண்டு அமைச்சரவை நாட்டை நிர்வகிக்கும் விதத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த அரசமைப்பு நடைமுறையில் இருக்கும்வரை ஜனாதிபதி பதவிக்குரிய விசேட அதிகாரங்கள் தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கும்.

ஜனாதிபதி பதவிக்குரிய அதிகாரங்களுக்கு அடுத்ததாகப் பிரதமருக்கும் அமைச்சரவைக்கும் வெவ்வேறான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. பிரதமரை மையமாகக் கொண்டு பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் எமக்கு வழங்கப்பட்ட அரசியல் அமைப்புமுறை தற்போது நடைமுறையில் இல்லை. நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதி முறையானது ஒரு புதுமையான நடைமுறையாகும்.

அரசமைப்பு விதிகளின்படி அமைச்சரவைக்கு உறுப்பினர்களை நியமிக்கும்போது அமைச்சர் பதவிக்கு நியமிக்கப்படுபவர் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரா? அல்லது இல்லையா? என்பதில் மட்டுமே ஜனாதிபதி கவனம் செலுத்த வேண்டும். இதன்படி ஆளும்கட்சியைச் சேராத ஒரு நாடாளுமன்ற உறுப்பினரைக்கூட அமைச்சராக நியமிப்பதற்கு ஜனாதிபதிக்கு அரசமைப்பின்படி அதிகாரம் உள்ளது. அமெரிக்காவிலும் இதையொத்த நடைமுறையே செயற்படுத்தப்படுகிறது. அமெரிக்காவில் பல சந்தர்ப்பங்களில் குடியரசுக் கட்சி ஜனாதிபதியின்கீழ் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்களும், ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ஜனாதிபதியின் கீழ் குடியரசுக் கட்சி அமைச்சர்களும் பணியாற்றியுள்ளனர்.

லிண்டன் ஜோன்சன் அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவி வகித்தபோது எதிர்க்கட்சியைச் சேர்ந்த திறமைசாலி எனப் பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டவரான ரோபட் மக்னமாரா என்பவர் பாதுகாப்புச் செயலாளராக நியமிக்கப்பட்டார் (இவர் பின்னர் உலக

## மாற்றார் தோட்டத்திலிருந்து...

வங்கியின் தலைவரானார்). வியட்நாம போரை முடிவுக்குக் கொண்டுவந்தவர் இந்த மக்னமாராவே ஆவார். இருப்பினும் தற்போதைய ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் நிர்வாகத்தில், எதிர்க்கட்சியினர் எவரும் அமைச்சராக நியமிக்கப்படவில்லை. இது அமெரிக்காவிலுள்ள நிலைமை.

நீதியான நிர்வாகத்தில் நாட்டைப் பற்றிச் சிந்திக்கும் அரசியல் தலைவர்கள், எதிரான அரசியல் கருத்துக்களைக் கொண்டவர்களையும் அழைத்து நாட்டிற்குப் பணியாற்றுவது மேற்கு நாடுகளில் உள்ள சம்பிரதாயமாகும். ஆனால், சிறிலங்காவில் ஒருவரை ஒருவர் கொன்றொழிக்கும் மோதல்கள் நிறைந்த அரசியல் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நாட்டைப் பற்றிச் சிந்திப்போர் அரிதிலும் அரிது.

தனக்கு நாடாளுமன்றத்தில் அறிஉ ஐந்து பெரும்பான்மை இருந்த வேளையில் - 1978இல் - ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவால் இந்த அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டது. எப்போதும் ஜனாதிபதிப் பதவியும் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலமும் ஒரே கட்சியிடமே இருக்கும் என அன்று ஜே.ஆர். நினைத்திருந்தார். ஆனால் அவர் நினைத்தது தவறு என்பது தற்போது நிரூபிக்கப்பட்டுள்ளது. ஒரு தரப்பிலிருந்து ஜனாதிபதியும் மற்றொரு தரப்பிலிருந்து ஆளும கட்சியும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இருப்பினும் இது தொடர்பாக எதிர்காலத்தில் பிரச்சினைகள் உருவாகக்கூடும் என பல வருடங்களுக்கு முன்னரே காலாநிதி என்.எம். பெரேரா தெரிவித்திருந்தார். பொதுநோக்குடன் இந்த அரசமைப்பை உற்றுநோக்குவோமானால் அரசமைப்பின் விதிமுறைகள் எதைக் கூறினும, ஜனாதிபதியும் பிரதமரும் பலம் வாய்ந்தவர்களாகவே காணப்படுகின்றனர். எவ்வாறு இந்த நிலைமை உருவாகிறது? எந்தவொரு தேர்தலிலும் அறுதி வெற்றியைப் பெறுபவர்கள் எப்போதும் பலம் வாய்ந்தவர்கள் ஆகின்றனர்.

இறுதியாக நடைபெற்ற தேர்தலில

## ஜனாதிபதி ~ அமைச்சரவை இடையே அதிகாரப் போராட்டம் எதற்காக?

வெற்றிபெற்ற கட்சியினரே பலம் வாய்ந்தவர்கள் என்பதே மக்களின் கணிப்பாகும். எனவே கடந்த பொதுத் தேர்தலிலும் அதன்பின்னர் நடைபெற்ற உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களிலும் வெற்றிபெற்ற ஐ.தே.முன்னணியினரே தற்போது பலம்வாய்ந்தவர்கள் என்பதே பொதுமக்களின் எண்ணமாகும். அரசமைப்பின் ஒழுங்குகளின்படி எந்தவொரு நிறைவேற்று அதிகாரமும் ஜனாதிபதிக்கு அளிக்கப்பட்டிருப்பினும் தேர்தல் முடிவுகள் அந்த அதிகாரங்களை இல்லாமல் செய்துவிட்டன. இது தெளிவான அரசியல் நிலைப்பாடாகும்.

1994இல் டி.பி.விஜயதுங்காவுக்கு நிறைவேற்று அதிகாரங்கள் இருந்த வேளையில் பொ.ஐ.முன்னணி நாடாளுமன்றத்திற்கான தேர்தலில் வெற்றி பெற்றது. அப்போது பொதுமக்கள் விஜயதுங்காவின் ஜனாதிபதிப் பதவி குறித்துச் சிந்திக்கவில்லை. அரசை அமைக்கும் கட்சி குறித்தே மக்கள் தீர்மானித்தனர். மக்கள் சக்திக்கு எப்போதும் அரசமைப்பு அதிகாரம் கீழ்ப படிந்தே ஆகவேண்டும்.

இந்த நடைமுறை அனுபவத்தின்படி ஜனாதிபதியின் அதிகாரம் துச்சமாகிறது. இருப்பினும் அடுத்து நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல்களில் பெரும்பான்மைப் பலத்தை பொ.ஐ.முன்னணி பெறுமாயின் அப்போது ரணில் விக்கிரமசிங்க உட்பட ஐ.தே.முன்னணிக்கு உள்ள மக்கள் சக்தி குறையும். ஜே.ஆர். இந்த அரசமைப்பைத் தயாரித்தபோது மக்கள் ஒவ்வொரு தேர்தலிலும் சிந்தித்து செயற்படுவார்கள் என்பதை அவர் சிந்திக்கவில்லை. பதிலாக ஜனாதிபதி பதவிக்கு இவ்வளவு அதிகாரங்கள் இருப்பதால் தொடர்ந்து அந்தப் பதவி தனது கட்சியிடமே இருக்கும் என நினைத்தார். இருப்பினும் மக்கள ஆணை அனைத்தையும் மாற்றி அமைத்துவிட்டது.

இந்த நிலைமையைத் தவிர்ப்பதற்கு நடைமுறைச் சாத்தியமான தீர்வாக, பொதுத்தேர்தலையும் ஜனாதிபதித் தேர்தலையும் ஒன்றாக நடத்தலாம். ஒரேநாளில் இந்தத் தேர்தல்கள் இரண்டும் நடத்தப்பட்டால் செலவுகளையும் மிச்சப்படுத்தலாம். அதேநேரம் இந்த இரு தேர்தல்களிலும் மக்களின் முடிவு ஒரேவிதமாகவே பிரதிபலிக்கும். எனவே இரு கட்சிகளிடையே பிரச்சினைகள் உருவாகுவதற்கு (ஜனாதிபதி, நாடாளுமன்றம்) வாய்ப்புக்கள் ஏற்படாது.

இன்று அமைச்சரவையில் கூட்டுப் பொறுப்பைக் காணமுடியவில்லை. அமைச்சரவை கூட்டுப் பொறுப்புடன் செயற்படுமாயின் அது நாட்டின் அபிவிருத்திக்கு நல்ல வாய்ப்பாக அமையும். எனவே அமைச்சரவைக்கு அரசியலைக் கொண்டு செல்லாமல் நாட்டிற்கு நற்பயன் கிடைக்கும் விதத்தில் ஜனாதிபதியும் பிரதம மந்திரியும் செயற்படவேண்டும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நடவடிக்கைகளை அவதானிக்கும்போது நாட்டில் சமாதானத்தை உருவாக்கி அபிவிருத்தியை மேற்கொள்ள முனைகிறார் என்பது தெளிவாகிறது. சட்டத்தின்மூலம் சுலபமாகத் தீர்வுகாணக்கூடிய பிரச்சினைகளுக்கு ஒவ்வொரு அமைச்சரவைக் கூட்டத்திலும் முக்கியத்துவம் அளித்து அமைச்சரவைக் கூட்டத்தைக் குழப்பியடிக்க ரணிலின் கட்சியினர் முயற்சிசெய்து வருகின்றனர்.

தங்களது அரசியல் லாபங்கள் மற்றும் அதிகார ஆசை காரணமாக காலத்திற்குக் காலம் கட்சிவிட்டுக் கட்சிமாறும் ஒரு சிலரே ஜனாதிபதியுடன் முரண்டு பிடிக்கின்றனர். தங்களைப் பிரபலங்களாகக் காட்டுவதே அவர்களின் நோக்கம். பத்திரிகைகளில் அவர்களது புகைப்படங்கள் வெளிவருவதே அவர்களின் விருப்பமாகும். அமைச்சரவையில் ஐ.தே. கட்சியைச் சேர்ந்த மூத்த உறுப்பினர்கள் இடம்பெற்றிருக்கையில் அக்கட்சியில் புதிதாகச் சேர்ந்த இந்தக் கட்சி தாவும் அமைச்சர்கள் பிரச்சினைகளை உருவாக்குவது தெளிவாகத் தெரிகிறது. இத்தகைய நிலைமைக்கு கட்டுப்போடாவிட்டால், அதனால் ரணில் விக்கிரமசிங்கவுக்கே பாதிப்புகள் ஏறபடலாம்.

ஜனாதிபதி ஏதாவது தவறு செய்திருந்தால் அந்தத் தவறு மறைக்கப்படக்கூடிய ஒன்றல்ல.

ஜனாதிபதி லஞ்சம், ஊழல் மற்றும் மோசடிகளில் ஈடுபட்டிருப்பின் அவை குறித்து நாட்டுமக்களுக்குத் தெரியப்படுத்தப்படவேண்டும். அவற்றை மறைக்க முற்படுவது பொருத்தமற்ற நடவடிக்கையாகும். அதேபோலவே அந்தத் தவறுகளுக்கு, குற்றங்களுக்கு ஏற்றவாறு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஜனாதிபதியும் தனது பதவிக்குரிய கௌரவத்தைப் பாதுகாக்கும் விதத்தில் பேச்சுக்களை மேற்கொள்ளவேண்டும். அண்மையில் பொலன்னறுவையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய ஜனாதிபதி, அமைச்சர்களின் அங்க லட்சணங்களை எடுத்துக்கூறி, நடித்துக் காட்டியுள்ளார். இத்தகைய நடவடிக்கைகளை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. தற்போது நாட்டின் தலைவியாக விளங்கும் ஜனாதிபதியின் இந்தப் பேச்சுகளைக் கேட்கும்போது எமக்கு வெட்கம் ஏற்படுகிறது.

இதற்கிடையில் ஜனாதிபதி இத்தவறை மேற்கொண்டார் என இன்று குற்றஞ்சாட்டும் அமைச்சர்கள் சிலர், முன்னர் ஜனாதிபதியின் அமைச்சரவையில் இடம்பெற்றிருந்ததுடன், ஜனாதிபதியின் அனைத்து யோசனைகளையும் ஏற்றுக்கொண்டுள்ளனர். அதே நபர்கள் இன்று ஐ.தே.முன்னணி அமைச்சரவையில் இடம்பெற்றுள்ளதுடன் ஜனாதிபதி (சந்திரிகா) தவறு இழைத்தார் எனக் கூறுகின்றனர். அந்தத் தவறுகளை அப்போது அங்கீகரித்து அந்த அமைச்சரவையில் (பொ.ஐ.முன்னணி) இடம்பெற்றிருந்த அவர்களுக்கு ஏதாவது விதத்தில் பொறுப்பிருக்கவேண்டும். இருப்பினும் ஜனாதிபதி மேற்கொண்டுள்ள தவறுகளில் இருந்து அவர் விடுவிக்கப்படவேண்டும் என நான் கூறவில்லை. யார் குற்றம் புரிந்தாலும் குற்றம் குற்றமே. அமைச்சர்களின் பேச்சுக்கள் மற்றும் நடவடிக்கைகளைப் போலவே ஜனாதிபதியின் பேச்சுக்கள், நடவடிக்கைகளையும் இந்நாட்டுமக்கள் நன்கு புரிந்துகொண்டுள்ளனர் என்பதை அமைச்சர்களும் ஜனாதிபதியும் புரிந்துகொள்ளவேண்டும்.

அன்றைய அமைச்சரவையில் தனது கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் மட்டுமே பணியாற்றியபடியால் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு ஏகபோக அதிகாரம் இருந்தது. ஆனால் இன்று அந்த நிலைமை இல்லை.

தனது கைப்பைக்குள் குண்டு கொண்டு வந்திருப்பதாக அமைச்சர் ரவி கருணாநாயக்கா குற்றம் சாட்டியதாகவும், எனவே அவருடன் அமைச்சரவையில் தன்னால் பணியாற்ற முடியாது என்றும் கூறும் ஜனாதிபதி, அமைச்சர் ரவி கருணாநாயக்காவை அமைச்சரவையில் இருந்து நீக்குமாறு பிரதமர் ரணிலிடம் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்தே புதிய அரசமைப்புப் பிரச்சினைகள் உருவாகின. அமைச்சர்களை நியமிப்பது மற்றும் நீக்குவது தொடர்பான அதிகாரங்கள அரசமைப்பு ரீதியாக ஜனாதிபதிக்கு உண்டெனினும், தற்போதைய சூழ்நிலையில் அமைச்சர்களை நீக்கினால் அல்லது புதிதாக நியமித்தால் நடைமுறைச் சிக்கல்கள் உருவாகக்கூடும். அவ்வாறு அமைச்சர் ஒருவர் புதிதாக நியமிக்கப்பட்டால் அந்த அமைச்சரின



சட்டத்தரணி
கோமின் தயாசிறி

அமைச்சிற்குத் தேவையான நிதியை நாடாளுமன்றம் ஒதுக்காமல் விடக்கூடும். அப்போது குறித்த அமைச்சர் செயலற்றவராகிறார். அமைச்சர் ரவி கருணாநாயக்காவுக்கும் தனக்கும் இடையேயான சொந்தப் பகைமை காரணமாகவே அவரை அமைச்சர் பதவியில் இருந்து நீக்குமாறு ஜனாதிபதி கோரியுள்ளார். இது நாட்டுமக்களின் தேவைகள் கருதி விடுக்கப்பட்ட கோரிக்கை அல்ல. சொந்தப் பகைமை காரணமாக அமைச்சர்களை ஜனாதிபதி நீக்க முயல்வதை மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அவ்வாறு அமைச்சரை நீக்குவதற்கு அரசமைப்பு ரீதியாக ஜனாதிபதிக்கு அதிகாரம் இருப்பினும் அது தவறான நடவடிக்கையாகவே அமையும்.

கைப்பைப் பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதி ஒரு செயலை மேற்கொண்டிருக்கலாம். அமைச்சரவைக் கூட்டத்தில் இந்தக் குற்றச்சாட்டு எழுப்பப்பட்டபோது தனது கைப்பையைத் திறந்து அதை அமைச்சர்களிடம் காட்டியிருந்தால், ரவி கருணாநாயக்காவால் எழுப்பப்பட்ட குற்றச்சாட்டு அவரையே திருப்பித் தாக்கியிருக்கும். ஆனால் ஜனாதிபதி அவ்வாறு நடந்துகொள்ளவில்லை. எனவே ஜனாதிபதி அந்த இடத்திலே பிரச்சினைக்குத் தீர்வினைக் காணாது, பின்னர் அதுகுறித்து பல்வேறு கருத்துக்களைத் தெரிவிக்க முற்படுவது நியாயமற்றதாகும். கடந்த சில நாள்களாக அமைச்சரவைக் கூட்டங்களில் ஜனாதிபதியின் கைப்பை மற்றும் அவரால் கொள்வனவு செய்யப்பட்ட சொகுசு வாகனங்கள் பற்றிய பிரச்சினைகளே முக்கிய இடத்தைப் பிடித்துள்ளன. நாட்டுமக்கள் இவை குறித்து என்ன நினைப்பார்கள் என்பது குறித்து ஒரு மதிப்பீடும் அற்ற அரசியல்வாதிகள் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

இதற்கிடையில், இந்த விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையே கடிதப் போக்குவரத்துக்கள் ஆரம்பமாகியுள்ளன. ஏற்கனவே கூறியுள்ளபடி சுயவிருப்பத்தின் பேரில் ஜனாதிபதிக்கு அமைச்சர்களை நீக்கும் அதிகாரம் அரசமைப்பு ரீதியாக இருப்பினும் அதை நடைமுறைப்படுத்துவதிலுள்ள சிரமங்களையே இக்கடிதப் போக்குவரத்து எடுத்துக் காட்டுகிறது.

நாட்டின் முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதிலேயே ஜனாதிபதியும் பிரதமர் உட்பட அமைச்சரவையும் கவனம் செலுத்தவேண்டும். சொகுசு வாகனப் பிரச்சினை மற்றும் கைப்பை விவகாரங்களை சட்டத்திடம் கையளித்துவிட்டு, அமைச்சர்கள் நாட்டின் அபிவிருத்தி தொடர்பாக தற்போதையதைவிட மேலும் அக்கறை செலுத்தவேண்டும். எவராயினும் ஒழுக்கக் கட்டுப்பாட்டுடன் செயற்படுவது மிகவும் முக்கியமானதாகும். அவ்வாறு செயற்படாவிடின் அதனால் பாதிப்படையப்போவது அரசியல்வாதிகளே ஆவர். அதேபோலவே நாட்டிற்கும் பாதிப்பு ஏற்படும். அரசியல் வாதிகள் தத்தமது அரசியல் பிணக்குகள் காரணமாக இந்த நாட்டையும் நாட்டின் ஜனநாயக மரபுகளையும் செல்லாக்காசாக்க முயலக்கூடாது. ★

தமிழில்: கஜனி

---

## வாசகர் திருமுகம்

### கால்நடைகளை மீட்டுவர அனுமதி கிடைக்குமா?

தென்மராட்சியின் தெற்குப் பகுதிகளான தனங்கிளப்பு, மறவன்புலோ, கைதடி, நாவற்குழி ஆகியன தொடர்ந்தும் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளன. இதனால் இப்பகுதிகளைச் சேர்ந்த மக்களின் கால்நடைகள் கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக அந்தப் பகுதிகளிலே சிக்குண்டுள்ளன.

தென்மராட்சி தெற்குப் பிரதேச மக்கள் பிரதான தொழிலாக விவசாயத்தை மேற்கொள்கின்றனர். இதனால் இங்கு கால்நடைகளை வளர்ப்பதும் இப்பகுதி மக்களின் பிரதான தொழிலாக இருந்தது. இதன்மூலம் இப்பகுதி மக்களின் நிறையுணவுத் தேவையையும் (பால், இறைச்சி), விவசாயத்துக்குத் தேவையான இயற்கைப் பசளைகளையும், போக்குவரத்து தேவையையும் ஓரளவு பூர்த்திசெய்யக்கூடியதாக இருந்தது.

12.12.1999இல் இடம்பெற்ற இடப்பெயர்வினால் மக்கள் தமது இருப்பிடங்களில் இருந்து வெளியேறியதுடன் தமது ஜீவனோபாய ஆதாரங்களைக் கைவிட்டுச்செல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதன்மூலம் மக்களின் சொத்துடைமையில் ஒரு பகுதியைக் கைவிடவும் நேர்ந்தது.

புரிந்துணர்வு உடன்படிக்கையை அடுத்து கைதடி, நாவற்குழிப் பகுதியில் 2:3 வீதமான வயல்களில் விவசாயம் செய்வதற்கு அனுமதி கிடைத்துள்ளது.

எனவே, மேற்படி பகுதிகளில் நெற்பயிர்ச்செய்கை ஆரம்பமாகி பயிர்கள் வளர்ச்சியடையும் வேளையில் தனங்கிளப்பு, மறவன்புலோ பகுதிகளில் சிக்கியுள்ள கால்நடைகளால் அவை அழியும் நிலை ஏற்படலாம்.

மேற்படி பகுதிகளில் சிக்கியுள்ள கால்நடைகளை மீட்டுவர படையினர் அனுமதிக்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

*தனங்கிளப்பு.* *தி.விமலதாஸ்.*

### நிவாரணத்துக்கு வழங்கப்படும் பால்மா தரமானதா?

நிவாரணத்திற்கு வழங்கப்படும் பால்மா தரங்குறைந்து காணப்படுவது வழமை. இம்முறை வழங்கப்பட்ட பால்மா பெட்டிகள் அனைத்தும் பிரிக்கப்பட்டுக் காணப்படுகின்றன. வெளிப் பெட்டிகளில் மட்டும்தான் உபயோகத்திற்கான காலம் முதலியன அச்சிடப்பட்டிருப்பதால் உள்ளே இருக்கும் பொதிகள் மாற்றப்பட்டிருப்பதற்குச் சந்தர்ப்பம் உண்டு என நான் எண்ணுகிறேன். எல்லாப்பெட்டிகளும் ஏன் உடைக்கப்பட்டிருக்கின்றன? என்பதை சம்பந்தப்பட்டவர்கள் ஆராய்வது நல்லது.

*கொக்குவில்.* *வை.சந்திரபாலன்*

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

இரண்டு இணைப்புள்ள தொலைபேசி (Radio Line) உடனடியாகத் தேவையாக உள்ளது. விலையுடன் தொடர்புகொள்ளவும். தொடர் விளம்பரதாரர் இல. 1604, C/0 உதயன், யாழ்ப்பாணம். (7248)

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, கனடா (Canada) பிரஜாவுரிமை உள்ள, 31வயதுடைய மணமகனுக்கு அழகான, படித்த மணப்பெண் தேவை. திருமணம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்று மணமகள் அழைத்துச் செல்லப்படுவார். ஜாதகக் குறிப்பு, குடும்ப விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல.1606, மே/பா உதயன். (7259)

யாழ்நகர உயர் சைவ குடும்பத்தைச் சேர்ந்த, தனியார் நிறுவனத்தில் சேவையிலுள்ள 32 வயதுடைய மகனுக்கு பெற்றோர் கல்வித் தகைமையுடைய மணமகளை தேடுகின்றனர். குறிப்பு: தரகர் தேவையில்லை. தொடர்பு:விளம்பர இல.1589 மே/பா உதயன். (6784)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த ரேவதி நட்சத்திரம், லண்டனில் நெற்வேக் பொறியியலாளராகவும் சொந்தமாகத் தொழில் ஸ்தாபனம் நடத்தும் மணமகனுக்கு 27 வயதுக்குட்பட்ட கல்வியறிவுள்ள அழகிய மணமகள் தேவை. தொடர்பு:ஸ்ரீ லக்ஷ்மி திருமண சேவை, 50-2-2 ஒெக்கிளமேசன் வீதி, கொள்பிக் கட்டடம், புறக்கோட்டை, கொழும்பு -11 T.P.: 446125, 932742, Fax 932742. (7230)

1976 மிருகசீரிடம் 3ஆம் பாதம், 1968 அத்தம் முதலாம் பாதம் உடைய செவ்வாய்க்குற்றமற்ற, அரச திணைக்கள உத்தியோகஸ்தர்களுக்கு பாவம் 15இற்குக் குறைந்த மணப் பெண்கள் தேவை. A/L படித்தவர்கள் விரும்பத்தக்கது. தொடர்பு: இ.பாஸ்கரன், திருக்குமரன் மங்கள ஏஜன்சி, மஹாலட்சுமி தேநீர்க்கடை அருகில், கொக்குவில். (7263)

1972ஆம் ஆண்டு உத்தராடம் நட்சத்திரம் தற்போது LONDONஇல் தங்கியுள்ள DIPLOMA IN ELECTRICAL AND ELECTRONIC ENGINEERING தகைமையுள்ள மணமகனுக்கு தங்குமிட உரிமையுடன் SPONSOR செய்யக்கூடிய பொருத்தமான மணமகள் தேவை. தொடர்பு: வைவிஜய பாஸ்கரன், இல. 39, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (7303)

### மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பம், வயது 36, வசதியான வீடு, பல காணிகள், நீர்ப்பாசன வயல் 25ஏக்கர், வங்கி வைப்பிற்கும் உரித்தானவர், ஆண் சகோதரர்கள் வசதியானவர்கள். படித்த, தொழில் புரியும் மணமகள் தேவை. முழு விவரங்களுடன் தொடர்புகொள்ளவும். விள.இல. 1607, மே/பா. உதயன். (7272)

### அபூர்வஜோதிடம்

சித்தர் ஏட்டு நவீன ஆய்வின் அடிப்படையில் தீராத நோய் தீர்த்து வைத்தல், அதிர்ஷ்ட பலன் பார்த்தல், இவ்வாரம் மட்டும் தினமும் 8.30-12.30 p.m. தொடர்பு: அடியபாதம் வீதி, சரஸ்வதி மில் லேன், கொக்குவில் கிழக்கு. (7258)

### சோதிடம்

கல்வியில் சித்தியுண்டா? உயர் கல்வி உண்டா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? வியாதி நீங்குமா? விவாகம் நடைபெறுமா? வீடு, காணி வாங்கலாமா? கேட்டுப்பாருங்கள்! டாக்டர் த.சிவானந்தன் பிரபல சோதிடர், ஆனந்தா சோதிட நிலையம், 264, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (7293)

### கோழித்தடுப்பு மருந்துகள்

C.R.D.Gampora, Raniket தடுப்பு மருந்துகள் ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 8.00 மணிக்கு விநியோகிக்கப்படும். நிற போத்தலும் பணமும் கொண்டு வரவும். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (7253)

### விற்பனைக்கு

PRIMA BROILER குஞ்சுகள், PRIMA லேட்டுக் குஞ்சுகள் 22.08.2002 வியாழக்கிழமை மாலை பெற்றுக்கொள்ளலாம். முன்கூட்டியே பதிவுசெய்யவும். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.(7078)

வீட்டுத் தளபாடங்களும், குளிர்சாதனப்பெட்டி மற்றும் வீட்டுப் பாவனைப் பொருள்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 561, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் (இந்து ஆரம்ப பாடசாலை அருகில்). (7299)

தாவடி தெற்கில் பாடசாலைகள், பிரதான வீதிகள், ஆலயங்களிற்கு அண்மித்ததாக, நானாவித தேவைகளுக்கேற்ற, விசாலமான காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சி.பத்மநாதன், சுதுமலை வீதி, தாவடி தெற்கு. (தினசரி பி.ப. 5.00இற்கும் 7.00இற்கும் இடையில்). (7283)

இந்தியாவில் ஒலிப்பதிவு செய்யப்பட்ட தொல்புரத்து வழக்கம்பரை மகாமாரியம்மன் நாயகி பாடல்கள் கொண்ட ஒலிப்பதிவு நாடா விற்பனைக்கு சொற்ப பிரதிகள் உண்டு. தொடர்பு: சிவஸ்ரீ சு.சுந்தரராசக்குருக்கள், வழக்கம்பரை, சுழிபுரம். (C/23237)

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி,நல்லூர்.(7252)

Panasonic (பனசொனிக்) NV.SD 220 டெக்கும், Sony (சொனி) 14" T.Vயும் 30 திரைப்பட பிரதிகளும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ப.யோகராஜா, 2ஆவது மதவடி, சந்நிதி றோட், அச்சுவேலி. (7319)

### காணி விற்பனைக்கு

நல்லூருக்கண்மையில 1½ பரப்பு காணித்துண்டு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: த.இராசரத்தினம், இல.8, சங்கிலியன் வீதி, நல்லூர். (7270)

### தவறிவிட்டது

லீனவஸ் போல்டிங் ஆண்கள் இல்லம், வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் நிரஞ்சதுர்க்கன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை, பாடசாலை அடையாள அட்டை என்பன வட்டுக்கோட்டைப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (7306)

கரவெட்டி கிழக்கு வளர்மதியைச் சேர்ந்த வைரமுத்து வேலுப்பிள்ளை என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.592603489V), விசேட அடையாள அட்டை, வங்கி அடைவுப் பற்றுச் சீட்டு என்பன நெல்லியடிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலை மேற்பார்வையாளர் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (7317)

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

பெறுமதி வாய்ந்த பொருள்களுடன் கூடிய ஒரு சிறிய கைப்பை எமது சிற்றூர்தி சேவைச் சங்கத்தில் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். (C/23242)

### தேவை

கந்தர்மடத்தில் இயங்கும் கொம்பியூட்டர் நிறுவனத்திற்கு Type Setting (தமிழ்) தெரிந்தவர்கள் (ஆண்/பெண் இருபாலரும்) உடன் தேவை. இன்று காலை 9.00 - 4.00 மணிக்குள் தொடர்பு கொள்ளவும்.
**35/8 குமாரசாமி வீதி, கந்தர்மடம்.** (7307)

## D.சேனாதிராஜா அன் சன்ஸ்

கண்பரிசோதித்துக் கண்ணாடி வழங்குமிடம், செயற்கைப் பற்கள் கட்டுமிடம், மிதப்புப் பற்களுக்குக் கிளிப் செய்யுமிடம். தினமும் இலவச கண் பரிசோதனை, மூக்குக் கண்ணாடிகளுக்கு 25% விசேட கழிவு. மேலும் ரூபாய் 1500/-இற்கு மேல் மூக்குக் கண்ணாடிகளைக் கொள் வனவு செய்பவர்களுக்கு பெறுமதி வாய்ந்த ஒரு SUN GLASS இலவசமாக வழங்கப்படும்.

மூக்குக் கண்ணாடிகளுக்கு பல விசேட சலுகைகளை அறிமுகப்படுத்திய நாம் தற்போது பற்களுக்கு விசேட சலுகையில் குறைந்த விலைகளை அறிமுகப்படுத்துகின்றோம். மிதப்புப் பற்களுக்கான CLIP Rs.1000/-,
FULL SET ORIGINAL JAPAN TEETH Rs.4000/,
ONE TOOTH ORIGINAL JAPAN TEETH Rs.300/-
மேலும் பல சலுகைகள் - நேரில் வாருங்கள்!

இல.18A, யாழ்.பஸ் நிலையம்,
(பஸ் நிலையத்தில் கிழக்குப் பக்கமாக உள்ள கடைகள் வரிசையில்)
யாழ்ப்பாணம். (7314)
உரிமையாளர்
சே.ஆனந்தராஜா

## 25ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 06 - 01 - 1911



உதிர்வு 21 - 08 - 1977

### திருமதி தெய்வானைப்பிள்ளை சபாநாயகம்

ஆண்டுகள் இருபத்தைந்து சென்றாலும்
உங்கள் அன்பான நினைவுகள் என்றும்
எம்மை விட்டுப் பிரியாது!
*என்றும் உங்கள் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கும்:*

வட்டுக்கோட்டை. (7298) - குடும்பத்தினர்.

## உபாகர்மம்

**இணுவில் காயத்ரீ பீடத்தில்**

உபாகர்மம் நாளை (22.08.2002) வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு நடைபெறும்.
பஞ்சபாத்ரம் கொண்டுவரவும்.

- சிவஸ்ரீ
தா.மகாதேவக் குருக்கள்.

(7313)

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

குவலயம் மகிழ 13 - 06 - 1981



இதயம் நெகிழ 25 - 08 - 1999

### செல்வி திருமகள் கனகசபை

வித்தாகி சொத்தாகி முத்தாகி வந்த திருமகளே!
பாதிவழியில் எம்மைப் பரிதவிக்க விட்டு எங்கம்மா சென்று விட்டாய்?
உடலினிலே உறுதியில்லை; உள்ளத்திலே தெளிவில்லை
மனதினிலே அமைதியில்லை; மகளே உன்னை மறக்கவே முடியவில்லை!
ஆண்டாண்டு சென்றாலும் ஆறாது எம்துயரம்;
மாறாது உம் நினைவு.

ஓம் சாந்தி!

மீசாலை வடக்கு, மீசாலை. (7297) அம்மா, அப்பா, அண்ணாமார், தம்பிமார்.

## நெஞ்சம் மறவாத ஓராண்டு நினைவலைகள்

பிறப்பு 24 - 10 - 1947



இறப்பு 01 - 09 - 2001

### அமரர் ஆண்டி சிவலிங்கம் (சண்முகம்)

*(செழியன் சவுண்ட்ஸ் ஒலிபெருக்கி உரிமையாளர்)*
திதி: 21-08-2002

*சந்நிதி முருகனின் தேர்*
*உருண்டோடிய தினம்*
*எங்கள் தெய்வத்தின்*
*உயிர் பறந்தோடியதோ?*
*சந்நிதி முருகனின்*
*தேர் பவனிவரும் வேளையெல்லாம்*
*உங்கள் நினைவு எம்மைத்*
*தொடர்ந்து கொண்டே இருக்கும்.*

*செழியன் சவுண்ட்ஸ், கெருடாவில், தொண்டமானாறு.* (7304) ஆறாத்துயரில் தவிக்கும்: குடும்பத்தினர்.

## GOLDEN OPPORTUNITY FOR GRADE FIVE (5) STUDENTS IN JAFFNA

**"ELEMENTARY ENGLISH LANGUAGE SKILLS ACQUIRING COURSE" "EELSAC" (ENGLISH MEDIUM)**

THE COURSE IS BASED ON GRADING SYSTEMS — WE ARE COMMENCING IN SEPTEMBER - 2002

*FOLLOWING SUBJECTS:* (1) ENGLISH LANGUAGE (2) ENGLISH LITERATURE (3) MATHEMATICS (4) ENVIRONMENTAL STUDENTS

DURATION:- 6 MONTHS

APPLICATIONS ARE INVITED ON OR BEFORE 01.09.2002 — ADMISSIONS ARE LIMITED

*COURSE TEACHERS:-* (1) Mr.S.SRIKUMAR B.Sc. DIP. IN ED., DIP. IN ENGLISH (2) Mr.S.MAHESWARAN SPECIAL ENGLISH TRAINED

FOR FURTHER DETAILS, PLEASE CONTACT:
Mr. S.JEYABALASINGHAM.
61, MANALTHARAI LANE, THIRUNELVELI. (7300)

DIRECTOR, GNANAKKULANTHAI EDUCATIONAL COUNCIL
19, SIVAN VEETHY, THIRUNELVELI.

### சுதந்திரத்தின் பின்னர் இப்போதுதான்

# நேர்மைமிக்க சமாதான முயற்சியால் நாடு அபிவிருத்தி அடைந்து வருகிறது!

## அமைச்சர் கரு ஜெயசூரியா உரை

திருகோணமலை,ஓக.21

தற்போதைய தற்காலிக சமாதானமானது நிரந்தர சமாதானமாகப் பரிணமிக்கவேண்டும். இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்து 54 ஆண்டுகளுக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட நீதியான சமாதான முயற்சி இதுவாகும். இதனால் இன்றுதான் நாட்டில் அபிவிருத்தி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சமீபத்தில் திருகோணமலை வர்த்தகக் கண்காட்சியில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய மின்சக்தி, எரிசக்தி அமைச்சரும் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவருமான கரு ஜயசூரிய குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

"இலங்கை மக்களுக்கு இன, மத பேதமின்றி யாவரும் மனிதர்கள் என்ற நோக்கில் சேவை செய்வதே ஐ.தே.க. அரசின் கொள்கை ஆகும். நாம் அனைவரும் ஒன்றிணைந்துதான் அபிவிருத்தியை எட்டமுடியும். இன்று அனைவரும் இணைந்து நல்லதொரு சூழ்நிலைக்கு வந்துள்ளோம். அதனால், முழு நாடுமே வளர்ச்சிபெறும் என்று நம்பிக்கை உருவாகியுள்ளது.

ஆசியாவிலேயே புத்திக்கூர்மை உடையவர்களைக் கொண்ட ஒரு நாடு இலங்கை. எம்மிடமுள்ள புத்தி சாலித்தனத்தைக் கொண்டு எமது நாட்டை அபிவிருத்தி செய்யமுடியும். அதற்குத் தேவையானது சமாதானம். அத்தகைய சூழ்நிலை இப்போது ஏற்பட்டுள்ளது.

தற்போதைய சமாதான முயற்சி காரணமாக வடக்கு, கிழக்கு எங்கும் செல்லமுடிகிறது.

திருகோணமலையில் உலகப் புகழ்பெற்ற துறைமுகம் உள்ளது. இந்தத் துறைமுகமும் இங்கு காணப்படும் ஏனைய வளங்களும் இலங்கைக்குக் கிடைத்திருப்பது ஒரு வரப்பிரசாதம்தான். துறைமுகம் இருப்பதால் பலரும் திருகோணமலையில் முதலீடு செய்துகொள்ள விளைகின்றனர். வேறு நாட்டில் இப்படியொரு துறைமுகம் இருந்திருக்குமானால் அங்கு பாரிய அளவில் அபிவிருத்தி ஏற்பட்டிருக்கும்.

ஆனால், இங்கு சமாதானம் நிலவாததால் அபிவிருத்தி ஏற்படவில்லை. இப்போது அத்தகைய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது - என்றார் அமைச்சர்.

(ஓ-290)

# இலவச சீருடைத்துணி விநியோகம் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாம்

அரியாலை,ஓக.21

எதிர்வரும் 2003ஆம் ஆண்டிற்கான பாடசாலை மாணவர்களுக்குரிய இலவச சீருடைத் துணிகள் யாவும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாகவே விநியோகிக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது.

வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் இது சம்பந்தமான சுற்றுநிருபம் ஒன்றை யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

பாடசாலை மாணவர்களுக்கான சீருடைத் துணிகள் யாவும் கல்வி அமைச்சினால் சகல பிராந்திய கல்வித் திணைக்களங்களுக்கும் அனுப்பி வைக்கப்படும் என்றும் -

பின்னர் இந்தச் சீருடைத் துணிகள் மாவட்டத்தில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக விநியோகிக்கப்படும் என்றும் - கூறப்படுகிறது.

இலவச சீருடைத் துணிகளைப் பெறுவதற்கு மாணவர்களுக்கு விசேட கூப்பன் அட்டை ஒன்று வழங்கப்படும் என்றும் -

மாணவர்கள் தத்தம் பகுதியில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் அந்த அட்டையைப் பயன்படுத்தி தமக்குரிய இலவச சீருடைத் துணியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் -

தெரிவிக்கப்பட்டது. (ஒ-17)

### முகமாலையில் முதலுதவி சிகிச்சை நிலையம் திறப்பு

தென்மராட்சி,ஓக.21

முகமாலை சோதனை நிலையப் பகுதியில் முதலுதவிச் சிகிச்சை நிலையம் ஒன்றினைப் படையினர் அமைத்துள்ளனர்.

பளைப் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்து வரும் இவ்வேளையில் இங்கு இன்னமும் வைத்தியசாலை வசதிகள் ஆரம்பிக்கப்படவில்லை. ஆகவே இப்பகுதியில் பாம்புக்கடி உட்பட அவசர முதலுதவி தேவைப்படும். பாதிப்புக்குள்ளாகி யாழ்ப்பாணம் எடுத்துச் செல்லப்படும் நோயாளர்களுக்கும், தென்னிலங்கை மற்றும் வன்னிப் பகுதிகளிலிருந்து வரும் பயணிகளில் திடீர் சுகவீனங்கள் மற்றும் விபத்துக்களுக்கு உள்ளாகி வருவோருக்கும் இந்த முதலுதவி நிலையத்தில் சிகிச்சை வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

சோதனை நிலையத்திற்கு அருகில் சிவில் நிர்வாக அலுவலகமும் திறக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-117)

### நாரந்தனை தவறணைத் தாக்குதல்:

# மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகம் விசாரணை

யாழ்ப்பாணம்,ஓக.21

நாரந்தனையில் கள்ளுத் தவறணை ஒன்றினுள் சிவில் உடையில் புகுந்து கடற்படையினர் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படும் சம்பவம் பற்றி மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தினர் விசாரணைகளை மேற்கொள்ள உள்ளதாக மேற்படி அலுவலக இணைப்பாளர் ஆர்.பி.சந்திரசேகர தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலக இணைப்பாளர் ஆர்.பி.சந்திரசேகர மற்றும் மனித உரிமை ஆணைக் குழுவின் விசாரணை அதிகாரி கே.எஸ்.எம்.ரைஸ் ஆகியோர் நேற்றுமுன்தினம் இந்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களைச் சந்தித்து கலந்துரையாடியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதலுக்குள்ளாகியதாகக் கூறப்படும் லோரன்ஸ் - ரவீந்திரன் என்பவரை யாழ் போதனா வைத்தியசாலையிலும், ஸ்ராலின் என்பவரை ஊர்காவற்றுறையிலும் தாம் சந்தித்து உரையாடியதாகவும் -

அவர்கள் இருவரும் தாக்குதல் சம்பவம் தொடர்பாகத் தம்மிடம் முறைப்பாடு செய்துள்ளதாகவும் -

அவர்கள் தெரிவித்தனர்.

அடுத்த வாரமளவில் இச்சம்பவம் தொடர்பாகத் தாம் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும், இச்சம்பவத்தை நேரில் பார்த்தவர்களோ அல்லது இதுபற்றித் தகவல் அறிந்தவர்களோ உடனடியாகத் தமது அலுவலகத்துடன் தொடர்புகொண்டு அது குறித்துத் தெரிவிக்குமாறு ஆர்.பி.சந்திரசேகர மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, கடற்படையினரால் நாரந்தனைக் கிளையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் மூலம் ஊர்காவற்றுறை பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கத்திற்கு சுமார் 11ஆயிரத்து 734 ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாக பொது முகாமையாளரால் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-ரி)



இலங்கை வங்கியின் கிளை திருநெல்வேலியில் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது. இலங்கை வங்கியின் பொது முகாமையாளர் ஜே.எவ்.கை.டி.சில்வா நாடாவை வெட்டி வங்கிக் கிளையைத் திறந்து வைத்தபோது எடுத்த படம். இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்ட மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம், யாழ்.பல்கலைக்கழகத் துணை வேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, இலங்கைவங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் திருமதி.க.துரைராஜா, வங்கிக் கிளையின் முகாமையாளர் ந.ஜெயரட்ணம் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

### கல்விசார் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஓக.21

உலக வங்கியின் ஆலோசகருடனான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலைகளின் அபிவிருத்தி மற்றும் கல்விசார் செயற்பாடுகள் தொடர்பாக இக்கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்படவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள ஐந்து கல்வி வலயங்களின் வலயக் கல்விப் பணிப்பாளர்களையும் இக் கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - அன்றைய தினம் பிற்பகல் 1.30மணிக்கு 1ஏ.பி. தரப் பாடசாலைகள் சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்றும் யாழ்கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது. 1ஏ.பி. தரப் பாடசாலைகளின அதிபர்கள் அனைவரையும் இதில் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப் பட்டுள்ளது. (ஒ-8)

### யாழ்ப்பாணம் வந்த வான் லொறியுடன் விபத்து!

யாழ்ப்பாணம்,ஓக.21

கொழும்பு, கொட்டாஞ்சேனையில் இருந்து யாழ்.நோக்கி பயணிகளுடன் வந்துகொண்டிருந்த வானும் யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற லொறியும் நேற்றுமுன்தினம் பிற்பகல் 2 மணியளவில் ஆனையிறவுப் பகுதியில் மோதுண்டு விபத்திற்குள்ளாகின.

விபத்திற்குள்ளான வானின் சாரதியான கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த யு.கெ.தென்னக்கோன் படுகாயங்களுடன் யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வானில் பயணம் செய்த 14 பயணிகளில் சிலர் சிறுகாயங்களுக்கு உள்ளாகினர்.

வான் தீப்பற்றி எரிந்ததாகவும் - சம்பவ இடத்திற்கு விரைந்த காவல்துறையினர் தீயை அணைக்கும் பணியை மேற்கொண்டனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (ம-3-164)

## நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

(9ஆம் திருவிழா)



### எமக்கருள் புரிவாய் கந்தா!

நல்லையம் பதியிலே மேவி
மக்களுக்கருள் புரிகின்ற
தேவனை, ஈசனார் தெய்வக்
குழந்தையை வணங்குவோருக்குத்
தீயவினை நீங்கும் ~ எல்லாச்
செல்வமும் எய்தும் ~ நன்மை
எல்லாம் கூடும் என்று
நாம் தொழுது வணங்குவோம்!

- கோபாலசர்மா ஹம்ஷத்வனி.
கந்தரோடை.

### தொல்லைகள் தொலைப்பாய்!

கந்தபுராணக் கதாநாயகனே - கந்தனே
தந்தைக்குபதேசித்த சற்குருநாதனே
கலியுக வரதனே உமை மைந்தனே
எமக்கின்னருள் புரிவாய் குகனே.

எல்லையில்லாப் பேரின்பம்தரும்
நல்லைக்கந்தா! கதிர் வேலா!!
தொல்லைகள் தொலைந்து சுகமாய் வாழ
நல்லருள் புரிவாய் நல்லைக் குமரா.

- நயினையூரான்.

### மயிலேறி வருவாய் சரணம்

ஓராறு முகங்களும் இலங்குபொன் முடியும்
காரேறு கடம்பணி குழையும்
கரையேறு முத்தணி மார்பும்
வரையேறு மகர குண்டலமும்
நிரையேறு மணியணி பீதாம் பரமும்
நீரேறு பங்கய பாத மிரண்டும்
நிமிரேறு செவ்வேலுங் கொண்டு
மயிலேறி வலம் வருவாய் சரணம்.

- புஸ்கரணி

### நலங்கள் அருள்வாய்!

*முருகா என்றால் மனம் உருகாதோ*
*குமரா என்றால் குறைகள் தீராதோ*
*அமரர் துயர் தீர்த்த தலைவா*
*வேண்டும் அருள் தரும் வேலா!*
*நல்லைப் பதி உறையும் கந்தா*
*நலங்கள் எமக்கருள்வாய் குமரா!*

- கே.குணசீலன்
சுழிபுரம்.

### துன்பம் துடைத்திடையா?

நல்லை பதி வாழும் நாயகனே!
விக்கினம் தீர்ப்பவனின் சோதரனே!
சூரனை வதை செய்த சுப்பிரமணியனே!
நாமங்கள் பல கொண்ட நாயகனே!
நாடி உன்னை சரண் புகுந்தோம்!
துன்பங்கள் துடைத்திடையா!

-எஸ்.கவிதரன்.

### நாள்குறிப்பாய் கந்தா!

நல்லை நகர்ப்பதியில் நாளும் உனைக் காண்பதற்கு இனி
தொல்லைகள் ஏதுமுண்டோ சொல்லிடுவாய் வேல்முருகா
கல்லையொத்த நெஞ்சங்கள் கட்டவிழ்த்த வன்முறையால்
எல்லையற்ற துன்பத்தை இதுவரை நாம் கண்டிருந்தோம்
வல்லைவெளியும் வண்ணாத்திப் பாலமும் என்றும் நாம்
நல்லையில் உனைக்காண தடையாய் முன் அமைந்ததையா
இல்லை இனித்துன்பம்; விடியலுமே தெரியுதென்ற இன்
சொல்லை நாம் கேட்பதற்கு நாள்குறிப்பாய் மால்மருகா.

- புலோலியூர் கிரி.

### கல், மணல் விலை உயர்வால்

# அரசுக் கட்டடப்பணிகள் குடாநாட்டில் ஸ்தம்பிதம்

.யாழ்ப்பாணம்,ஓக.21

யாழ்.மாவட்டத்தில் கட்டடங்கள் அமைப்பதற்குத் தேவையான பெரிய கற்கள மற்றும் சல்லிக் கற்கள் ஆகியவற்றுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை அடுத்து அரசுக்குச் சொந்தமான கட்டடங்கள் பலவற்றின் கட்டுமானப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசுக்குச் சொந்தமான கட்டடங்களின் கட்டுமானத்துக்கு தேவையான கட்டடப்பொருள்கள் மாவட்ட விலை நிர்ணய சபையினால் நிர்ணயிக்கப்படும் விலைகளுக்கே கொள்வனவு செய்யப்படுவதாகவும் -

தற்பொழுது அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட விலைகளுக்கு கட்டடப்பொருளகளை வாங்க முடியாமையாலேயே வேலைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் - சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

எனவே, இதுவரை காலமும் கட்டடப்பொருள்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலைகளைவிட அதிகவிலைகள் நிர்ணயிக்கப்பட்டாலே அவற்றை வாங்க முடியும் எனவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

மாவட்ட விலை நிர்ணய சபையில் பிரதேச செயலர்கள், கிராம அலுவலர்கள் மற்றும் பொறியியலாளர்கள் ஆகியோரே அங்கம் வகிக்கின்றனர். இந்தச்சபையே மேற்படி பொருள்களுககான விலையை நிர்ணயித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-10)

# தமிழினத்தை அழிக்கும் முயற்சியே கலாசாரச் சீரழிவு நடவடிக்கை!

## அரசியல்துறைப் பொறுப்பாளர் உரை

யாழ்ப்பாணம்,ஓக.21

யுத்தத்தினால் தமிழினத்தை அழிக்கமுடியாது எனக்கண்ட சில விஷமிகள், சில யுத்திகள் மூலம் தமிழினத்தை அழிக்க முயன்றன. அதன் ஒரு அங்கமே கடந்த காலங்களில் எமது தமிழ்மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட கலாசார சீரழிவு நடவடிக்கைகள்.

- இவ்வாறு நேற்றுமுன்தினம் நடைபெற்ற யாழ்மாவட்ட திரைப்பட வழங்குநர் கூட்டுறவுச்சங்கத் தலைமை அலுவலகத் திறப்பு விழாவில் உரையாற்றிய யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில -

'ஓர் இனம் மேன்மை பெறுவது அதனுடைய கலை, பண்பாடு மற்றும் பாரம்பரிய விழுமியங்களைக் கொண்டு தான். எமது தமிழினம் கலை, பண்பாடுகளைப் பேணுகின்ற இனமாகத் தொன்றுதொட்டு இருந்து வருகிறது. எமது கலாசாரத்தை அழிப்பதற்கு பல தீயசக்திகள் முயன்றன. யுத்தத்தினால எம்மை அழிக்க முடியாது எனக்கண்ட இத்தீயசக்திகள்தான் இத்தகைய யுத்திகளைக் கையாண்டன. அதற்கும் எமது மக்கள் ஒருவாறு முகம் கொடுத்து வந்துள்ளனர்.

அதன் ஒரு வெளிப்பாடாகவே இன்று இச்சங்கம் தோற்றம் பெற்றுள்ளது. எமது கலாசாரப் பண்பாடுகளை மேன்மேலும் பேணிப்பாதுகாக்க வேண்டிய பொறுப்பை இச்சங்கம் கொண்டுள்ளது' - என்றார்.

யாழ்.மாவட்ட திரைப்பட வழங்குநர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் தி.ஜீவராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை திரைப்பட வெளியீட்டுப் பொறுப்பாளர் த.செழியன் ஏற்றிவைததார்.

பொதுச் சுடரை யாழ்மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியச் செயலாளர் ப.கனகலிங்கம், யாழ். மாவட்ட நிதர்சனப் பொறுப்பாளர் டயஸ ஆகியோர் ஏற்றினார்கள்.

தலைமை அலுவலகத்தை மனித முன்னேற்ற நடுநிலை இயக்குநர் சி.ஜி.ஜெயக்குமார் திறந்துவைத்தார். அலுவலகப் பெயர்ப் பலகையை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ.கனகசபாபதி திரைநீக்கம் செய்துவைத்தார். யாழ். பல்கலைக்கழக பொருளியற்றுறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவநாதனும் இந்நிகழ்வில் உரை நிகழ்த்தினார். (ஒ-8)

### மாதாந்த கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஓக.21

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் மாதாந்தக் கலந்துரையாடலில் நாளை காலை 9 மணிக்கு 'இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் கடந்த காலமும் நிகழ்காலமும் ஓர் அரசியல் கண்ணோட்டம்' என்ற தலைப்பில் திருநெல்வேலிச் சந்திக்கு அருகில் அமைந்துள்ள இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-10)

# சந்நிதித் தேரின் வடம்பிடித்து எம் வல்வினை போக்குவோம்

இலங்கையில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க திருத்தலங்களில் தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயமும் ஒன்றாகும். ஆலய கருவறையில் மூலமூர்த்தியாக முருகப் பெருமான் கூரிய வேலாக உருவெடுத்து அங்கு உறைந்து அருளசொரிந்து வருகிறார்.

இப்பதியில் உறையும் முருகப் பெருமானை அன்னதானக் கந்தன், ஆற்றங்கரையான், கல்லோடைக் கந்தன், சந்நிதி முருகன், ஈழத்துத் திருச செந்தூரான், சின்னக் கதிர்காமத்தான என பல பெயர்களால் போற்றிப் பணிகின்றனர்.

சந்நிதி ஆலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மகிமைகள் நிறைந்தது.

இந்தப் பெருமான் திருச் செந்தூரிலிருந்து வீரவாகுதேவரை சூரனிடம் மகேந்திர புரிக்கு தூதராக அனுப்பியவேளை, வீரவாகுதேவர் இலங்கையில் வடக்கே அமைந்துள்ள வல்லிநதிக்கரையில் கால் வைத்துச் சென்றார். அந்த இடமே ஆறு கல்லோடைப்பகுதியாகும்.

அவர் சூரனிடம் சென்று திரும்பியவேளை சந்திக்காலமாகியது. எனவே, கந்தப்பெருமானுக்கு அவர் கல்லோடைப் பகுதியில் சந்திக் காலப் பூசை வழிபாட்டினை செய்தார். இக் கல்லோடையில் கந்தனை நினைந்து வழிபட்டதால் கல்லோடைக் கந்தன் எனப் பெயர் பெற்றது. கல்லோடையில் சந்திக் கால பூசை செய்தமையால் சந்நிதி தலமாகியது.

ஆலயத்தின் மேற்குப் புறத்தில் பாயும் வல்லி நதியாறு கடலுடன் சங்கமிக்கின்றது. இந்நதியின் தொடுவாயிலை தொண்டைமான் என்னும் அரசன் வெட்டிக் கடலுடன் சங்கமிக்க விட்டதால் அது பெரிய ஆறாக மாறியது. அதனால் அது தொண்டமானாறு என அழைக்கப்பட்டது.

19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இக் கிராமத்தைச் சேர்ந்த முருகபக்தரான மருதர் கதிர்காமர் என்பவர் நாள்தோறும் இங்கிருந்த பூவரச மரத்தடியில் கந்தனை நினைந்து பூசித்துவந்தார். முருகப் பெருமான் கதிர்காமரை ஆட்கொள்ள எண்ணி சிறுவனாகக் காட்சி கொடுத்தார்.

அச்சமயத்தில் 'கதிர்காமா! இநத இடத்தில் எனக்கு பூசைசெய' என்று முருகன் பணித்தருளினார்.

கதிர்காமர் 'அடியேன் பூசைக்கு உகந்தவன் அல்லன், பூசைமுறை யேதும் அறியேன்' என்று பதைபதைத்தார். அந்தநேரம் முருகப் பெருமான் 'கவலைப்படாதே, உனக்கு பூசை முறைகளை சொல்லித் தருகின்றேன்' எனக கூறி அவரைக் கதிர்காமம் கூட்டிச் சென்றார். அங்கே வாய்கட்டி பூசை செய்யும் மௌன பூசையைக் காண்பித்தார்.

அவ்வாறே கதிர்காமர் பூசைகளை மேற்கொண்டார்.

கொடியேற்றத்திற்கு உழுத்தம் பிட்டும், தீர்த்தமாடி வந்தபோது பயத்தம் துவையலும், இளநீரும் கந்த வேள் பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் படைக்கப்படுவது கதிர்காமருக்கு முருகப்பெருமான் அருளியபடியே ஆகும். அதன்படியே இன்றும் சந்நிதி ஆலயத்தில் பூசகர் வாயைத் துணியால் கட்டியே பூசை நடத்துகின்றார்.

பெருமைமிகு சந்நிதி முருகன் இன்று ரதமேறி எம் வல்வினை போக்க உலா வருகின்றார். நாம் இப்புவியில் நலமாகவாழ அவர் தாள் பணிந்து வடம்பிடித்து தேரிழுத்து வல்வினை போக்குவோம்.

தங்கவேல்

### செல்வச்சந்நிதி முருகன் ஆலய தேர்த்திருவிழா இன்றாகும்

#### தேரிழுப்போம் வாரீர்

வேர்பதித்து கிளைபரந்த நிழலமர்ந்த முருகன்
வேல்கொண்டு வினைதீர ஒளிபகரும் குமரன்
ஊர்வியக்க அன்னமிடும் அறிவுடைய அழகன்
ஏரிதனில் ஓடுமலை இசைமயங்கும் வேலோன்
தேர்மீது ஆவணியில் முழுமதியின் முன்னாள்
தலம்சுற்றி வருகின்ற புனிதமான பொன்னாள்
சீர்கொண்டு வடம்பிடித்து பாடிவரும் பக்தர்
சுகம்கண்டு வாழவழி தாராயோ முருகா!

அல்வையூர்
கே.ஆர்.திருத்துவராஜா


முதலாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

HAPPY




BIRTADAY

செல்வி குணசேகரன் சாருகா

78/10, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு.திருமதி குணசேகரன் விஜயலட்சுமி தம்பதிகளின்

சிரேஷ்ட புத்திரி செல்வி குணசேகரன் சாருகா

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (21-08-2002) புதன்கிழமை அவரது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா மற்றும் உறவினர்கள் அனைவரும் சீரும் சிறப்பும் பெற்றுப் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

78/10, பாரத் வீதி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (7336)

குணசேகரன் (குணா)
(அப்பா)


### அதிகாரிகளின் அசிரத்தையால்

# நல்லூர் ஆலயப் பகுதியில் வசிப்போருக்குச் சிரமம்

வலி.வடக்கு,ஓக.21

நல்லூர் ஆலயத்திற்கு அருகில் வீதித்தடைகளுக்குட்பட்ட பகுதியில் குடியிருப்பவர்கள் தமது வாகனங்களை கொண்டு செல்வதற்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்படாமையால் பல்வேறு சிரமங்களை அடைவதாகக் கூறப்படுகிறது.

நல்லூர் ஆலய உற்சவத்தையொட்டி அரச வீதி, கோயில் வீதி, பருத்தித்துறை வீதி, செட்டித்தெரு ஆகியவற்றில் வீதித் தடைகள் அமைக்கப்பட்டுள்ளன. அத்தடைகளைத் தாண்டி அனுமதிக்கப்பட்ட வாகனங்கள் மட்டுமே ஆலயத்தை நோக்கிச் செல்லமுடியும். இதனால் அப்பகுதிகளில் உள்ள நிரந்தர குடியிருப்பாளர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் உட்பட அவர்களது வாகனங்களை உட்கொண்டு செல்வதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கும் நடைமுறை வருடந்தோறும் உள்ளது. இம்முறை ஆலயத்தின் 4 சுற்று வீதிகளில் உள்ளவர்களுக்கு மட்டுமே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆலயத்தை நோக்கிச்செல்லும் வீதிகளில் வசிப்பவர்களுக்கு வாகன அனுமதி வழங்கப்படவில்லை. இதனால் அப்பகுதியில் இருப்பவர்கள் தமது வாகனங்களைக் கொண்டுசெல்ல வீதித் தடைகளில் தடை விதிக்கப்படுகிறது.

இதன் காரணமாக வீதித் தடைகளில் உள்ள தொண்டர்களுக்கும் பொதுமக்களுக்கும் வீண்பிணக்குகள் ஏற்படுகின்றன. இதனை காரணமாக வைத்து அப்பகுதிகளில் வசிக்காத சில இளைஞர்களும் அப்பகுதியில் வசிப்பதாகக் கூறி மோட்டார் சைக்கிள்களில் ஆலயச் சுற்றாடலில் பயணிப்பதாகக் கூறப்படுகிறது. யாழ். மாநகரசபை அதிகாரிகளின் திட்டமற்ற செயற்பாடுகளே இந்தக் குழப்பத்துக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது. (ஒ-86)

# நல்லூர் ஆலயச் சுற்றாடலுக்குள் அத்துமீறிச் செல்லும் வாகனங்கள்

வலி.வடக்கு,ஓக.21

நல்லூர் ஆலய உற்சவத்தையொட்டி போடப்பட்டிருக்கும் வீதித் தடைகள் ஊடாக ஆலயப்பகுதிக்கு பொலீஸ் மற்றும் இராணுவ வாகனங்கள் அத்துமீறிச் செல்வதாக தொண்டர் அமைப்புக்கள் முறையிட்டுள்ளன.

உற்சவகாலச் சிறப்புச் செயலணி ஒழுக்காற்றுப் பேரணியிடம் இது சம்பந்தமாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வாகனங்களில் உட்செல்லும் சீருடையினர் தமது வாகனங்களைத் தொடர்ந்துவரும் தென்னிலங்கைச் சுற்றுலாப்பயணிகளின் வாகனங்களையும் உட்கொண்டு செல்வதனால் ஆலயத்துக்கு வரும் பக்தர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள நேரிடுவதாகக் கூறப்படுகிறது.

வீதித்தடைகளில் பணியில் ஈடுபடும் பொலீஸார் மேற்படி வாகனங்களை உட்செல்ல அனுமதிப்பதனால், அங்கு பணியாற்றும் தொண்டர் அமைப்புகளினால் அந்த வாகனங்களை தடுத்துநிறுத்தமுடியாத நிலைமை காணப்படுகிறது.

இவ்விடயம் சம்பந்தமாக யாழ். மாநகர ஆணையாளரின் கவனத்துக்கு கொண்டுவந்து உரியவர்களுடன் தொடர்புகொண்டு இவற்றைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-86)

### ஆயுதத்துடன் நடமாட தடை விதிக்கக் கோரிக்கை

வலி.வடக்கு,ஓக.21

நல்லூர் ஆலய வீதிகளில் ஆயுதங்களுடன் சீருடையினர் நடமாடுவது தடைசெய்யப்பட வேண்டும் என்று நல்லூர் உற்சவகாலச் சிறப்புச் செயலணி ஒழுக்காற்றுப் பேரவையினர் யாழ். மாநகர சபைக்கு வேண்டுதல் விடுத்துள்ளனர்.

உற்சவ காலத்தின்போது சீருடையினர் ஆயுதங்களுடன் ஆலய வீதிகளில் நடமாடுவது அடியார்களுக்கு இடையூறாக இருப்பதனால் இதனைத் தடுத்து நிறுத்தும்படி கோரப்பட்டுள்ளது. (ஒ-86)


மணமங்கல வாழ்த்து

இன்று (21.08.2002) மணவிழாக் காணும்
பிரம்மஸ்ரீ S.குமாரசாமி சர்மா அவர்களின்
ஏக புத்திரன் கணேசராஜக் குருக்களும்
பிரம்மஸ்ரீ A.சபாரத்தின சர்மா அவர்களின்
சிரேஷ்ட புத்திரி சங்கீதாவும்
இல்லறமாகிய நல்லறத்தில் இணைந்து சீரும் சிறப்புடன் வாழ
எல்லாம்வல்ல மீசாலை வேம்பிராய் கலட்டி விநாயகர்
அருள்பாலிப்பாராக!

(7332) - மேற்படி ஆலய பரிபாலன சபை.

## கடந்த ஆட்சிக் காலத்தில்

# அலரிமாளிகை பாதாள உலகக் கோஷ்டிகளின் பதுங்கு குழி! பாதுகாப்பு அரண்!

## அமைச்சர் ராஜித நாடாளுமன்றில் குற்றச்சாட்டு

பாதாள உலகக் கோஷ்டியினரின் பதுங்கு குழியாகவும் - பாதுகாப்பு அரணாகவும் அலரிமாளிகையே விளங்கியது. முன்னைய ஆட்சியின்போது பல்வேறு அரசியல் காடைத்தனங்களுக்கு அங்கேதான் திட்டமிடப்பட்டது. பிரபல கேடி, பாதாள உலகத் தலைவன் பத்தேகம சஞ்சீவ உப பொலீஸ் கான்ஸ்டபிளாகச் சேர்வதற்காக விண்ணப்பித்த பத்திரத்தில் ஜனாதிபதி திருமதி சந்திரகா பண்டாரநாயக்காவே பாதுகாவலர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பாதாள உலக 'ரௌடி'தான் பின் ஜனாதிபதியின் பிரதம மெய்ப்பாதுகாவலர்களுள் ஒருவரானார். இவரைக் கண்டு பொலீஸ் உயர் அதிகாரிகளும் அமைச்சர்களும் கூட தலை வணங்கவேண்டிய நிலையில் இருந்தனர். ஆனால், இன்று அந்த நிலைமை இல்லை.

- இவ்வாறு காணி அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் கூறினார்.

உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு எதிராக எதிர்க்கட்சியினரால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைமீது பேசும்போதே அவர் இப்படிக் கூறினார். அமைச்சர் ராஜித சேனாரத்ன மேலும் கூறியதாவது:-

எதிர்க்கட்சியினர் இன்று அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைத்துள்ளனர். ஆனால், அது அமைச்சர் மீதான நம்பிக்கைப் பிரேரணையாகவே அமைந்துள்ளது.

கடந்த ஏழுவருட சர்வாதிகார ஆட்சியுடன் எமது ஏழுமாத ஆட்சியை ஒப்பிடும்போது குற்றவியல் சம்பவங்கள் பெருமளவில் குறைந்துள்ளன. மனிதப்படுகொலைகள் 10 வீதம்; கடத்தல் 15 வீதம்; பாலியல்வன்முறை 5 வீதம்; களவு 9 வீதம்; கொள்ளைகள் 14 வீதம்; கப்பம் பெறுதல் 6 வீதம் எனக் குறைந்துள்ளன.

அமைச்சர் ஜோன் அமரதுங்க் மேற்கொண்ட பல துணிச்சலான நடவடிக்கைகள் காரணமாகவே குற்றச் செயல்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அவர் பொதுமக்களின் பாதுகாப்பைப் பலப்படுத்தி உள்ளார் என்பது இவற்றின்மூலம் உறுதியாகின்றது.




ஆயுத கலாசாரத்தை அறிமுகப்படுத்தி பல ஆயிரம் உயிர்களைப் பலிகொண்டவர்கள் ஜே.வி.பி.யினர். குற்றுயிரும் குறை உயிருமாக மண்ணுக்குள் மனிதர்களை உயிரோடு புதைத்தவர்கள் இன்று மனைல் குவிப்பவர்களைப் பற்றிப் பேசுகின்றனர்.

நாம் சுதந்திரப் பொலீஸ் ஆணைக்குழு அமைக்க முன் வருகின்றோம். ஆனால், நீங்கள் அதை எதிர்க்கின்றீர்கள். பொலீஸார் சுதந்திரமாகச் செயற்பட்டால் தங்களுடைய குட்டு வெளிப்பட்டுவிடும் என்று ஜே.வி.பியினர் அஞ்சுகின்றனர்.

கடந்த தேர்தல் காலங்களின் போது பொ.ஐ.மு. அமைச்சர்கள் எப்படி நடந்து கொண்டார்கள். மாத்தளை எம்.பி. சாகல ரத்னாயக்காவும் அவரது ஆதரவாளர்களும் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினரால் அடித்தும் உதைத்தும் தாக்கியும் சித்திரவதை செய்யப்பட்டனர். இவர்களைச் சுட்டுத் தள்ளும்படி மங்கள சமரவீர உத்தரவிட்டார்.

கண்டி மாவட்டத்தில் என்ன நடைபெற்றது. தேர்தல் முடிந்தபின் வாகனத்தில் சென்ற பத்து முஸ்லிம் இளைஞர்கள் உடததலவின்னவில் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்காவை ஹங்குராங்கெட்டவில் வைத்து கொலை செய்யத் திட்டமிடப்பட்டது. ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினர்தான் இதனைச் செய்தனர். எனினும் அவர்களைக் கைதுசெய்த பொலஸ் அதிகாரி அரச உயர்பீடத்தால் படுமோசமான துர்வார்த்தைகளால் பேசி அச்சுறுத்தப்பட்டார்.

முன்னைய ஆட்சியின்போது பொலீஸார் ஆளும் கட்சியின் ஏவலர்காகவே செயற்பட்டனர். அரசியல் அதிகாரிகளின் உத்தரவின் பேரில் கட்சிப் பிரமுகர்களுடன் இணைந்து பெண்களின் கூந்தலை வெட்டினர். காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கினர்.

ஐ.தே.க.மேடையில் பாடினார் என்ற ஒரே காரணத்திற்காக ருக்காந்த தாக்கப்பட்டார்; அவரது மனைவி தாக்கப்பட்டார்; அவரது வீடும உடைமைகளும் சேதமாக்கப்பட்டன.

பிரபல நடிகை அனோஜா வீரசிங்கவின் வீடு தீவைத்துக் கொளுத்தப்பட்டது; அவரது உயிருக்கு அச்சுறுத்தல் விடப்பட்டது.

பத்திரிகைச் சுதந்திரம் பற்றி எதிர்கட்சியினர் பெரிதாகப் பேசுகின்றனர். அன்று 'சண்டே லீடர்' ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க, 'ராவய' ஆசிரியர் விக்டர் ஐவன் ஆகியோர் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினரால் தாக்கிச் சித்திரவதை செய்யப்பட்டனர். 'ராவய பத்திரிகை' அலுவலகம் குண்டர்களால் தீவைத்துக் கொளுத்தப்பட்டது.

பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டனர்; புகைப்படப் பிடிப்பாளர்கள் நையப்புடைக்கப்பட்டனர்; அவர்களின் புகைப்படக்கருவிகள் பறிமுதல் செய்யப்பட்டன. அப்படிப்பட்டவர்கள் இன்று பத்திரிகைச் சுதந்திரம்பற்றிப் பேசுகின்றனர்.

பொலீஸ் படைக்கு எப்படி ஆள் திரட்டினீர்கள்? பிரபல கேடிபத்தேகம சஞ்சீவ உபபொலீஸ் கான்ஸ்டபிள் பதவிக்கு விண்ணப்பித்தார்.

இவ்வாறு சாதாரண பொலீஸ் கான்ஸ்டபிளாகப் பதவியில் சேர்க்கப்பட்ட பிரபல கேடி பத்தேகம சஞ்சீவ, ஒரு வருடத்திற்குள் பொலீஸ் சார்ஜன்டாகப் பதவி உயர்த்தப்பட்டார். ஜனாதிபதியின் பிரதம மெய்ப் பாதுகாவலர்களுள் ஒருவராகவும் நியமிக்கப்பட்டார்.

இவருடைய தலைமையிலான பாதாள உலகக் கோஷ்டியினரால் தலைநகரில் பல்வேறு கொலைகள், கொள்ளைகள் நடத்தப்பட்டன; அரசியல் படுகொலைகள் செய்யப்பட்டன. பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்ட இந்தக் கோஷ்டியினர் 'அலரிமாளிகையிலேயே' ஒடி ஒளிந்துகொண்டனர். அங்கேதான் அரசியல் அராஜகங்களுக்கான திட்டங்கள் வகுக்கப்பட்டன. அந்தக் காலத்தில் அரச தலைமைப் பீடத்தின் செல்லப்பிள்ளைகளாக அவர்கள் நடமாடினர்.

அதுமட்டுமல்ல, பாதுகாப்பு அமைச்சர் என்ற அதிகாரத்தை வைத்துக் கொண்டு அரச கூட்டுத்தாபனங்களுக்குச் சொந்தமான 600இற்கும் மேற்பட்ட வாகனங்கள் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவுக்கு எடுக்கப்பட்டு கட்சிககாரர்களின் தேர்தல் பிரசார வேலைகளுக்குப் பயன்படுத்தப்பட்டன.

'சொத்தி' உபாலி என்ற மற்றொரு கேடியின் பிணைக்கு ஜனாதிபதியே பிணை நின்றுள்ளார். இப்படிப் பல்வேறு ஊழல்களும் மோசடிகளும் இடம்பெற்றுள்ளதை இவர்கள் மறுக்க முடியுமா?

நாடாளுமன்றம் ஜனாதிபதிக்குத் தேவையான நிதியை ஒதுக்குகின்றது. ஆனால், அவர் தனது கட்சிக்காக அவற்றைச் செலவிடுகின்றார்.

பிரபல சட்டமேதையும் அரசியல் வாதியுமான குமார் பொன்னம்பலம் சுட்டுக்கொல்லப்பட்டார். அது பற்றிய விசாரணைகள் மூடிமறைக்கப்பட்டுள்ளன. இப்படி முன்னைய அரசால் புதைக்கப்பட்ட விடயங்கள் பல. ஆனால், இன்று அவை மீளாய்வு செய்யப்படுகின்றன. இதனாலேயே எதிர்க்கட்சியினர் அமைச்சர் ஜோன் அமரதுங்கவைக் கண்டு அஞ்சுகின்றனர் - என சேனாரத்ன கூறினார். (ஓ)

## குமார் கொலைப் பின்னணியில் அரசியல்வாதியும், அவர் மகனும்

### விநாயகமூர்த்தி எம். பீ. தெரிவிப்பு

"பட்டப்பகலில் இடம்பெற்ற குமார் பொன்னம்பலத்தின் படுகொலையின் பின்னணியில் ஓர் அரசியல்வாதியும், அவரது மகனும் உள்ளனர்."

- இவ்வாறு தெரிவித்தார் தமிழ்க் கூட்டமைப்பு எம்.பியான அ.விநாயகமூர்த்தி. அமைச்சர் ஜோன் அமரதுங்காவுக்கு எதிராக எதிர்க்கட்சியினர் கொண்டுவந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையின்மீது பேசும்போது அவர் மேலும் கூறியதாவது:-

குமார் பொன்னம்பலத்தின் படுகொலையின் பின்னணியில் ஒரு பிரபல அரசியல்வாதியும் அவரது மகனும் இருக்கின்றனர். பட்டப்பகலில் நடைபெற்ற இப்படுகொலை தொடர்பான விசாரணை அப்படியே புதைக்கப்பட்டுவிட்டது.

அதேபோன்று முன்னைய ஆட்சியின்போது பல்வேறு அரசியல் காடைத்தனங்களும் அராஜகச் செயல்களும் இடம்பெற்றன. சட்டமும் ஒழுங்கும் அமைச்சர்களினதும் அரசியல்வாதிகளினதும் பாதுகாப்புக்காகவே செயற்படுத்தப்பட்டன.

நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவரவேண்டும் என்றால், முன்னாள் பாதுகாப்பு அமைச்சருக்கும் ஏனைய அமைச்சர்களுக்கும் எதிராகவே அதனைக் கொண்டுவந்திருக்கவேண்டும்.

தனிப்பட்ட ஒரு மனிதர்மீது சேறுபூசவேண்டும் என்ற நோக்கத்துடன் எதிர்க்கட்சியினரால், அமைச்சர் ஜோன் அமரதுங்காவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ளது' என்பது இப்போது தெரியவருகின்றது எனவே, நாம் இந்த ஆதாரமற்ற பிரேரணையை எதிர்க்கின்றோம்- என விநாயகமூர்த்தி எம்.பி.கூறினார்.

இ.தொ.கா.வின் இரா.யோகராஜன் எம்.பி. நம்பிக்கையில்லாப் பிரேரணையின்மீது பேசும்போது கூறியதாவது:-

"முன்பு தமிழர்கள் தைரியமாக வீதியில் செல்லமுடியாது. முப்படையினராலும் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். சோதனைச் சாவடிகளில் துன்புறுத்தப்பட்டனர்.

"இன்று அந்த நிலை இல்லை. நாட்டில் சமாதானம் மலர்ந்துள்ளது. அமைதி ஏற்பட்டுள்ளது. நள்ளிரவிலும் காலிமுகத்திடலில் மக்கள் கூட்டம் நிறைந்துள்ளனர்; திரைப்பட மாளிகையிலும் நிறைந்துள்ளனர். சுதந்திரமாக நடமாடமுடிகின்றது.

"முன்பு பாதுகாப்பு அமைச்சின் கீழ் இருந்த பொலீஸ் திணைக்களம் இப்போது தனி ஓர் அமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதன் அமைச்சராக ஜோன் அமரதுங்க சிறப்பாகக் கடமையாற்றுகின்றார்.

"பொலீஸ் திணைக்களத்தில் தகுதியுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றது. பொலீஸ்மா அதிபர் விடுமுறையில் இருக்கும்போது பிரதிப் பொலீஸ்மா அதிபர் ஆனந்த ராஜா பதில் பொலீஸ்மா அதிபராக நியமிக்கப்படுகின்றார். இனப்பாகுபாடு காட்டப்படவில்லை. இது தமிழ்மக்களுக்கு இந்த அரசின் மீது நம்பிக்கையை அதிகரிக்கச் செய்துள்ளது. எதிர்க்கட்சியினரால் தனிப்பட்ட முறையில் எந்தவிதமான ஆதாரங்களும் இன்றிக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையை நாம் வன்மையாக எதிர்க்கின்றோம்" - என யோகராஜன் எம்.பி.கூறினார்.

நாடாளுமன்றத்தில் நாம் செய்ய வேண்டிய பல்வேறு கடமைகள் தேங்கிக் கிடக்கின்றன. இப்படியான ஒரு நிலையில் அவசியமற்ற முறையில் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவந்து காலத்தையும், நேரத்தையும் எதிர்க்கட்சிகள் வீணடிக்கின்றன. இது வேதனைக்குரியது. (ஓ)

## உள்துறை அமைச்சரின்மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை

கொழும்பு,ஒக.21

உள்துறை அமைச்சர் ஜோன்.அமரதுங்கவுக்கு எதிரான எதிர்க்கட்சிகளின் நம்பிக்கையில்லாப் பிரேரணை நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. நம்பிக்கையில்லாப் பிரேரணையை பொஜ முன்னணி உறுப்பினரான மங்கள சமரவீர சபையில் சமர்ப்பித்து விவாதத்தை ஆரம்பித்து வைதார்.

எதிர்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, ஜே.வி.பி. செயலாளர் விமல் வீரவன்ஸ, மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தன உட்பட 23 எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பிரேரணையில் கையெழுத்திட்டிருந்தனர்.

பொ.ஐ.மு. உறுப்பினர் நிமால் சிறிபால டி சில்வா பிரேரணையை வழிமொழிந்து பேசினார்.

மங்கள சமரவீர தனது உரையில கூறியதாவது:-

ஐக்கியதேசிய முன்னணி ஆட்சிக்கு வந்து 8 மாதங்களில் நாடெங்கிலும் கொலைகள், களவுகள், கொள்ளைகள், கப்பம் அறவிடுதல் உட்பட பல்வேறு குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளன. பொதுமக்கள் அச்சத்திற்கும் பீதிக்கும் மத்தியில் வாழ்கின்றனர். உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் அமைச்சர் ஜோன் அமரதுங்க பொதுமக்களின் அடிப்படை உரிமைகளையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தத் தவறிவிட்டார்.

தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து, அரசியல் எதிரிகளை அடக்கி ஒடுக்கவும், சித்திரவதை செய்யவும் பொலீஸ் திணைக்களத்தைப் பயன்படுத்தி வருகின்றார். சிவில் சட்டத்தையும் மீறியுள்ளார்.

நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டிய அமைச்சர், பாதுகாப்புச் சேவையின் இரகசிய நடவடிக்கைகளை வெளிப்படுத்தி நாட்டின் பாதுகாப்பிற்கு ஆபத்தை ஏற்படுத்தியுள்ளார். - என்றார் அவர். (ம)

## குறுக்கீடுசெய்து சபையைக் குழப்பும் எம்.பிக்களுக்கு சபாநாயகர் சூடு!

நாடாளுமன்றத்தில் ஒருவர் எழுந்து பேசிக்கொண்டிருக்கும் போது குறுக்கீடுசெய்து சபை நடவடிக்கைகளைக் குழப்பும் எம்பிக்களுக்கு சூடு கொடுத்தார் சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா.

"இந்த நாடாளுமன்றத்தில் எத்தனை சபாநாயகர்கள் இருக்கின்றனர் என்று தெரியவில்லை. நான் எனது கடமையைச் செய்ய வழிவிடுங்கள். ஓர் உறுப்பினர் பேசும்போது அதைக் கவனமாகச் செவிமடுக்கும் சக்தி இல்லாதவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கத் தகுதியற்றவர்கள் என்றே நான் கருதுகின்றேன்."

- இவ்வாறு சபாநாயகர் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் எம்பிக்களைக் கடுமையாக எச்சரித்தார்.

நேற்றுமுன்தினம் காலை10 மணிக்கு சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தலைமையில் சபை கூடியது. வழமை போல கேள்விகளுக்கு விடைகள் அளிக்கப்பட்டன.

தொடர்ந்து எதிர்க்கட்சியினால் சமர்ப்பிக்கப்பட்ட - உள்துறை விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்காவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினரான மங்கள சமரவீர முன்மொழிந்தார். அவரது உரைக்கு 45 நிமிடங்கள் வழங்கப்பட்டபோதும் அவர் பிரேரணையை முன்மொழிந்து விட்டு தனது சகாவான நிமல் சிறிபால டி சில்வாவுக்கு பேசச் சந்தர்ப்பம் அளித்தார்.

நிமால் சிறிபால டி சில்வா பிரேரணையை வழிமொழிந்து பேச ஆரம்பித்ததுமுதல் சபையின் இருபக்கங்களிலும் இருந்து பல குரல்கள் எழுந்தன. நிமால் என்ன பேசுகிறார் என்பதே புரியவில்லை. அவருடைய பேச்சை கூச்சல்கள் மூழ்கடித்துவிட்டன.

சபையை அமைதிப்படுத்த சபாநாயகர் சிரமப்பட்டார்.

விவாதத்தை ஆரம்பித்துப் பேசிய நிமால் சிறிபால டி சில்வா 'பொலீஸார் பாரபட்சமாக நடந்துகொள்வதாகவும், தமது ஆதரவாளர்கள் கொலை செய்யப்பட்டதாகவும், பத்திரிகைச் சுதந்திரம் பறிபோய்விட்டதாகவும் - குற்றம் சுமத்தினார். இவ்வேளையிலேயே ஆளுங்கட்சி தரப்பில் இருந்து பல்வேறு ஆட்சேபனைகள் எழுப்பப்பட்டன. உடனே சபாநாயகர் குறுக்கிட்டு ஏதாவது ஒழுங்குப் பிரச்சினை என்றால் அதை ஒருவர் எழுந்து சொல்லலாம் அதை விட்டுவிட்டு எல்லோரும கூச்சல் போட்டால் உறுப்பினர்கள் எப்படிப் பேசமுடியும்?

உங்களுடைய தரப்பில் ஒருவர் பேசும்போது இப்படி இடையூறு விளைவித்தால் என்ன செய்வது? சபையின நடைமுறைகளை எல்லோரும் கடைப்பிடிக்கவேண்டும். உறுப்பினர்கள் அனைவருக்கும் இங்கே பேசும் உரிமை உண்டு. அதேபோன்று ஆளும் தரப்பில் அமைச்சர்களும் உறுப்பினர்களும் பதில்சொல்ல முடியும். ஒவ்வொருவரும் சபையின் கௌரவத்தைப் பாதுகாக்க ஒத்துழைக்கவேண்டும்- எனக் கண்டிப்பான முறையில் எச்சரித்தார். (ம)




அமரர் வீ.எம்.ஜெறாட்டின் ஓராண்டு நினைவஞ்சலி நிகழ்வு குரு நகர் புனித றோக்ஸ் யோகம் கலையரங்கில் இடம்பெற்றது.

அந்நிகழ்வில் யாழ்.திருமறைக்கலாமன்ற இயக்குநர் அருட்திரு.மரிய சேவியர் அடிகள் நினைவுரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம்.

சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலய அதிபர் எஸ்.எஸ்.தங்கராஜா, யாழ். வெகுஜன அமைப்புத் தலைவர் சொ.சு. சிறில், யாழ்.சென். றோக்ஸ் வான்மதி கலாலயத் தலைவர் வீ.எம்.இராஜேந்திரம் ஆகியோரும் உள்ளனர். (ஒ-51)

## கடல்வள ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஒக.21

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தவு, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் கடல்வள பாடத்துக்கான ஆசிரியர்களாக நியமனம் பெற்றவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

நியமனம் பெற்றவர்கள் அனைவரையும் தேசிய கல்வி நிறுவகத்தால் வழங்கப்பட்ட பாடவிதானத்துடன் இக்கலந்துரையாடலுக்கு வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இக்கலந்துரையாடலுக்கு யாழ்பல்கலைக்கழக மீன்பிடியியல் டிப்ளோமா கற்கை நெறியில் சித்தியடைந்த முதலாம், இரண்டாம் அணி மாணவர்களில் இதுவரை ஆசிரிய நியமனம் கிடைக்காதவர்களையும் வருகைதருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ஒ-10)

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ்.மாவட்டம்
முக்கிய கலந்துரையாடல்

இடம்: நாமகள் வித்தியாலயம், பொற்பதி றோட், கொக்குவில்.
காலம்: 23.08.2002 வெள்ளி பி.ப. 3.00 மணி.

நல்லூர், யாழ்ப்பாணத்திற்கு உட்பட்ட அனைத்து தனியார் கல்வி நிறுவன நிர்வாகிகளுடன் யாழ்.மாவட்ட அரசியல் துறையினர் கலந்துரையாடவிருப்பதால் த.க.நி.நிர்வாகிகளை தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

பொதுச் செயலாளர்,
த.க.நி. ஒன்றியம்,
யாழ்.மாவட்டம்.
(7328)

மினிவான் பாடசாலை சேவை

மேற்குறிப்பிட்ட சேவை செய்யும் வான் சேவையாளர் அராலி மத்தி, வட்டுக்கோட்டையில் இருந்து ஒரு மாணவனை யாழ்ப்பாணம் பொஸ்கோ (Bosco) பள்ளிக்கூடத்திற்கு அழைத்துப் போய் திரும்பவும் கொண்டுவந்துவிட முடியுமானால் உடன் தொடர்புகொள்ளவும்.

விளம்பர இல. 1609,
C/o உதயன் பணிமனை,
யாழ்ப்பாணம்.
(7329)

ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்கம்
ஊர்காவற்றுறை
பார ஊர்தி (லொறி) சாரதி விண்ணப்பம்

எமது சங்க பார ஊர்தி (லொறி) செலுத்துவதற்கு சாரதிகள் தேவையாக உள்ளனர். கீழே தரப்பட்ட தகைமை உடையோர் நேரில் தொடர்புகொள்ளவும்.

1. சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்.
2. 45 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.
3. ஐந்து வருடத்திற்குக் குறையாத அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். கொழும்புக்குச் சென்று வந்த அனுபவமும், தற்பொழுது சென்று வரக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.
4. முன்னர் சேவையாற்றிய இடத்தில் இருந்து நற்சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
5. சம்பளம் நேரில் பேசித் தீர்மானித்துக்கொள்ளலாம்.
6. 5ஆம் ஆண்டிற்குக் குறையாத கல்வித் தகைமை பெற்றிருத்தல் வேண்டும்.
7. சங்க எல்லைப்பரப்பில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

20-08-2002 (C/23241) -பொது முகாமையாளர்.

விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள அச்சுக்கூடம் விற்பனைக்கு உண்டு.

விலை: ரூபா2லட்சம்

தொடர்பு:
திரு-தங்கராசா,
வேளாதோப்பு, கல்வியங்காடு.
(7318)

தவறிவிட்டது

முக்கிய ஆவணங்களும் காசோலைப் புத்தகங்களும் அடங்கிய கறுப்பு நிற காரியாலய பாக் (Office Bag) சிறுப்பிட்டிக்கும் நல்லூர் கைலாய பிள்ளையார் கோயிலடிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

வே.பரிமேலழகபிள்ளை
ஆசிரிய ஆலோசகர்,
யாழ்.கல்வி வலயப் பணிமனை,
முத்திரைச்சந்தை, நல்லூர்.
(7325)

யாழ்.மாவட்ட
தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ.து)
ஆண்டுப் பொதுக்கூட்டமும்
புதிய நிர்வாகத் தெரிவும் - 2002

எதிர்வரும் 25.08.2002 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த ஆண்டுப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் தவிர்க்கமுடியாத காரணத்தினால், மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது என்பதனைச் சகல அங்கத்தவர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

215, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். (7322)
இ.அரிகரன்
கௌரவ செயலாளர்.

## 10 ஆம் ஆண்டில் நீங்கா நினைவு



# அமரர் இராசையா நவரட்ணம்

(ஆசிரியர், மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலக் கல்லூரி)
திதி:21.08.2002

ஆண்டுகள் பத்தானாலும்
ஆறாது அப்பா உம் நினைவு.

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கும்:

புலவர் வீதி,
நவாலி வடக்கு,
மானிப்பாய்.

மனைவி:- இந்திராணி,
பிள்ளைகள்:- நரேந்திரன், இந்துஷா.
(7310)

## மரண அறிவித்தல்

### திருமதி இராசம்மா நடராஜா

(இளைப்பாறிய ஆசிரியை)

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா நடராஜா நேற்று (20.08.2002) செவ்வாய்க்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா நடராஜா (மின்முகாமி) அவர்களின் அன்பு மனைவியும், நாகரஞ்சினியின் அன்புத்தாயாரும், வே. ஞானோதரன் (முகாமையாளர் - இலங்கை வங்கி, வவுனியா) அவர்களின் அன்பு மாமியும், றஜீவ் (London), அபிரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற அன்னம்மா, அருளம்பலம் மற்றும் செல்லம்மா இரத்தினம் (இளைப்பாறிய ஆசிரியை), நடராஜா (இரத்தினம்), காலஞ்சென்ற தியாகராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2002) புதன்கிழமை மாலை 5 மணிக்கு வவுனியா இலங்கை வங்கி முகாமையாளர் விடுதியில் நடைபெற்று, பூதவுடல் வவுனியா இறம்பைக்குளம் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: (7324)
இலங்கை வங்கி, வவுனியா. வே.ஞானோதரன் (முகாமையாளர்).

ஓம்
அரி ஓம் நமோ நாராயணா




யாழ்.கோப்பாய் வடக்கில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு
ஸ்ரீ சக்கராழ்வார் ஆலயத்தின் வருடாந்த
மஹோற்சவ விஞ்ஞாபனம்

உற்சவகால விவரங்கள்

21.08.2002 (ஆவணி 5ஆம் நாள்) புதன்கிழமை - கொடியேற்றம்
காலைப் பூஜை 9.30 மணிக்கு ஆரம்பமாகி 10.30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை இடம்பெற்று 12.00 மணிக்கு கொடியேற்ற வைபவம் நடைபெறும்.

27.08.2002 (ஆவணி 11ஆம் நாள்) செவ்வாய்க்கிழமை - ஈஸ்வரிமார் திருநாள்
மாலைப் பூஜை 5.00 மணிக்கு ஆரம்பமாகி ஈஸ்வரிமார் தீபம் ஏற்றல் நடைபெறும்.

28.08.2002 (ஆவணி 12ஆம் நாள்) புதன்கிழமை - வேட்டைத் திருநாள்
மாலைப் பூஜை 5.00 மணிக்கு ஆரம்பமாகி வீதிவலம் வந்து எம் பெருமான் வேட்டையாடுவார்.

29.08.2002 (ஆவணி 13ஆம் நாள்) வியாழக்கிழமை - சப்பரத் திருநாள்
மாலைப் பூஜை 5.00 மணிக்கு ஆரம்பமாகி முத்துச் சப்பரத்தில் எம்பெருமான் வீதிவலம் வந்து அருள்பாலிப்பார்.

30.08.2002 (ஆவணி 14ஆம் நாள்) வெள்ளிக்கிழமை - உறியடி உற்சவம்
மாலைப் பூஜை 5.00 மணிக்கு ஆரம்பமாகி வசந்தமண்டப பூஜை 5.30 மணிக்கு நடைபெற்று சீனடி சிலம்படி விளையாட்டுக்கள் நடைபெற்று உறியடி உற்சவம் மிக சிறப்பாக நடைபெறும்.

31.08.2002 (ஆவணி 15ஆம் நாள்) சனிக்கிழமை - தீர்த்த, கொடியிறக்கத் திருநாள்
காலைப் பூஜை 9.30 மணிக்கும் 10.00 மணிக்கு வசந்த மண்டபபூஜை நடைபெற்று 12.00 மணியளவில் தீர்த்தம், கொடியிறக்கம் நடைபெறும்.
மாலைப் பூஜை பாவிளக்கு இடுதல், திருவூஞ்சல் இடம்பெறும்.

01.09.2002 (ஆவணி 16ஆம் நாள்) ஞாயிற்றுக்கிழமை - ஆஞ்சநேயர் பொங்கல்
காலை 10.00 மணிக்கு ஆஞ்சநேயருக்கு பொங்கல், விசேட பூஜைகள் நடைபெறும்.

பகல் நேரப் பூஜை தினந்தோறும் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி 10.00 மணிக்கு நாகஸ்தம்ப அபிஷேகம், பூஜை நடைபெற்று, 10.30 மணிக்கு வசந்த மண்டப பூஜையைத் தொடர்ந்து எம்பெருமான் உள்வீதி வலம் வருவார். மாலைநேரப் பூஜை தினந்தோறும் 5.00 மணிக்கு ஆரம்பமாகி 5.30 மணிக்கு வசந்த மண்டப பூஜை நடைபெற்று எம்பெருமான் வெளிவீதி வலம் வந்து அருள்புரிவார்.

11 நாள்களும் அன்னதானம் நடைபெறும்

குறிப்பு: மெய்யன்பர்கள் பால், தயிர், இளநீர், புஷ்பம், துளசி, பூமாலை போன்றவற்றைக் கொடுத்துதவுமாறு வண்ணம் ஸ்ரீமத் நாராயணனின் பெயரில் வேண்டுகின்றோம்.

ஸ்ரீமத் நாராயண பக்தர்கள் அனைவரும் வந்து எம்பெருமான் திருவருளை வேண்டித் தரிசித்து பிறவிப் பணனை நுகர்வீர்களாக!

ஸ்ரீமத் நாராயண தொண்டர்கள் (ஸ்ரீ சக்கராழ்வார் தேவஸ்தானம் கோப்பாய் வடக்கு)

விழா சிறப்புற வாழ்த்துவோர்:
துயா நகைப் பூங்கா
213c, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(7323)

# வைத்தியர் வேலைநிறுத்தம்; சிகிச்சைகள் பெரும் பாதிப்பு!

திருகோணமலை,ஓக.21

வடக்கு-கிழக்கு மாகாண அரச வைத்தியசாலைகளில் வைத்திய அதிகாரிகள் நேற்று ஒருநாள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் வைத்தியசாலைப் பணிகள் ஸ்தம்பிதம் அடைந்தன.

திருகோணமலைப் பொது வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவுகள் தவிர்ந்த ஏனைய பிரிவுகள் இயங்கவில்லை. வெளிநோயாளர் பிரிவுக்குச் சிகிச்சைபெற வந்த நோயாளர்கள் திரும்பிச் சென்றதைக் காணக்கூடியதாக இருந்தது. வைத்தியசாலை வெறிச்சோடிப் போய் இருந்தது.

தமது வேலைநிறுத்தப் போராட்டம் குறித்து முற்கூட்டியே திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான திமர் தௌபீக், இரா.சம்பந்தன் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டதாக திருமலை மாவட்ட அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்திய கலாநிதி எஸ்.சுதாகரன் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கை வதிவிடமாகக் கொள்ளாத வைத்தியர்களுக்கு வழங்கும் விசேட ஆபத்துக் கொடுப்பனவு வடக்கு-கிழக்கை வதிவிடமாகக் கொண்ட வைத்தியர்களுக்கும் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே இந்த வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது.

யாழ். போதனா வைத்தியசாலையிலும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இந்த வேலைநிறுத்தம் நடத்தப்பட்டது. எனினும் சிகிச்சைப்பணிகள் பெருமளவில் பாதிக்கப்படவில்லை. (ம)

## மாநகரசபை எல்லைப் பகுதிக்குள் வீதிகளைத் திருத்த ரூ.20லட்சம் நிதி

### புனர்வாழ்வு அமைச்சு வழங்கியது

யாழ்ப்பாணம்,ஓக.21

யாழ்நகர வீதிகளைப் புனரமைக்க முதற்கட்டமாக 20 லட்சம் ரூபாவை புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சு வழங்கியுள்ளதாக யாழ். மாநகர மேயர் செல்லன் கந்தையன் தெரிவித்தார்.

மாநகர எல்லைக்குள் மிகவும் மோசமாகச் சேதமடைந்த நிலையில் உள்ள வீதிகளைப் புனரமைக்க உதவுமாறு விடுத்த கோரிக்கையை அடுத்து இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் சொன்னார்.

இந்த நிதியுதவி மூலம் வீதித் திருத்த வேலைகளை உடன் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.(ம-3)

## நாடாளுமன்றக் கலைப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைய செய்தி ஒன்றை அவர் சபாநாயகருக்கு அனுப்பி வைத்திருந்தார்.

அந்தச் செய்தியை சபாநாயகர் நாடாளுமன்றத்தில் வாசித்தார்.

அதிலேயே நாடாளுமன்றைக் கலைக்கமாட்டேன் என்று ஜனாதிபதி உறுதியளித்திருக்கின்றார்.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"இனப்பிரச்சினைக்கு சமாதான முறையில் நியாயமானதும் நிலைத்திருக்கக் கூடியதுமான தீர்வொன்றைக் காணும் முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கும் தற்போதைய சூழ்நிலையில் நாடாளுமன்றத்தைக் கலைப்பது எதிர்பார்க்கமுடியாத பாதக விளைவுகளை ஏற்படுத்தும்.

"பொதுத்தேர்தல் ஒன்றில் தெரிவு செய்யப்படும் எம்.பி. அந்த நாடாளுமன்றம் ஆறு ஆண்டு காலம் நிலைத்திருக்குமென எதிர்பார்க்கின்றார். அவரைத் தெரிவுசெய்த நாட்டு மக்களும் அப்படியே எதிர்பார்க்கும் உரித்துடையவர்கள்.

"நாம் சேவையாற்றுவதற்கு உடன்பட்டுள்ள முழுத்தேசத்தினதும் அதன் மக்களினதும் நியாயமான எதிர்பார்ப்பு இது.

"அதிக சிரமங்களையும் செலவையும் ஏற்படுத்துகின்ற பிரசாரங்களின் பின்னரே எம்.பிக்கள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

"இந்தத் தேர்தல் பிரசாரக் காலத்தில் அரச இயந்திரம் பெரும் சிரமங்களுக்கு[illegible]ட்படுகின்றது.

"எமது நாட்டில் தேர்தல்களுக்கு முன்பும் தேர்தல்களுக்குப் பின்பும் பெருமளவு வன்முறைகள் இடம்பெறுவதே கடந்தகால் நிகழ்வுகளாகும். அது வேதனைக்குரியது. 75 ஆண்டுகளாக சர்வஜன வாக்குரிமையை அனுபவித்த மக்களுக்கு இது ஒரு பொருட்டல்ல.

"பொதுத் தேர்தல் ஒன்றை நடத்த சுமார் நூறு கோடி ரூபா செலவாகின்றது. இது எமது நாட்டைப் பொறுத்தவரை தாங்கமுடியாத சுமையாகும்.

"கடந்த பல ஆண்டுகளாக இடம்பெற்ற தேர்தல் பிரசாரங்கள் மிகவும் எரிச்சலூட்டுவனவாகவும் கசப்பானவையாகவும் அமைந்தன. அதன்மூலம் சமுதாயம் பிளவுபட்டது.

"இன்னுமொரு தேர்தல் அறிவிக்கப்படுமானால் அது எமது வர்த்தகத் துறைக்கும் அரசுடன் பரிமாற்றங்களில் ஈடுபட விரும்பும் வெளிநாட்டு அரசுகள் மற்றும் வர்த்தக முயற்சிகள் தொடர்பான விடயங்களுக்கும் மிகவும் சிக்கலான - உறுதியற்ற - நிலைமையைத் தோற்றுவிக்கும்.

"உரிய காலத்துக்கு முன்னர் நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கான முடிவு மிகவும் அவதானமாகவும், பொறுப்புணர்வுடனும், முழு நாட்டு மக்களினதும் விருப்பு - வெறுப்புக்களைக் கருத்தில் கொண்டுமே எடுக்கப்பட வேண்டும்.

"இவ்வாறு அரசமைப்புச் சார்ந்த கடப்பாடுகளையும் உடன்பாடுகளையும் நான் நன்கு உணர்ந்துள்ளேன்.

"17 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் கீழ் உருவாக்கப்பட வேண்டிய ஆணைக்குழுக்கள் இன்னும் ஸ்தாபிக்கப்படவில்லை.

"பொதுத்தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு முன்னர் தேசிய பொலீஸ் ஆணைக்குழு, தேர்தல் ஆணைக்குழு ஆகியவற்றுக்குச் செயல்திறனுடன் அவை தமது பணிகளை மேற்கொள்ள வாய்ப்பளிக்கப்பட வேண்டும்.

"தற்போதைய சூழ்நிலையில் பல்லின, பலமத சமூகத்தின் மத்தியில் வாழும் எமது மக்கள் அனைவரினதும் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றக் கூடியதான - நியாயமான - நிலைத்திருக்கக்கூடிய - தீர்வொன்றின் மூலம் நாட்டின் இனப்பிரச்சினையை சமாதான வழியில் முடிவுக்குக் கொண்டுவரும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரசாரத்தில் அனைத்து அரசியல் கட்சிகளினதும் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது.

"இந்தச் சந்தர்ப்பத்தில் நாடாளுமன்றத்தைக் கலைப்பதால் சமாதான முன்னெடுப்புக்களுக்கும் அதன்மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற பயனுறுதி வாய்ந்த விளைவுகளுக்கும், எதிர்பார்க்கமுடியாத - முன்கூட்டியே எதிர்வு கூற முடியாத - பாதக விளைவுகள் ஏற்படலாம்.

"இவை யாவற்றையும் விட, தேசிய அளவிலான தேர்தல்களின் கொந்தளிப்பான நிலைகளில் இருந்து எமது நாட்டு மக்களுக்கு நிவாரணம் ஒன்றைப் பெற்றுக்கொடுப்பது அவர்களின தேவையாக இருக்கும் என நான் நம்புகின்றேன்.

"ஏற்கனவே 3 ஆண்டு காலத்தினுள் ஜனாதிபதித் தேர்தல் ஒன்றுக்கும் இரு பொதுத் தேர்தல்களுக்கும் நாம் முகம் கொடுத்துள்ளோம்.

"பொதுவாக நாடாளுமன்ற அரச முறைமையின் கீழ் ஆட்சியில் உள்ள அரசு -

* நாடாளுமன்றதில் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றின்மூலம் தோற்கடிக்கப் பட்டால் -
* அல்லது வரவு - செலவுத் திட்டம் போன்ற முக்கிய நிதிச் சட்டம் ஒன்றில் தோல்வியடைந்தால் -
* அல்லது நடப்பு நாடாளுமன்றத்தின் உறுப்பினர்களால் புதிய அரசு ஒன்றை நிறுவுவது சாத்தியப்படாத ஒரு சந்தர்ப்பத்தில் -

மட்டுமே பொதுவாக உரிய காலத்திற்கு முன்னர் நாடாளுமன்றம் கலைக்கப்படுவது வழமை.

"கடந்த டிசெம்பர் 5 ஆம் திகதி இடம்பெற்ற பொதுத் தேர்தலின் பின்னர் தற்போது நியமிக்கப்பட்டுள்ள பிரதமரும் அவரது அமைச்சரவையும் நாடாளுமன்ற நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான பெரும்பான்மையைப் பெற்றுள்ளதாகத் தெரிகிறது.

"மேற்சொல்லப்பட்ட சகல விடயங்களையும், அதன் சூழ்நிலைகளையும் கருத்தில் கொண்டு - நாடாளுமன்றத்தின் பெரும்பான்மையின் நம்பிக்கையை வென்றுள்ள தற்போதைய கட்சிக்கு அந்தப் பெரும்பான்மை இல்லாமல் செல்லும் பட்சத்தில் -

"அத்துடன் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்களால் மாற்று அரசு ஒன்றை நிறுவது சாத்தியப்படாத பட்சத்தில் அன்றி -

- "தற்போதைய நாடாளுமன்றைக் கலைப்பதில்லை என்பதைத் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அவர்கள் ஊடாக இலங்கை வாழ் மக்களுக்கும் -

"நாடாளுமன்றுக்குச் செய்திகளை அனுப்ப அரசமைப்பின் 32 (3) ஆம் பிரிவின் கீழ் எனக்குள்ள உரிமையைப் பயன்படுத்தித் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்."

- என்று அச்செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார் ஜனாதிபதி. (ம)


நிறைஞ்சனாஸ்
சங்கானை
ரஜனி, விஜயசாந்தி, குஷ்பு நடித்த
மன்னன்
காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (புதியநேரம்)

ராஜா யாழ்ப்பாணம்.
இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரே தின வெளியீடு
ரஜனிகாந் மனீசா கவுண்டமணி நடித்த
காட்சிகள்: 10.30 2.30, 6.00, 9.30
பல வருடங்களுக்குப் பின்னர் இரவு 9.30 மணிக் காட்சி ஆரம்பமாகிறது.

நாகம்ஸ் சுன்னாகம்
விக்ரம், ஜெயாரே, நாசர்
நடித்த
சாமுராய்
காட்சிகள்: 11.00, 3.00 (பு.நே.)


## துயர் பகிர்வதற்கு அழைப்பு

### திருமதி தவமணி வேலாயுதபிள்ளை
### திருமதி பொன்னம்மா கந்தையா

கோப்பாய், வெள்ளருவைப் பிள்ளையார் சனசமூக நிலைய முன்னாள் தலைவரும், நிலைய ஸ்தாபகரில் ஒருவரும், மக்கள் நலன்காக்கும் பிரிவின் முன்னாள் தலைவருமாகிய திரு. க.வேலாயுதபிள்ளை அவர்களின் அன்பு மனைவி திருமதி வே.தவமணியும்,மாமியாராகிய கந்தையா பொன்னம்மாவும் வவுனியாவில் (தற்காலிக வதிவிடம்) 12.08.2002 இல அகால மரணமானார்கள். அதையிட்டுத் துயருறும் குடும்பத்தினருடன் எமது குடும்பம் ஆழ்ந்த துயரத்தைப் பகிர்ந்துகொள்கிறது.

*குறிப்பு:* நாளை (22.08.2002)வியாழக்கிழமை க.வேலாயுதபிள்ளை அவர்கள் கோப்பாய் இல்லத்தில் சமுகமளிக்கவுள்ளார். அவருடன் துயர் பகிர்கின்றவர்கள் அனைவரும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*கோப்பாய் மத்தி,*
*கோப்பாய்.*
(7327)
த.யோகரத்தினம்
(சிவம்)

## 'அருள்ஒளி' சஞ்சிகையின் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,ஓக.21

தெல்லிப்பழை துர்க்கையம்மன் தேவஸ்தானத்தின் மாதாந்த வெளியீடான 'அருள்ஒளி' சஞ்சிகையின் வெளியீட்டு விழா இன்று காலை 9.30 மணிக்கு ஆலயத்தில், தேவஸ்தான தலைவி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் இடம்பெறவுள்ளது.

ஆலயத்தில் இடம்பெறும் தீர்த்த உற்சவத்தை அடுத்து இந்த வெளியீட்டு விழா நடைபெறும். (ம-3)

# மரண அறிவித்தல்கள்

## நீக்கிலாப்பிள்ளை பெர்னாண்டோ

(முன்னாள் பணியாளர், புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்)

மாதகலைப் பிறப்பிடமாகவும் 33, குருசோ வீதியை வதிவிடமாகவும் கொண்ட நீக்கிலாப்பிள்ளை பெர்னாண்டோ அவர்கள் 19-08-2002 திங்கட் கிழமை காலமாகினார்.

அன்னார் திரேசம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மேரி அஞ்சலா மற்றும் யூடாறோஸ், மேரிமாகிறட் (கனடா), சகாயராணி (றஞ்சி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற செபஸ்தியாம்பிள்ளை மற்றும் றஞ்சித் (மிருசுவில்), சதாருபன் (கனடா) ஆகியோரின் மாமனாரும், றெஜினோல்ட், சதீஸ்குமார், அஞ்சலீனா, ஆன் ஜொய்சி, நிஷாந்தன், நிஷாந்தினி, கிருஷாந்தினி, சுவர்ணா (கனடா) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (21-08-2002) புதன்கிழமை மாலை 4.00 மணியளவில் புனித மரியன்னை பேராலயத்தில் நடைபெற்று, பூதவுடல் புனித மரியாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*33, குருசோ வீதி,*
*சுண்டிக்குளி,*
*யாழ்ப்பாணம்.*
(7339)
தகவல்:
செ.றெஜினோல்ட்
(பேரன்)

## வல்லிபுரம் கணேசு

மஞ்சத்தடி தெற்கு, இணுவிலைச் சேர்ந்த வல்லிபுரம் கணேசு நேற்று (20-08-2002) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சிவஞானத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான முத்துப்பிள்ளை, செல்லம்மா, தெய்வானைப்பிள்ளை, சின்னத்துரை, சதாசிவம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் தனலட்சுமி, காலஞ்சென்ற விஜயரட்ணம் மற்றும் கிருபானந்தன் (பயில்வான்), பரமநாதன் (டென்மார்க்), சோமேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் இராசதுரை (சுவிஸ்), புஸ்பராணி, கமலாதேவி, உஷாருபி (டென்மார்க்), வசந்தாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் சுதர்ஜினி, சுரேந்திரன் (கனடா), பவாரஜனி, ஸ்ரீகாந்தன் (பிரான்ஸ்), மாறினி, இரஜீவன் (பிரான்ஸ்), சுதர்ஜன், நவாஜினி, அருணன், சுஜிதரன், நிஷாந்தன், பிரசாந்தன், தனுஷன், பிரசாந்தி, டென்மார்க்கில் வசிக்கும் அச்சுதன், சஞ்சுதன், விபீசன் மற்றும் வியாசன் ஆகியோரின் அன்புப் பேரனும் சாருஜாவின் (பிரான்ஸ்) பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21-08-2002) புதன்கிழமை பிற்பகல் 1 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மஞ்சத்தடி தெற்கு,*
*இணுவில்.*
(7342)
தகவல்:
மனைவி, பிள்ளைகள்

## திருமதி சுப்பிரமணியம் நாகம்மா

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் கச்சாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் நாகம்மா அவர்கள் நேற்று (20-08-2002) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், கந்தசாமி (அருள்நாயகி கூல்பார், நெல்லியடி), பரமேஸ்வரி, புவனேஸ்வரி (P.H.M. கச்சாய்), அருணாசலம் (அருண் புடைவை மாளிகை, கொடிகாமம்), அன்னலட்சுமி, வள்ளிநாயகி ஆகியோரின் அன்புத் தாயாரும் இராஜேஸ்வரி, கதிரவேலு, செல்லப்பா (நியூ அருள்நாயகி புத்தகசாலை, கொடிகாமம்), பவானி, காலஞ்சென்ற கனகரத்தினம், பாலசிங்கம் (சவூதி அரேபியா) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21-08-2002) புதன்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொற்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கச்சாய் தெற்கு,*
*கொடிகாமம்.*
(சி23247)
தகவல்:
சு.கந்தசாமி (மகன்),
சு.அருணாசலம் (மகன்).

## திருமதி மேரி யோசேப்பின் ஞானப்பிரகாசம்

(நல்லம்மா)

வசாவிளானைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரி யோசேப்பின் ஞானப்பிரகாசம் அவர்கள் 19.08.2002 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நீக்லஸ் ஞானப்பிரகாசத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திரு.திருமதி சூசை தம்பதியினரின் ஏகபுத்திரியும் காலஞ்சென்றவர்களான திரவியம், மோசேஸ், சவிரிமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரியும் யூடிற்றா, கொன்சேக்கா, மேரி திரேசா, அன்ரன் சாள்ஸ் (பிரான்ஸ்), மேரி சிசிலியா (பிரான்ஸ்), காலஞ்சென்ற மேரி கொலஸ்ரிக்கா மற்றும் மேரி காமலீற்றா, அன்ரன் யூலியஸ் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் இ.சூசைப்பிள்ளை (அரியகுட்டி), ஆ.சூசைப்பிள்ளை, ரவீந்திரன், றெஜினா (பிரான்ஸ்), மரியநாயகம் (பிரான்ஸ்), ஜேம்ஸ் இராயகுலேந்திரன் (சவூதி), ஜெயக்குமாரி (லண்டன்) ஆகியோரின் மாமியாரும் இராஜேஸ்கனி (முகாமைத்துவ உதவியாளர், யா/புனித மரியாள் வித்தியாலயம்), அன்ரன் போவனர்க்கேஸ் (யாழ் பல்கலைக் கழகம்), பிரபு (புனர்வாழ்வுக்கழகம்), ஜோசேப் இராஜேந்திரகுமார், நியூற்ரன் (பிரான்ஸ்), சகாயநாயகி (ஆசிரியர்), கொன்சலின் (வேதாரணியேஸ்வரா முன்பள்ளி ஆசிரியர்), மேரி ஆன்சலின், மேரி யூட்சலின், மேரி மெற்றலின், கல்யாணி, ஜெசீமா, கியூறி, மயூரி, ஜென்சனா, எடின்பரோ, றைசன், மனோ, டயான்சலின், பரிஸ்ரா, நிரோஜா, மிஷல், தேவான்சலின், நிதர்சனா, டிலக்ஷன், கிளின்ரன், ஜெனிஸ்ரன், கபில்டன், கலிஸ்ரன், டிலாணி, மெலான், யோனார்த்தன், சகாயரூபன் ஆகியோரின் பேர்த்தியும் டிலோசனாவின் பூட்டியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (21.08.2002) புதன்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, யாழ்ப்பாணம் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*137, நாவலர் வீதி,*
*ஐந்துசந்தி, யாழ்ப்பாணம்.*
(7344)
தகவல்:
இ.சூசைப்பிள்ளை
(அரியகுட்டி - மருமகன்)

# சமாதானம் ஏற்பட்ட பின்பே பொருளாதார மறுமலர்ச்சி

## கூட்டமைப்பு எம்.பி. இரா.சம்பந்தன் தெரிவிப்பு

தம்பலகாமம்,ஓக.21

சமாதானம் இல்லாத, பொருளாதாரத்தால் சீரழிந்த நாட்டை மீளக் கட்டியெழுப்பமுடியாது. முதலில் நிரந்தர சமாதானம் ஏற்படவேண்டும் . அதன் பின்பே பொருளாதார மறுமலர்ச்சி ஏற்படவேண்டும்.

- இப்படிக் கூறினார் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன்.

திருகோணமலையில் நடைபெறும் வர்த்தக கண்காட்சியில் நேற்று மாலை நடந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து உரையாற்றுகையில் அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதத்தில் பொருளாதார மறுமலர்ச்சி பற்றி யாரும் சிந்தித்தார்களா? யுத்தத்தை எவ்வாறு முன்னெடுக்கலாம் என்றுதான் அன்று சிந்திக்கப்பட்டது. இன்று யுத்தம் நின்றுவிட்டது. அதனால் பொருளாதாரம் பற்றி சிந்திக்கின்றோம்.

கடந்த 20 வருடகாலமாக நாட்டைச் சீரழித்த யுத்தம் நின்றவுடன் பொருளாதாரச் சிந்தனைகள் எழுந்துள்ளன. இந்தச் சிந்தனையில் வெற்றிபெற்று சீரழிந்த நாட்டை மீட்க வேண்டுமானால் சமாதானம் ஏற்பட வேண்டும். அந்தச் சமாதானத்திலேயே பொருளாதார மறுமலர்ச்சி தங்கியுள்ளது.

வருட ஆரம்பத்துடன் யுத்தம் ஓய்ந்தது; சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றின் உச்ச விளைச்சலாக அடுத்தமாதம் தாய்லாந்தில் அரசுப் பிரதிநிதிகளும் புலிகள் பிரதிநிதிகளும் நேரடியாகப் பேசப்போகின்றனர். இந்தப் பேச்சுக்கு சகலரும் ஒத்துழைப்பு வழங்குவதன்மூலமே நாட்டைக் கட்டி எழுப்பமுடியும்.

விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகம் செயற்பட ஆரம்பிக்கும்போது சகல பிரச்சினைகளுக்கும் தீர்வுகிட்டும். அந்த இடைக்கால நிர்வாகம் மூலம் சகல மக்களின் பிரச்சினைக்கும் நீதி நியாயமான தீர்வு காணப்படவேண்டும் - என்றார். (ம-3-144)

# வேலணையில் இன்று இலவச மருத்துவமுகாம்

யாழ்ப்பாணம்,ஓக.21

தீவக லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் கியூமெடிக்கா அமைப்பின் அனுசரணையுடன் வேலணைத் துறை கண்ணாபுரத்தில் இன்று புதன் கிழமை மாலை 3மணிக்கு இலவச மருத்துவ முகாம் இடம்பெறவுள்ளது.

இந்த மருத்துவ முகாமில் சகல விதமான நோய்களுக்கான பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு சிகிச்சை அளிக்கப்படும். டாக்டர் அருளானந்தனும் மருத்துவபீட மாணவர்களும் இணைந்து இந்த சிகிச்சைகளை வழங்குவார்கள்.

இனிவரும் ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் இத்தகைய மருத்துவ முகாம்கள் தீவகத்தின் பல பகுதிகளிலும் நடைபெறும் என்று தீவக லயன்ஸ் கழகத் தலைவர் தெரிவித்தார். (ற)

## லிப்டன் சுற்றுவட்டத்தில் ஆர்ப்பாட்டம்!

அரசின் சமாதான முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜே.வி.பியின் தொழிற்சங்கங்கள் நேற்று நண்பகல் கொழும்பு லிப்டன் சுற்று வட்டத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்றையும் பொதுக் கூட்டமொன்றையும் நடத்தின.

அகில இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் இதனை ஒழுங்கு செய்திருந்தது.

'புலிகளுக்கு நாட்டைக் காட்டிக் கொடுக்காதே', அரச நிறுவனங்களை தனியாருக்கு விற்பதை நிறுத்து, என்ற வாசகங்கள் அடங்கிய சுலோகங்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் தாங்கியிருந்தனர்.

## அமெரிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடாநாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பாக நேரில் அறிந்து கொள்ளவும் - இவர் இங்கு விஜயம் செய்தாகக் கூறப்பட்டது.

எனினும் அவர் கலந்துகொள்ளும நிகழ்ச்சிகள்தொடர்பான விவரங்கள் வெளியாகவில்லை. இவரின் விஜயம தொடர்பான ஏற்பாடுகளைக் கவனிக்க அமெரிக்க இராஜாங்க அமைச்சைச் சேர்ந்த இரு அதிகாரிகள் யாழ்ப்பாணம் வந்துள்ளனர். (ம-3-8)

## தாய்லாந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லாந்துத் தலைநகர் பாங்கொக்கில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேசமயம், சியாங் மாய் (Chiang Mai), புக்கெட் (Phuket), சியாங் றாய் (Chiang Rai), சோன்புரி (Chonburi - Pattaya) ஆகிய இடங்களும பேச்சுக்கான மையமாக பரிசீலிக்கப்படுகின்றன.

இடம் மற்றும் நிகழ்ச்சிநிரல் என்பன முடிவு செய்யப்பட்ட பின்னர் - பேச்சுக்கு முன்பதாக - ஏற்பாடுகள் திருப்தியாகவுள்ளனவா என்பதை உறுதிப்படுத்துவதற்காக சம்பந்தப்பட்ட தரப்புகள் கலந்துகொள்ளும் பூர்வாங்கக் கூட்டம் ஒன்று தாய்லாந்தில் நடைபெறும் என்று அந்நாட்டு அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன. (ம)

## ஜனாதிபதியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்துக்காட்டியிருக்கிறார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றிய அமைச்சர் திஸநாயக்க, நாடாளுமன்றத்தைக் கலைப்பதில்லை என்று ஜனாதிபதி உறுதியளித்திருந்தாலும் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் ஜனாதிபதியின் அதிகாரத்தை நீக்கும் அரசமைப்புச் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவரும் நடவடிக்கையை அரசு தொடரும் என்று சொன்னார்.

ஜேவிபி, ஸ்ரீமணி அத்துலத்முதலி, அமரர் தொண்டமான் ஆகிய தரப்பினருடன் ஜனாதிபதி முன்னர் செய்து கொண்ட ஒப்பந்தங்களுக்கு நேர்ந்த கதிபற்றியும் அமைச்சர் திஸநாயக்க சுட்டிக்காட்டினார். ஜனாதிபதியின் உறுதிமொழியைத் தான் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்றும் அவர் சொன்னார். (ம)

## பல்கலைக்கழக அனுமதி விடயமாக

# மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு எதிராக முதலாவது வழக்குத் தாக்கல்!

கொழும்பு,ஓக.21

மனித உரிமை ஆணைக்குழு கடமைசெய்யத் தவறிவிட்டது என்று குற்றஞ்சாட்டி அதன்மீது முதன் முறையாக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

மனுதாரரின் முறையீடுகள் பற்றிய விசாரணைகள் முடிவுற்று ஒன்றரை வருடங்களாகியும் மனித உரிமைகள் ஆணைக்குழு தனது சிபாரிசுகளை பல்லைக்கழக மானிய ஆணைக்குழுவிற்கு அனுப்பிவைக்கத் தவறிவிட்டது. அதனால் தனது கட்சிக்காரரின் பல்லைக்கழக அனுமதி மறுக்கப்பட்டுவிட்டதென சட்டத்தரணி வி.எஸ்.கணேசலிங்கம் நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

வவுனியாவைச் சேர்ந்த மகேசன் பவான் மனித உரிமைகள் ஆணைக் குழுவிற்கு எதிராக இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார். மேன்முறையீட்டு நீதியரசர்கள் ஷிராணி திலகவர்தன, விஜயரட்ண ஆகியோர் இம் மனுவைத் விசாரணை செய்தனர்.

1999 - 2000 ஆம் ஆண்டிற்கான வவுனியா மாவட்ட ஒதுக்கீட்டில் இருந்து பல்கலைக்கழகத்தில் பொறியியற் கல்வியைக் கற்க தான் தகுதி பெற்றிருந்தும் பிழையாகச் சமர்ப்பிக்கப்பட்ட விவரங்களின் அடிப்படையில் வேறு மூவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் மனுதாரர் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்துத் தாம் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்ததாகவும் அதனை விசாரணைசெய்த மனித உரிமைகள் ஆணைக்குழு தனது சிபாரிசினை பல்கலைக்கழக ஆணைக்குழுவிற்கு வழங்கத் தவறிவிட்டதெனவும் அவர் தனது மனுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

மனித உரிமைகள் ஆணைக் குழுச் சட்டத்தின் 14 ஆவது பிரிவின் 15(3) (C) யின் கீழ் ஆணைக்குழு தனது சிபாரிசினை பல்கலைக்கழக ஆணைக்குழுவிற்கு அனுப்பச் சட்டக் கடப்பாடு உடையதென்றும் சட்டத்தரணி மேலும் தமது வாதத்தின் போது தெரிவித்தார்.

மனித உரிமைகள் ஆணைக் குழு தனது கடமையைச் சரிவரச் செய்யத் தவறியமையைச் சுட்டிக் காட்டிய முதல் மனு இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## எம்.பிக்களுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி, எதிர்வரும் 27 ஆம் திகதி நாடு திரும்பியதும் இந்தப் பேச்சுக்கள இடம்பெறவிருக்கின்றன. இந்தச் சந்திப்பு ஜனாதிபதி மாளிகையில் இடம்பெறும் என்றும்-

இதில் கலந்துகொண்டு தமது விருப்பங்களைத் தெரிவிக்கும்படி கோரி சகல எம்.பிக்களுக்கும் கடிதம அனுப்பப்பட்டுள்ளது எனவும்- முன்னணிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (ம-3)

## தெல்லிப்பழை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நவமலர் கனகரத்தினம் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வை அடுத்து தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கக் கட்டடங்களைக் கையளிக்கும வைபவம் சங்கத்தின் தலைமையகத்தில் இடம் பெற்றது.

சங்கத்தின் தலைவர் எஸ்.சாம்ப சிவத்திடம் சரத் பொன்சேகா வைபவரீதியாக அவற்றைக் கையளித்தார். (ம-3-139)

## அரசும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துரையாடல்கள் தொடர்பாக அவர் கருத்து வெளியிடுகையில் -

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண ஒரேவழி சமாதானப் பேச்சுத்தான். அரசு அந்த முயற்சியில் ஈடுபட்டிருப்பது வரவேற்கத்தக்கது. இலங்கையில் இனப்பிரச்சினை தீர்ந்து சமாதானம் மலர்ந்து அரசியல் ஸ்திரநிலையும் பொருளாதார சுபீட்சமும் ஏற்படவேண்டும் என்பது பிரிட்டனின் எதிர்பார்ப்பாகும் - என்று கூறினார்.

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த அரசாங்கம் எடுத்தவரும் முயற்சிகளை அவர்கள் வரவேற்றுள்ளனர்.

அதேவேளை -

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சு வெற்றியளிக்கும் என பிரதமர் தூதுக் குழுவினரிடம் எடுத்துக்கூறியுள்ளார். தாய்லாந்தில் ஆரம்பிக்கவுள்ள பேச்சுத் தொடர்பாகவும் அவர் பிரிட்டிஷ் குழுவினருக்கு விளக்கிக் கூறியுள்ளார். (ம-3-12)

## ஆயுதக்குழுவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கானிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

வரதன் குழுவைச் சேர்ந்த தர்சன், குட்டிதிலக் ஆகியோர் கமலநாதனின் தலைமயிரை வெட்டியதுடன் தலையின் தோலின் ஒரு பகுதியைச சீவியதாகவும் -

கமலநாதன் மற்றும் தமிழடியான் ஆகியோர் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருவதாகவும் - அந்த முறைப்பாட்டில் அவர் தெரிவித்துள்ளார்.

தம்முடன் தொடர்பு வைத்திருப்பவர்களை இந்த வரதன் குழு எச்சரித்துவருவதாகவும் -

தமது உறுப்பினர்கள் சென்றுவரும் செல்வா நகரில் உள்ள அருளப்பா என்பவரின் தேநீர்க் கடையை நீக்கிரையாக்கியுள்ளது என்றும் -

முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3-12)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மாணிக்கம் அருளம்பலம்

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் அரியாலை, கச்சேரியடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாணிக்கம் அருளம்பலம் அவர்கள் நேற்று (20-08-2002) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - சின்னத்தங்கச்சி தம்பதிகளின் ஏக புதல்வியும், காலஞ்சென்ற அருளம்பலத்தின் அன்பு மனைவியும், புவனேஸ்வரி, தேவகி, ருக்மணி ஆகியோரின் அன்புத் தாயாரும், கந்தசாமி, மகாஞானசம்பந்தர், சண்முகராசா, திருஞானசம்பந்தர், சிவஞானம், சிறிஞானம் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஞானசேகரன், நளாயினி, இரவீந்திரன், தமயந்தி, காண்டீபன், அபிராமி, பார்த்தீபன், மகிழினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21-08-2002) புதன்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'கிருஷ்ண கோகுலம்,'*
*96, கண்டி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (7333)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி அன்னம்மா சிவக்கொழுந்தர்

மயிலிட்டி தெற்கு, கட்டுவனைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கந்தர்மடத்தைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா சிவக்கொழுந்தர் நேற்று (20.08.2002) செவ்வாய்க்கிழமை மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவக்கொழுந்தர் (ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், தியாகராஜா (Doctor, London), தவராஜா (Technical Assistant, Dubai), சிவதாசன் (Engineer, U.S.A) மற்றும் காலஞ்சென்ற குகதாசன் மற்றும் தேவராஜா (Engineer, Australia), விமலாதேவி (Colombo) ஆகியோரின் அன்புத் தாயாரும், கலைவாணி (Doctor, London), சாந்தினி, விஜயகுமாரி (U.S.A.), சத்தியபாமா, கௌரி (Australia), புவனச்சந்திரன் (Colombo) ஆகியோரின் அன்பு மாமியாரும் ரமேஸ் (London), ரம்யா (London), ரஞ்ஜித் (விஞ்ஞான பீடம், யாழ்.பல்கலைக்கழகம்), நீரஜா, லாவண்யா, தர்சிகா, நிஷான் (U.S.A.), ரெறி (U.S.A.), சிந்துஜா, சஞ்சீவன், சுபத்திரா (Colombo) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21-08-2002) புதன்கிழமை பி.ப. 2.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'கந்தகோட்டம்'*
*81, பலாலி வீதி,*
*கந்தர்மடம், யாழ்ப்பாணம்.*
*T.P. - 021-2215* (7343)

தகவல்:
திருமதி சாந்தினி தவராஜா
(மருமகள்)


வேலைக்கு ஆள் தேவை

சமையல் வேலையில் அனுபவம் உள்ளவர்கள் தேவை.

றிக்கோ ஹோட்டல்
370, ஆஸ்பத்திரி வீதி,
(7303) யாழ்ப்பாணம்.

BEACON
யாழ்நகர்
A/L 2003
Day Class
Physics
By: S.P.சந்திரபிரகாஸ்
வடமராட்சி (7312)
ஆரம்பம்: 24-08-2002 சனி
நேரம்: 3-4 (பழைய நேரம்)

விசேட புலமைப்பரிசில்

2002 A/L பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள்
யுனிவக் நிறுவனத்தினால் வழங்கப்படும்
புலமைப்பரிசிலுக்கான விண்ணப்பங்களை
24.08.2002இற்கு முன்னர் மேற்கொள்ளவும்.

UNIVAC
College of Computer Information Technology
1201, K.K.S. Road,
Narchimar Kovilady, Jaffna. (7311)
New Hary's Institute
Sithankerny.

MCS
324,பலாலிவீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராச்சந்தி அருகே, மேல்மாடியில்)
புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன
GIT JAVA V.B Flash Hardware Video Mixing BIT
DTP Software Developing


இப்பத்திரிகை நிட, உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.08.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.